

65

சக்தி

மாத வெளியீடு

★

2518

சாரத் திரள்

இடைக்கால சர்க்கார் இல்லை ...	தலையங்கம்	1
காலச்சுழல் ...	குறிப்புகள்	2
அஞ்சுவது அஞ்சு ...	சுப. நாராயணன்	6
சபலம் ...	ஸ்டீபன் ஜெரோம்ஸ்கி	9
கைபாத்த பொழைப்பு ...	கொத்தமங்கலம் சுப்பு	13
அணுக் குண்டு சாதித்தவை ...	சி. இ. எம். ஜோட்	14
சக்தி கொள்ளடா ! ...	பாரதி	17
மார்க்ஸீய பொருளாதாரம் ...	ஏ. ஹாலாஸ்யநாதன்	21
கடல் உப்பா யிருப்பதேன் ? ...	பிரான்சிஸ் மோசஸ்	26
வாழ்க்கைத் தோழன் ...	ராமகோடீஸ்வர ராவ்	29
காய்தே ஆஜம் ஜின்னு ...	அரசியல் வாதி	33
படங்கள் ...		37-44
இந்தியாவின் குரல் ...	எஸ். ராதாகிருஷ்ணன்	45
புதிய பர்மா ...	பர்மிய நண்பன்	49
வேலைக்காரர் விஷயம் ...	மகாத்மா காந்தி	51
வெற்றியின் ரகசியம் ...	துர்கனேவ்	53
அமீனே சத்துக்கள் ...	பாகோ	55
பணம் ...	கலா நிலயன்	61
சுதம்பம் ...		64
கெட்ட பழக்கங்கள் ...	ஏ. ஆர். ஸ்டாடின்	65
சூரப்புலி ...	வல்லிக்கண்ணன்	69
நல்ல சாகுபடி ...	ஜே. சி. குமரப்பா	73
வினைக்காதீர்கள் ! ...	மு. அருணாசலம்	77

முதலியவை

விய ஆனி

மலர் : 13

இதழ் : 3

சக்தி

அணா 8

சக்தி வெளியீடுகள்

88860

வெ. சாமிநாத சர்மா

புதிய சீனு	6 8 0
சோவியத் ருஷ்யா	4 8 0
காந்தியும் ஜவஹரும்	0 8 0
கார்ல் மார்க்ஸ்	(2-ம் பதிப்பு அச்சில்)
மகா புருஷன் லெனின்	(தயாராகிறது)

ஜே. ஸி. குமரப்பா

ஏசுநாதர் போதனை	0 12 0
கிராம இயக்கம்	3 0 0

மு. அருணாசலம்

உணவுப் பஞ்சம்	1 8 0
திருமலை முருகன் பள்ளு	2 0 0
நிழலருமை வெய்யிலிலே	1 4 0
காய்கறித் தோட்டம்	(2-ம் பதிப்பு அச்சில்)

காந்திஜி

இந்திய சுயராஜ்யம்	1 0 0

டி. வி. திருவேதி

சூரிய நமஸ்காரம்	1 0 0

டால்ஸ்டாய்

கதைகள்-1	2 4 0
கதைகள்-2	2 4 0
இந்தியா அடிமையானது ஏன்?	0 4 0

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ்

கம்பெனி லிமிடெட்

(இந்தியாவில் ஸ்தாபிதம் 1933)

தலைமை ஆபீஸ்: மதுரை

சிறந்த சேவை செய்து வருகிறது.

நெருப்பு, மோட்டார் விபத்து

முதலிய

சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்

மொத்த ஆஸ்திகள் ரூ. 59,80,000

கிளைகள்: பம்பாய், அகமதாபாத், கல்கத்தா, ராவல்பிண்டி.

பிரதம ஏஜெண்டுகள்:

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்

மதுரை Etc.

ஆஸ்தமா வியாதியுள்ளவர்களுக்கு நான் இதைத்தான் சொல்லுவேன்

தற்சமயத்திற்கு குணமளிக்கும் மருந்துகளை வாங்குவது முற்றிலும் வீண்.

"புரோகித் சுவாஸஹரி" தற்சமயத்திற்கு மட்டும் அல்ல. "ஆஸ்த்மா"வின் மூலகாரணங்களையும் கண்டித்து நீடித்த குணத்தை அளிக்கும். சாப்பிட ஆரம்பித்ததுமே திணறலை நிறுத்தி ஜீரணத்தையும் அதிகரிக்கிறது. காலக்கிரமத்தில் பலத்தையும் கொடுத்து ஆஸ்த்மாவை வேரோடு ஒழிக்கும்.

"ஆஸ்த்மா," திணறல் (கஷ்ட சுவாசம் முதுகுவலி, தொண்டை கரகரப்பு, இருமல்) இன்னும் இதைப்போன்ற ஈரல் சம்பந்தப்பட்ட வியாதிகளுக்கு "சுவாஸஹரி" ப்ளெயின, (நீலப்பெட்டி) சாப்பிடவேண்டும். அஜீரணம் வயிறு உப்பிசம் உள்ள ஆஸ்த்மா வியாதி உள்ளவர்கள் "சுவாஸஹரி" காம்பௌண்ட் (சிவப்புப் பெட்டி) உபயோகிக்கவேண்டும்.

ஒவ்வொரு மருந்துக் கடையிலும் கிடைக்கும் 3, 6, 12, அவுன்ஸ் அளவுகளில் முறையே ரூபாய் 3-6-0, 5-12-0, 10-0-0 ஆக விலை.

தயாரிப்பவர்கள் :—

புரோஹித் பார்மஸி, கோலாப்பூர்
எம். எஸ். எம்.

ஸ்டாக்கிஸ்டுகள் :— சென்னை :

1. அப்பா அண்டு கோ, சைனுபஜார்.
2. அமிருத் ரத்னகர் பார்மஸி, கோவிந்தப்ப நாயக்கன் தெரு.

திருவாங்கூர் :

K. C. மாத்யூ & கோ,
கெமிஸ்ட்ஸ் &,
ட்ரக்கிஸ்ட்ஸ்,
கோஷாஞ்சேரி.



புரோகித்ஸ் ஸ்வாஸஹரி

1872-ல் ஸ்தாபிக்கப்பட்டு கடந்த 73-ஆண்டுகளாக பல்லாயிரக்கணக்கான மக்களால் உபயோகிக்கப்பட்டும், புகழப்பட்டும் வருவதுமான

மதுரை

M. காதர் சாஹிப் & ஸன்ஸ்

—"யானை மார்க்"—

- சந்தனாதித் தைலம்
- அரைக்கீரை தைலம்
- மிளகாய்த் தைலம்

குளிர்ச்சி, கூந்தலழகு, ஆரோக்கியம் தருபவை

- நாஷனல் பிளவர் டஸ்ட்

(உடுப்பு, ரிக்கார்டு பெட்டிகளில் அந்து, பாச்சை முதலியவைகளை அணுகவொட்டாமல் பரிமள வாசனை தரக்கூடியது)

மற்றும் வாசனைப் பாக்கு, தசாங்கம், ஸ்னோ பவுடர், ஊதுவத்திகள், சந்தன பில்லைகள், சந்தன பவுடர், பன்னீர் வகையராக்களும் கிடைக்கும்

சரக்குகள் வாங்கும்பொழுது எமது 'யானை' டிரேட் மார்க்கை கவனிக்க கோருகிறோம்

M. KHADER SAHIB & SONS.,

Manufacturing Perfumers
MADURA

விய
மலர் 13

சக்தி

ஆனி
இதழ் 3

மெய்ப்பொருள் காண்பது அறிவு

இடைக்கால சர்க்கார் இல்லை

எந்த ஒரு ஸ்தாபனமும் முஸ்லீம் லீகைத் தவிர முஸ்லீம்களின் பிரதிநிதித்துவம் வாய்ந்ததல்ல என்பதை நிரூபிக்க வேண்டியும்,—சிறப்பாகக் காங்கிரஸ், ஹிந்துக்களின் தனி ஸ்தாபனம் என்பதை நிரூபிக்க வேண்டியும் இடைக்கால சர்க்காரில் காங்கிரசுக்குள்ள 'கோட்டா'வில் முஸ்லீம்களை நியமிக்கக்கூடாது என முஸ்லீம் லீக் தலைவர் ஜின்னா வைசிராய் பிரபுவிடம் வற்புறுத்தினர்.

இந்திய மக்கள் அனைவருக்கும் ஏகப் பிரதிநிதித்துவம் வகிக்கும் காங்கிரஸ், — இடைக்கால சர்க்காரில் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களில் தங்களில் ஒரு பகுதியினராகிய (தேசிய) முஸ்லீம்களுக்கு ஒரு ஸ்தானம் அளிக்க விரும்பியது. தங்களுடைய விருப்பத்தைப் பூர்த்திசெய்யாவிட்டால் இடைக்கால சர்க்காரைத் தாங்கள் ஏற்று நடத்த இயலாதென வைசிராயிடம் காங்கிரஸ் தெரிவித்தது.

காங்கிரஸ்தான் இந்திய மகா ஜனங்களின் மாபெரும் பிரதிநிதி என்பதை வெளிப்படையாக ஒப்புக்கொண்டு, பேச்சு வார்த்தைகளைத் தொடங்கிய பிரிட்டிஷார், 'பாகிஸ்தான்' நடைமுறைக்கு ஒத்துவராத வீண் கோரிக்கை என அப்பட்டமாகச் சொல்லிய பிரிட்டிஷார், காரியம் கைகூடப்போகும் நல்ல சமயத்தில் இந்தியா விஷயமாக ஸ்ரீ சர்ச்சில் பேசிய பிறகு—ஜின்னா சாஹேபின் வார்த்தைகளுக்குச் செவி சாய்த்து, காங்கிரசின்—இந்திய மக்களின் வேண்டுகோளை மறுத்தனர். அதனல் காங்கிரஸ் இடைக்கால சர்க்காரை ஏற்று நடதுவது முடியாத காரியமென அறிவித்துவிட்டது. இது தான் சமயமெனக் கருதி, முஸ்லீம்லீக் தாங்கள் இடைக்கால சர்க்காரை ஏற்று நடத்துவதாகத் தீர்மானித்தது. அதையும் வைசிராய் நிராகரித்ததுடன் உத்தியோகஸ்தர் சர்க்காரை அமைக்க ஏற்பாடு செய்து விட்டார். தன்னை மதிக்கவில்லையே என ஸ்ரீ. ஜின்னா அவர்களுக்கு கோபம் கோபமாய் வருகிறது. யார் என்ன செய்வது?

இந்தியாவின் இரு பெரிய அரசியல் கட்சிகளான காங்கிரசும், முஸ்லீம் லீகும் 'நீண்டகால அரசியல் திட்டத்தை' ஏற்றுக் கொள்ளுகின்றன. இனியாவது காய்தே ஆஜம் அவர்கள் தங்களுக்குள் இருக்கும் சகோதரப் பிணக்குகளைத் தீர்த்துக்கொள்ள மூன்றாவதுபேர்வழியை—அதாவது நம்முடைய கலாசாரம், ஒற்றுமையை அறியாத, ஆறாயிரம் மைலுக் கப்பாலிருக்கும் பேர்வழியைக் கூப்பிடாமல் தன்னுடைய சகோதரக் கட்சிகளுடன் ஒத்துழைத்து 'நீண்ட காலத் திட்டத்தை' சரிவர நடத்தி நாடு சுதந்தரமடையச் செய்ய வேண்டும்.

*

காலச்சுழல்

காஷ்மீர் சம்பவம்: இந்தியாவிலுள்ள நூற்றுக் கணக்கான குட்டிச் சமஸ்தானங்களில் காஷ்மீர் சமஸ்தானம் சற்றுப் பெரியதாயிருக்கலாம். முஸ்லீம் பெரும்பான்மையினரைக் கொண்ட இந்த சமஸ்தானம் இந்தியாவின் ஓர் எல்லைக் கோடிக்கும் ருஷ்யாவின் ஓர் எல்லைக் கோடிக்கும் இடை நடுவில் இருப்பதனாலேயே, இந்தியாவை விட்டு வெளியேறுவதாகச் சொல்லித் திரியும் பிரிட்டிஷார் தங்களது ஏகாதிபத்தியத்துக்கு இந்தியாவில் ஊன்றுகோல் தரும் அரண்களுள் ஒன்றாக அதைக் கொள்ள ரகசியமாக எண்ணினார்கள். காஷ்மீர் சம்பவம், வெறும் பிரஜா உரிமைப் போராட்டமல்ல; சமஸ்தான அரசியல் குழப்பமல்ல. வெறும் இந்து முஸ்லீம் 'கலாட்டா'வல்ல. பிரிட்டிஷார் தமக்கு இன்று இந்தியாவில் உள்ள செல்வாக்கு, அதிகார பலம் ஆகியவற்றை ஒத்திகை பார்க்கத் தேர்ந்தெடுத்துக் கொண்ட ஒத்திகைக் களமே காஷ்மீரம். காஷ்மீர் மகாராஜா, பாவம், அரசப் பிரதிநிதி வேவல் பிரபுவின் கைப் பொம்மைதான். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்குச் சுதந்தர இந்தியா விடுத்த அறைகூவல்தான். இந்தியாவின் "மாணிக்கம்" (ஜவஹர்) அங்கே போய்ச் சிறைப்பட்டு, சம்பந்தப் பட்டவர்களை வெட வெடத்துப் போகும்படி செய்து, கடைசியில், ராஷ்டிரபதி ஆஜாதின் ஆணைக்குப் பணிந்து புதிய டில்லி திரும்பிய சம்பவங்கள். பிரிட்டிஷாருக்கு நாம் கொடுத்த சூடு உறைத்திருக்கு மென்று நம்பலாம். மேலும் மேலும் நூற்றுக் கணக்கானவர்களைச் சிறைபடுத்துவதைக் காஷ்மீர் மகாராஜா நிறுத்திக் கொண்டு, இனியாவது நாடு இருக்கும் நிலைமையைச் சரியாய்ப் புரிந்து கொண்டு, தக்கபடி நடந்து கொள்வாராக. "அரசனை நம்பிப் புருஷனைக் கைவிடுகிற" பேருக்கு என்றுமே பயன் தந்ததில்லை.

மறியல் மயம்: பாட்டாளி மக்களின் மகத்தான, கண்ணியமான வரம்புக்குட்பட்ட ஆயுதம் மறியல் செய்து தங்கள் குறைகளை எடுத்துக் காட்டிக் குறை நிவர்த்தி பெறும் உரிமை. இது பலன் தருகிறதென்று கண்டவுடன், இதைத் தன்னையுமறியாமல் துஷ்பிரயோகம் செய்து கொள்ள முடியவே முடியும். ஆனால், இதுகாறும் நாடெங்கும் நிர்த்தூளிப் பட்டு விட்ட மறியல்கள் பெரும்பாலும் நியாயமான உரிமைகளை அடைவதற்காகவே செய்யப்பட்டன. ஒன்பது லட்சம் ரெயில்வேத் தொழிலாளர் ஏகோபித்துக் கட்டுப்பாடாய் உரிமைப் போர் தொடுத்ததால், ரெயில்வே அதிகாரிகள் உண்மை உணர்ந்து நியாயம் வழங்க முன் வர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது. நாட்டை அல்லோல கல்லோலப் படுத்திவிட இருந்த பேராபத்து நீங்கியது. ரெயில்வேத் தொழிலாளர் மறியல் நின்றுவிட்டது. சந்தோஷம். இதர மறியல்களும் இந்த மாதிரியான நல்ல முடிவுக்கு வரும்படி சம்பந்தப் பட்டவர்கள் சமரசமாய் நடந்து கொள்வது இன்றைய நிலைமையில் மிக மிக இன்றியமையாதது.

கடல் கடந்த இந்தியர்கள் போராட்டம்: கடல் கடந்த இந்தியர்கள் இன்று ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஜூன் மாதம் 13-ந் தேதியிலிருந்து, தென் ஆப்பிரிக்காவிலுள்ள இரண்டரை லட்சம் இந்தியர்கள் அஹிம்ஸா முறையில் சேரி மசோதாவை எதிர்த்துச் சட்ட மறுப்பு இயக்கத்தை நடத்தி வருகிறார்கள். தென் ஆப்பிரிக்காவிலுள்ள பாஸிஸ்டு வெள்ளையர்கள் இவர்களைப் பலாத்காரமாகத் தாக்கி வருகிறார்கள். சில பெண் தொண்டர்களுக்குக்கூட காயமேற்பட்டது. பலர் கைது செய்யப் பட்டுள்ளார்கள். தென் ஆப்பிரிக்கா இந்தியர்கள் போராட்டத்தைச் சில

ஐரோப்பியர்களும், தென் ஆப்பிரிக்கா சுதேசிகளும் ஆதரிக்கிறார்கள். சகல தேசத்தினரையும் தன்னுள் கொண்ட தென் ஆப்பிரிக்கா கம்யூனிஸ்டுக் கட்சி, ஆப்பிரிக்காகாரர்களின் தேசீயக் கட்சி, (இது தென் ஆப்பிரிக்காவிலுல்ள எண்பது லட்சம் சுதேசிகளின் ஸ்தாபனம்) தொழிற்சங்கங்கள் ஆகிய கட்சிகளும் ஆதரிக்கின்றன.

சமீபத்தில் தென் ஆப்பிரிக்கா சர்க்கார் ஆசியாக்காரர்கள் நிலம் வாங்குவது, விற்பது பற்றியும், இந்தியர்களுக்கு சட்ட சபையில் பிரதிநிதித்துவம் கொடுப்பது பற்றியும் ஒரு மசோதாவை அமுலுக்குக் கொண்டு வந்திருக்கிறது. இதற்கு "கெட்டோ மசோதா," அல்லது "சேரி மசோதா" என்று பெயர். இந்த மசோதாப்படி,

(1) ஐரோப்பியர்கள், மலாய்க்காரர்கள், ஆப்பிரிக்காக்காரர்கள் ஆகிய எந்த தேசத்தினரிடமிருந்தும் சர்க்கார் அனுமதி பெறாமல் இந்தியர்கள் நிலத்தையோ, வீட்டையோ வாங்கக் கூடாது. சர்க்கார் குறிபிட்ட இடத்தில்தான் வாழவேண்டும். அதாவது இந்தியர்களைத் தீண்டத்தகாதவர்களைப் போல், ஊருக்கு வெளியே தனிப்பட்ட இடங்களில் (சேரிகளில்) வாழும்படி செய்யும் அடிமைச் சாஸனம் இது.

(2) இந்தியர்கள் குறிப்பிட்ட இடத்தில்தான் வியாபாரம் செய்ய வேண்டும். சுயேச்சையாக எங்கும் வியாபாரம் செய்யக்கூடாது.

(3) தென் ஆப்பிரிக்கா சட்டசபையில் 150 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். இதில் இந்தியர்கள் மூன்று அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கலாம். ஆனால், தேரிந்தெடுப்பவர்கள் இந்தியர்களாக இருக்கக் கூடாது, ஐரோப்பியர்களாகத்தான் இருக்க வேண்டும்! எனவே, இந்தச் "சேரி மசோதா" இந்தியர்களை அடிமைகளாகப் பாவிப்பதோடு, பொருளாதாரம், கலாச்சாரம், அரசியல் ஆகிய துறைகளில் முன்னேற விடாமல் அதலபாதாளத்தில் அமுக்கி வைக்கிறது. ஆகவே, வாழ்ந்தால் சுதந்தரமாக வாழ்வோம், அல்லது வீழ்வோம் என்ற உறுதியோடு, தென் ஆப்பிரிக்காவிலுள்ள நமது சொந்தச் சகோதரர்கள் போராட்டத்தை ஆரம்பித்திருக்கிறார்கள்.

சிலோனிலும் இதே ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம்தான் நடக்கிறது. நேவஸ் மியர் தோட்டத்திலுள்ள 400 இந்தியக் குடும்பங்களை சிலோன் சர்க்கார் திடீரென்று வெளியேற்றியது. காரணம், சிங்களவர்களுக்குப் பிழைக்க வழி தேடிக் கொடுக்க வேண்டுமாம்.

இந்த 400 இந்தியக் குடும்பங்கள் கடந்த 50 வருஷங்களாகச் சிலோனிலேயே, அந்தத் தோட்டத்திலேயே வாழ்ந்து வருகிறவர்கள். பிரஜா உரிமை இல்லாததால், இந்தப் பரிதாபகரமான நிலைமைக்கு ஆளானார்கள். எனவே, ஜூன் மாதம் நாலாம் தேதி வேலை நிறுத்தம், ஹர்த்தால் முதலிய போராட்ட முறைகளை சிலோனிலுள்ள ஒன்பது லட்சம் இந்தியர்கள் கடைப் பிடித்தார்கள். ஜூன் மாதம் 12ந்தேதியிலிருந்து, 1, .0, 000 இந்தியத் தொழிலாளர்கள் ரப்பர், தேயிலைத் தோட்டங்களில் வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள். இந்தியர்களுக்கு அனுதாபம் காட்டும் பொருட்டு 5,000 சிங்களத் தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

சிலோன் இந்தியத் தொழிலாளர்களின் கோரிக்கைகள் இவைதான். (1) சிலோனில் 5 வருட காலமாக வசித்தவர்களுக்குப் பரிபூரணமாக பிரஜா உரிமை கொடுக்க வேண்டும். (2) சகல இந்தியர்களுக்கும் ஓட்டு உரிமை கொடுக்க வேண்டும.

ஏனெனில், இப்பொழுது அமுலுக்கு வந்திருக்கும் ஸோல்பரி அரசியல் திட்டப்படி, எழுதப் படிக்கத் தெரிந்தவர்களுக்கும், 600 ரூபாய்க்கு மேல் வருட வருமான முள்ளவர்களுக்கும்தான் ஓட்டுரிமை உண்டு.

சிலோனிலுள்ள ஒன்பது லட்சம் இந்தியர்களில் ஏழு லட்சம் பேர்கள் தொழிலாளிகள், எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். பத்து, அல்லது பதினைந்து ரூபாய் மாத வருமான முள்ளவர்கள. எனவே ஏழு லட்சம் தொழிலாளர்களுக்கு ஓட்டுரிமை கிடையாது, பிரஜா உரிமை கிடையாது.

இது பிரிட்டிஷ் முதலாளிகளின் சூழ்ச்சி. தொழிலாளர்களின் பிரதிநிதிகள், சட்ட சபைக்கு வரக் கூடாது என்பதற்காகவே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்த அடிமைச் சாஸனத்தைத் திணித்திருக்கிறது. உதாரணமாக, சிலோனிலுள்ள தேயிலைத் தோட்டங்களில் 80 சத விகிதமும் ரப்பர் தோட்டங்களில் 60 சதவிகிதமும் வெள்ளை முதலாளிகளுக்குச் சொந்தம். இதைத் தவிர சகல பாங்குகளும், வெளி நாடுகளோடு வியாபாரம் செய்யும் கம்பெனிகளும் வெள்ளை முதலாளிகளுக்கே சொந்தம். வெள்ளை முதலாளிகளின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களுடைய சுரண்டல் வேலை நீடிக்க வேண்டும். இதற்காக சிலோன் சர்க்கார் இந்தியர்களுடைய ஜீவாதார உரிமைகளைப் பறித்திருக்கிறது.

காந்தியடிகள் வாழ்க: சத்திய மூர்த்தியாகிய மகாத்மா தெய்வாதீனமாகத் தப்பித்தார். அஹிம்சையிலே பூரண நம்பிக்கை கொண்ட மஹாத்மாவை பிறருய்யத்தான் வருந்தும் பெருவாழ்வை விரும்பும் மஹாத்மாவின் உயிரைப் பறிக்க 'விஷயமறிந்த' சில கயவர்கள் ஜூன் 29 சனிக்கிழமை தினம் மஹாத்மா டெல்லியிலிருந்து பூனா வரும் வழியில் பூனாவுக்கு அருகில் ரயில் தண்டவாளத்தில் பெரிய பாறுங்கல்லை வைத்து ரயிலைக் கவிழ்த்துவிட எண்ணினர்கள். மஹாத்மா எப்பொழுதும் பூரணமாக நம்பும் திருவருள் தான் அபாயத்தினின்று அவரைக் காப்பாற்றியது. மஹாத்மா விரும்புவது போல நூற்றிருபத்தைந்து வயதுவரை நம்முடன் வாழ திருவருள் துணை புரியுமாக.

*

போட்டோப் பரிசு

1. உங்களுக்குப் பிடித்தமான அழகிய போட்டோக்களை அனுப்புங்கள். இயற்கைக் காட்சிகள், மிருகங்கள், பட்சிகள், குழந்தைகள், பெண்கள், மனிதர்கள்—இன்னும் எதுவாக வேனும் இருக்கலாம்.
2. 'சக்தி' ஆசிரியர் தேர்ந்தெடுக்கும் படங்களுக்குப் பரிசு கொடுக்கப் பெறும்.
3. பரிசுபெற்ற படங்களை அந்தந்த மாத சக்தியிலும் வெளியிடப் பெறும்.
4. முதல் பரிசு ரூ. 25, இரண்டாவது பரிசு ரூ. 15. வெளியிடத் தகுதியான, பரிசு பெருத படங்களுக்கு பத்து ரூபாய் கொடுக்கப் பெறும்.
5. அனுப்பும் படங்கள் தங்களுடையதுதான் என உறுதியளிக்க வேண்டும்.
6. ஆசிரியர், 'சக்தி' ராயப்பேட்டை, சென்னை என்ற விலாசத்துக்கு படத்தை நன்ருகக் கட்டி ரெஜிஸ்டர்டு புக்போஸ்டில் அனுப்பவேண்டும்.



விஷ வியாக்யானம்
காதினர்திட்டம்

அஞ்சுவது அஞ்சு

சுப. நாராயணன்

மனிதனுக்குள்ள உணர்வுகள் அனைத்துள்ளும் தற்காப்பு உணர்வும், இணைவிழைவு உணர்வும்தான் மிக்க ஆழமானவை, மகா பலம் பொருந்தியவை என்பது நமக்குத் தெரியும். சாகாமல், வாழையடி வாழையாய் வாழ வழிகோலும் இணைவிழைவு உணர்வும். தற்காப்பு உணர்விலிருந்து கிளை வெடித்த ஒன்றே என்பதும் நமக்குத் தெரியும்.

உலகத் தத்துவ ஞானிகள், பன்னெடுங்கால ஆழ்ந்த அறிவாராய்ச்சியின் மூலம் கண்டு பிடித்த பேருண்மைகளிலிருந்து இன்னொரு விஷயமும் நமக்குத் தெரிய வருகிறது. உலகாயதச் சூழலில் மாட்டிக் கொண்டு தவிக்கும் நமக்குப் புரிகிற முறையில், பிரசித்தி பெற்ற ஜெர்மன் தத்துவ ஞானியாகிய வில்லியம் ஃபிரெட்ரிக் ஹெகல் என்பவர் அடிப்படையான ஓர் உண்மையை விளக்கிக் காட்டியிருக்கிறார்: கருத்துத்தான் முக்கியம்; கருப் பொருளாகிய கருத்தின் வடிவ வேறுபாடும், வடிவ வகையும் தான் கற்பனைக் கெட்டாத இந்த மாபெரும் பிரபஞ்சப் பரப்பு. சிருஷ்டிக்கு முற்பட்ட காலத்தில் இருந்து வந்த கருத்துடன் மீண்டும் போய்ச்சேர்ந்து, அதனுடன் இரண்டறக் கலந்து விடவே பொருள்கள் அனைத்தும் முயலுகின்றன—என்ற அவருடைய தத்துவ அடிப்படையைத் தம்முடைய உலகாயதத் தத்துவத்தில் புகுத்தித்தான் பொதுவுடைமைத் தத்துவத்தின் தந்தையாகிய கார்ல் மார்க்ஸ் தமது உலகாயதத் தத்துவத்தை உண்டாக்கினர். எந்த விஷயத்துக்கும் இரண்டு கட்சி உண்டு, இரண்டு வாதம் உண்டு. இரண்டுக்கும் இடையே நிகழும் எதிர்ப்பிலிருந்து சர்ச்சை கிளம்புகிறது. சர்ச்சையிலிருந்து ஒரு முடிவு ஏற்படுகிறது. அந்த முடிவைப்பற்றி மீண்டும் இரண்டு விதமான அபிப்பிராயம் கிளம்புகிறது. அப்புறம், அதைப் பற்றி ஒரு சர்ச்சை. இப்படி, சந்தேகத்துக்கு இடமில்லாமல், மறுக்க முடியாத உண்மையான ஒரு முடிவு கிட்டும் வரையில், சந்தேகமும், சர்ச்சையும், தற்காலிகமான முடிவும் பின்னிக் கொண்டே செல்கின்றன.

> படுசூன்யமான அறியாமைக்கும் பரிபூரணமான அறிவுக்குமிடையே எத்தனையோ படிகள் உண்டு—மை இருட்டுக்கும் பட்டப் பகலுக்குமிடையே உள்ள ஒளிக் கட்டங்களைப் போல. விஷயம் புரியாமல், எல்லாரும், எப்போதும் "அச்சமில்லை! அச்சமில்லை!" என்று போலி எக்களிப்புக் கொள்ளலாமா?

ஆகவே, தற்காப்பு உணர்வின் அடிக்கூறாகச் சந்தேகம் என்பதன்பாற்பட்ட ஓர் உணர்வு இருக்கிறது என்று அறிகிறோம். நமக்குத் தெளிவாய்த் தெரியாத ஒரு விஷயத்தைப் பற்றித்தான் அது இதுவோ, அதுவோ என்ற ஐயம் நமக்கு உண்டாகிறது. அந்த விஷயத்தைத் தெரிந்து கொண்டுதான் ஆகவேண்டும் என்ற கட்டாயம் ஏற்படுகிற போது, அதைப் பற்றிய உண்மையை அறிய முயலுகிறோம். நம்முடைய முயற்சி தீவிரமாகி,

வெற்றிபெற வெற்றிபெற, அந்த விஷயத்தின் உண்மையைப் பற்றிய நமது அறிவு பெருகி விரிவடைகிறது. நாம் கண்ட உண்மை சரியா, தப்பா என்ற சந்தேகமும் அறிவை விடாமல் அதனுடன் பின்பற்றி வரவே செய்கிறது. சந்தேகத்தின் பாற்பட்ட சிறு அச்சம் மிதமிஞ்சிப் போய், நம்பிக்கையின்பாற்பட்ட அறிவை அது குடைசாய்த்து விடுமானல், எஞ்சி நிற்கும் உணர்வு பேரச்சம் தான். பேரச்சம் வந்தவுடன், சொல்லொணுச் சந்தேகப் பேய்க்கு நாம் அடிப்பட்டு விடுகிறோம். அற்பச் சந்தேகத்திலிருந்து அபாரமான நம்பிக்கை வரைக்கும் உள்ள ஏணிப் படிகள் அனைத்தும் சந்தேக ஓலத்தின் சுர பேதங்கள்தான். ஏணியின் இருப்பைப் பற்றித் தெரியாமலேயே இருப்பது கலப்பற்ற இருள் படலத்துள் அழுந்திக் கிடப்பதைப் போன்றது. ஏணியின் உச்சத்தைக் கடந்து, மேல் மாடிக்குச் சென்று விடுவது பரிபூரணமான ஒளி வெள்ளத்தில் திளைப்பது போன்றது. முன்னது இன்பத்தின் போலி வடிவத்தைத் தழுவி நிற்பது. பின்னது இன்பத்தின் உண்மைச் சொரூபத்தில் கலந்துபோய், அதனேடு அதாகவே சுவறிப்போவது.

சராசரி மனிதனுக்கு இந்த இரண்டு நிலைகளும் கிட்டுவதில்லை. அதனலேயே, பயம் என்கிற மகா பலம் பொருந்திய உணர்வு அவனை இந்த ஆட்டு ஆட்டி வைக்கிறது. சராசரி மனிதன் ஏணி இருப்பதை அறிவான். ஏணியில் ஏற ஏற, மெய் இன்பத்தின் ஒளிக் கதிர்கள் சிறுகச் சிறுகத் துளித் துளியாக அவன் மேல் சிந்துகின்றன. ஒளித் துளி தன்மேல் பட்ட தட்சணம் பாவிமகன் பதைபதைத்து, மெய் சிலிர்த்து, போதை கொண்டு விடுகிருன். போதை மயக்கத்தில், இன்னும் மேலே ஏற வேண்டுமே என்கிற விஷயத்தை மறந்து விடுகிருன். தான் பெற்ற அற்ப ஒளித் துளிகளைக் கொண்டு, தனக்குக் கீழே உள்ள தன்னுடைய இன மனிதர்களை மயக்கி, வெருட்டி, தெகிடுதத்தம் செய்து, அடக்கி, அடிமைப் படுத்திச் சுரண்டத் தொடங்கி விடுகிருன். பின்னல், சறுக்கி விழுந்து இருள் கடலில் மூழ்கிவிடுகிருன். அப்புறம், ஒளித் துளியின் அற்ப ஞாபகமே அவனிடத்து எஞ்சி நிற்கிறது. அதை வைத்துக் கொண்டு, என்னென்னவோ இல்லாதது பொல்லாத தெல்லாம் செய்து, கள்ளுண்ட குரங்குபோல் ஒரே கும்மாளம் அடிக்கிருன். ஒளியின் பரிபூரண பிம்பத்தைக் கண்டு விட்டவன் போல் பாவனை பண்ணுகிருன். வீருப்புப் பேசுகிருன். மார் தட்டுகிருன். எதற்கும் அஞ்சாதவன்போல் பாவனை பண்ணுகிருன். இறுதியில், ஒளியைப் பற்றியும், ஒளியை அடைவதற் குள்ள ஏணி மார்க்கத்தைப் பற்றியும் வேண்டு மென்றே, அறவே, மறந்து விடுகிருன்.

இதனலேயே, சராசரி மனிதனின் நன்மையை உத்தேசித்து அறிவுப் போதனை செய்த பெரியார்களெல்லாம், அஞ்ஞானத்தின்பாற்பட்ட அச்சத்தைப் படிப் படியாக ஒழிக்க நமக்குக் கற்பித்துள்ளார்கள். அச்சம் என்பதையே அறியாத, வெறும் உயிர் இயக்க நிலையாகிய அஞ்ஞானத்துக்கும் அச்சம் என்பதைக் கடந்து, அதற்கப்பாலுள்ள ஒளிப் பிழம்பாகிய அறி

வுடன் ஐக்கியமாகி விடுகிற மெய்ஞ் ஞானத்துக்கும் இடையே மகத்தான வேற்றுமை உண்டு. ஒன்றி லிருந்து மற்றதுக்கு ஒரே தவ்வில் தவ்விக் குதித்து விட முடியாது. படிப்படியாய்த்தான் செல்ல வேண்டும். வேண்டுமானால், நம்முடைய யாத்திரையின் கால வரையைத் தீவிரமான, திட்டம் செறிந்த, வேக முயற்சியால் சுருக்கிக் கொள்ளலாம். அதனாலேயே, அச்சத்தை அறவே ஒழித்து விடு என்று சொல்லாமல், அச்சத்தைத் தடுத்துக் கொண்டு செல். அறிவைக்கொண்டு அதைச் சமாளித்துக்கொள். அதை அடிப்படுத்திக் கொண்டுகவனமாய் முன்னேறு— என்ற இத்தனை பொருளும் ஒளிரும் வண்ணம், "அச்சம் தவிர்" என்றார்கள். மனித சக்திக்கு வரம்புண்டு. எல்லாருக்கும், எல்லாக் காரியமும், எல்லாச் சமயத்திலும், ஒரே மாதிரி நடத்த வராது. பழக்கம் வேண்டும்; பயிற்சி வேண்டும்; பொறுமை வேண்டும்; உழைப்பு வேண்டும்; பலம் வேண்டும்; நம்பிக்கை வேண்டும்; நிதான புத்தி வேண்டும்; தன்னையும் பிறரையும் தப்பாமல் மதிப்பிட்டு எடை போடத் தெரிய வேண்டும்—என்று அறிஞர்கள் நூல் யாத்துள்ளார்கள்; கவிகளைப் பாடியுள்ளார்கள்; கலைகளைச் சமைத்துள்ளார்கள்; தத்துவங்களைப் போதித்துள்ளார்கள். அறிவுத் தீவட்டியை ஏந்திக் கொண்டு, இருண்ட காட்டில் நம்முடைய வாழ்வுப் பாதையில் ஒளி சிந்தி வழி காட்டிச் சென்று கொண் டிருக்கிறார்கள்.

அறியாமைதான் 'துன்பத்தின் தாய்' என்றார் அறிஞர் இங்கர்சால். துன்பத்தில் பிறந்து, துன்பத்தில் உழலும் நாம் நம்முடைய குழந்தைப் பருவத்தில் தாயின் முலையைக் கௌவிக் கொண்டே கிடப்பது சரிதான். வயது வந்த பிறகு, இன்பத்தின் தகப்பனாகிய அறிவை அடைய முயன்று, தகப்பனுடன் கடைத் தெருவில் வேலைக்கமர்ந்துவிட வேண்டும். அங்கே, தாயின் நினைப்பு உதவாது. வயது வரு மட்டும், இடைக்கிடை, தாயின் நினைவு வரத்தான் செய்யும். வயது முதிருமுன் தாயை உதறி எறிவது ஆபத்து. வயது வந்த பிறகும், தாயிடம் சபலம் தட்டுமானால், அது நமது முதிர்ச்சியின்மையையே காட்டும். பிள்ளைப் பருவத்துக்கும் முதிர்ச்சிப் பருவத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் நாம் பற்றி ஒழுக வேண்டிய நெறி முறையே "அஞ்சுவது அஞ்சு" என்ற சூத்திரத்தில் அமைந்துள்ளது. முதிர்ந்த நிலையில் நமக்கு வழி காட்டும் சூத்திரமே "சொல் வல்லான், சோர் வில்லான், அஞ்சான், இவனை இகல் வெல்லல் யார்க்கும் செய் அரிது" என்பது.

"ஒண்ணும் புரியலையே!" என்று கதி கலங்கி, மூச்சடைத்துப் போகிற பேரச்ச நிலைக்கும், "சகலமும் அறிந்த பரம ஞானி நான்!" என்று எக்களித்து விம்மி, ஒளியில் மறைந்தும், ஒழிந்து போகாமல் தொடுக்கிக் கொண்டு நிற்கும் துளி அச்ச நிலைக்கும் இடையே உள்ள அறியாமை, சந்தேகம், சிற்றறிவு, போலி அறிவு ஆகிய பல படிகளை அரும் பாடுபட்டுக் கடந்தாலொழிய நீங்களும் நானும் பூரண அறிவையும், பூரண இன்பத்தையும் பெற முடியுமா, என்ன?

✲

பரம்பரையாக அழகைக் காப்பாற்றுதல்

சிறு பெண்களுக்கு புத்தி சொல்ல தாயார்களைக் காட்டிலும் சிறந்தவர் இல்லை. சுத்த ஜலமும், பியர்ஸ் சோப்பும் கொண்டு, ஒழுங்கான முறையால் சருமத்தின் அழகைக் காப்பாற்றிக் கொள்வதே இந்தத்தாய் தன் மகளுக்குக் கற்பிக்கும் புத்திமதிகளில் ஒன்று. தன் தாயிடமிருந்து கற்ற இந்த முறையைத்தான் இவள் தன் சிறுவயதிலிருந்தே அநுசரிக்கிறாள். அதனால்தான் இவளுடைய சருமமும் இன்றுவரை மாசில்லாமல் காணப்படுகிறது. மகளும் தன் சருமத்தை ஜாக்கிரதையாக அதே மாதிரிக் காப்பாற்றிக்கொண்டு வருகிறாள். ஆகையினால், இவள் சருமமும் தாயினுடையதைப் போல யாதொரு பழுதுமின்றி விளங்கும்.

நாற்பது ஆண்டுகளாக, இந்திய அழகிகளின் பிரிய சோப் பியர்ஸ்தான். அதன் மணமும், பட்டுபோன்ற மிருதுவான நுரையும் மற்ற சோப்புகளை விட உயர்ந்த ஸ்தானத்தில் அதை வைக்கின்றன.



பியர்ஸ் சோப்

அழகின் அடிமை

TG. 39-50 TM | A. & F. PEARS, ISLEWORTH, ENGLAND

உங்கள் தினசரி உபயோகத்திற்கு
பனிமலைத் தென்றல் போன்று குளிர்ச்சிவாய்ந்ததும், அரிய மலர்களின் நறுமணம் போன்று களைப்பாற்றுவதுமான டாடா ஓடிகொலோன் உங்கள் தினசரி உபயோகத்திற்காயினும் சரி, ஜுரத்தால் வேகும் நெற்றித் தடத்தை குளிரப்பண்ணுவதற்காயினும் சரி உகந்தது தான்.
எப்பொழுதும் ஒரு பாட்டில் வீட்டில் கையோடு காவலாய் வைத்திருங்கள்.
Tata's
EAU DE COLOGNE
THE TATA OIL MILLS CO. LTD.
80°
A TATA PRODUCT
டாம்கோ விற்பனை இலாகா :
19-A, வாணியர் தெருவு,
தபால் பெட்டி நெ. 31, மதரா

ச ப ல ம்

ஸ்டீபன் ஜெரோம்ஸ்கி

அன்னா கிர்ஸிவோஸத்-நாஸ்லாவ்ஸ்காச் சீமாட்டியின் இளைய மகன் பாதிரி ஆகவேண்டுமென்று தீர்மானித்தான். சிறு வயதிலிருந்தே அவனுக்குப் பிரார்த்தனையில் அசாதாரணமான பிரியம் உண்டு. மௌனம், பணிவு, சாந்தி ஆகிய உயர்ந்த குணங்கள் அவன் முகத்திற்குப் பொலிவு தந்தன. அவன் ரோமாபுரியிலே தன் தூரபந்துவாக இருந்த ஒரு பெரிய பாதிரியாரின் மேற்பார்வையில் பாதிரி வேலைக்குப் படித்து வந்தான். இருபதாவது வயதில் தன் பரீட்சையில் முதல்தரமாகத் தேறிவிட்டான். பாதிரிச் சாமியார் உத்தியோகத்தில் அமருவதற்கு அவனுக்கு இன்னும் தகுந்த வயது வரவில்லையாதலால், தன் சொந்த தேசத்துக்குப் போனான். அதைவிட்டு அவன் வந்து பல வருஷங்களாகி விட்டன. அங்கே தன் தாயாரின் வீட்டில் தங்கியிருந்தான்.

அவன் பெரிய மாளிகையில் ஒரு மூலையில் இருக்கும் அறையில் வசித்து வந்தான். அந்த அறை மடாலயங்களில் உள்ள சின்ன அறைகளைப் போல ஈரமும் குளிரும் நிறைந்திருக்கும். அவன் தரைமீதுதான் படுத்துக்கொள்ளுவான்; தொடர்ந்து பல நாட்கள் உண்ணா விரதமிருப்பான். லத்தீன் பாஷையிலுள்ள புஸ்தகங்களைப் படிப்பான். இரவு நேரங்களில் தன் உடம்பைத் தானே வருத்தித் தண்டித்துக் கொள்ளுவான். அவன் தன் அசங்கியமான அங்கிக்கு உள்ளே மயிரினால் செய்யப்பட்ட சட்டையைத்தான் அணிந்து கொள்ளுவான். இப்படி யப்படி என்று சொல்லமுடியாதபடி அவ்வளவு நல்லவனாகவும், பெருந்தன்மையுள்ளவனாகவும் இருந்தான். தனக்குப் பிறர் செய்யும் தீங்குகளை மன்னித்து விடுவான். அளவு கடந்த பெருந்தன்மை உடையவன்.

அவன் நாற்காலியில் உட்கார்ந்தால், ஒரத்தில் ஒரு நுனியில்தான் உட்காருவான். அதாவது, அவன் எழுந்து நின்றால் அவனுடைய அங்கியானது அவனைத் தடுத்து, பாதிரிச் சாமியார் மாதிரி நடக்கும்படி செய்வதற்கு ஏதுவாக உட்காருவான். கால் விரல்களை மட்டும்தான் ஊன்றிக் கொண்டு அவன் நடப்பான். அது, ஏதோ ஒரு சூக்ஷ்மமான கரண்டைக்கால் அவன் மீது பூமியின் புழுதி படாதபடி காப்பது போலத் தோன்றும். கூட்டத்தைக் கண்டாலே அவனுக்குப் பிடிக்காது. பட்டிக்காட்டு வாலிபப் பெண் எவளையாவது பார்த்துவிட்டால், ஏதாவது ஒரு பிரார்த்தனையை முணுமுணுத்துக் கொள்ளுவான்.

உள்ளத்தையும், அதன் உணர்ச்சிகளையும் ஒரேயடியாக ஒடுக்கி வறட்டுத்தனமாக வாழ அவன் முயன்றான். ஆனால், வயல்வெளியில் அவன் கண்ட காதல் நாடகம் அவனுடைய உறுதியை முறித்து அவன் உணர்ச்சிகளுக்கு விடுதலை அளித்து விடுகிறது. இந்தக் கதையை எழுதிய ஸ்டீபன் ஜெரோம்ஸ்கி என்பவர் போலந்து தேசத்தின பிரபல நாவலாசிரியர்களில் ஒருவர். இவருடைய நூல்கள் பல, ஜர்மன், பிரெஞ்சு, ஆங்கிலம் முதலிய பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இதைத் தமிழாக்கியவர் ஸ்ரீ கு. அழகிரிசாமி.

அவன், ஒவ்வொரு நாளும் சூரியோதயத்துக்கு முன்னுலேயே எழுந்து வயல்களுக்குப் போய் விடுவான். அங்கேதான் கர்த்தருக்கு மிகவும் அருகாமையில் இருக்க முடியுமென்றும், தெய்வீகக் காட்சிகள் அங்கேதான் தெளிவாகப் புலப்படுகின்றன வென்றும் அவனுடைய உறுதியான அபிப்பிராயம். கணக்கற்ற ரை கோதுமை வயல்களின் ஊடேயுள்ள பாதை வழியாகச் சென்று மேட்டுப்பாங்கான இடத்தில், இடிந்தும் இடியாமலும் பைன் மரக்காட்டின் நிழலிலே மறைந்திருக்கும் ஒரு சிறு மாதாகோவிலுக்குப் போவான்.

ஒரு நாள் காலையில் அவன் வழக்கம்போல் அந்தக் கோவிலுக்குப் போனுன். நிலப் பிரதேசம் இன்னும் இராப்பனியின் மூட்டத்தில் மறைந்திருந்தது. ஆனுல் சூரியோதயம் ஆகும்போது ஓர் அகன்ற ஊதா நிறக் கதிர் அடிவானில் விழுந்து அகலமாகிக் கொண்டே போனது. கோதுமைக் கதிரில் உள்ள மயிர் போன்ற நார்கள் அவன் முழங்கால்களை உரசி, பெரிய பனித்துளிகளை உதிர்த்தன. ஆனுல், தலைசாய்ந்து நிற்கும் கதிர்களின் மறைப்பால், பாதை பனித்துளிகளால் ஈரமாகாமல் இருந்தது. மலையை ஒட்டிய வயல்களில், அதிகாலையின் வெளிச்சத்தில் பிரகாசிக்கும் தானியக் கதிர்கள் அலைகளாக எழும்பின. காட்டுக்கு முன்புறமாக வயல்கள் அலையடித்துக்கொண் டிருந்தன. மண்ணின் வாசமும், முதிர்ந்த தானியமணிகளின் நறுமணமும் தென்றலோடு கலந்து வீசி ஆரோக்கியம், பலம், வாலிபம் முதலியவற்றின் உணர்ச்சியை அளித்தன. சூரியோதயமாகும் நீலவானின் பரப்பை வேறுபடுத்திக்காட்டும் பெரிய காட்டு மரங்களினின்றும் 'ஜில்'லென்ற காற்று வீசியது. நமது சாமியார் மிகவும் சாவதானமாகவும், அக்கறையில்லாமலும், கையால் ரை கோதுமைப் பயிர்களின் உச்சியைத் தடவிக் கொண்டே நடந்தார். வானம்பாடிகளும், தலையில் கொண்டையுள்ள பல பறவைகளும் அவன் காலுக்குக் கீழாக இருந்து மேலே பறந்து வந்து பழையபடியும் கற்களைப் போல அடர்த்தியாக வளர்ந்திருந்த ரை கோதுமைப் பயிர்களுக்குள்ளே விழுந்து கொண்டன.

சூரியோதயம் இப்போது அடிவானத்தில் ரோஜா நிறம் பூசிக் கொண்டிருந்தது; காட்டுப் பொழிலிடை உறங்கும் கருமேக நிரைகளில் பளிச்சென்று மின்னலைப் போல அந்த ஒளி பாய்ந்தது. மலையுச்சியில் நூற்றுக் கணக்காக இருந்த செந்நிறமான தேவதாரு மரங்கள் இருள் படுதாவினின்றும் பேரழகோடு வெளி வந்தன. நீல வெளியின் பின்னணியிலே, அவற்றின் கிளைக் கரங்கள், நெருங்கி வந்துகொண்டிருக்கும் சூரியனைத் தொடப் போவதுபோலத் தோன்றின.

திடீரென்று பூமியில் ஒரு சிலிர்ப்பு உண்டாயிற்று. அடுத்த விஞடியில், அருணேதயத்துக்கு முன்னேடியாக வந்து வீசிய காற்றின் ஒரு மூச்சு தேவதாருக் கிளைகளைச் சற்றுக் குலுக்கி, தூயனின் வரவை செடிக்கும், புல்லுக்கும், பயிருக்கும் ஒன்றுபோல அறிவித்தது.

அப்போது பூதேவியின் இருதயம் துடிக்கத் தொடங்கி பூமி அசைவதுபோலத் தோன்றியது.

பிறகு, வாயுபகவான் தன் சிறகை விரித்து மணம்நாறும் அடிமரங்கள், மொச்சிச் செடிகள், தூரத்தேயுள்ள தானியப் பயிர்கள் முதலியவற்றின்மீது பறந்து சுற்றிக் கொண்டிருந்தான். சுகமான ஒரு மரண அமைதி; அந்த அற்புதமான வைகறையில் ஒவ்வொரு ஜீவ தாவரத்தின் முழு மேனியும் தீப்பட்டு எரிவதைப் போலப் பிரகாசித்தது.

பாதிரிப் படிப்புக்குப் படித்த நம் ஆசாமி கிழக்கே பார்த்த வாக்கில் நடந்து கொண்டிருந்தான். வசந்தம் வந்ததும் பைன் மரப் பட்டைகளில் தாவர ரசம் பொங்குவதைப் போல, அவனுடைய உள்ளத்திலிருந்து பிரார்த்தனையின் சொற்கள் கிளம்பி, உதடுகளுக்கு வந்தன. அந்தச் சிறிய மாதாகோவிலுக்குச் சென்று சாம்பல் நிறத்திலிருந்த மரக் கதவைத் திறந்து உள்ளே போய், பட்டிக்காட்டு ஆசாமி எவனோ ஒருவன் தாறுமாருக எழுதியிருந்த ஒரு கிறிஸ்து படத்துக்கு முன்பாகக் கைகளை நீட்டிய வாக்கில், குப்புறப் படுத்தான்.

அவனுக்குத் தன் ஆத்மா மண்ணுலகத்திலிருந்து ஆண்டவரின் சிம்மாசனத்துக்கே பறந்துபோய் விட்டதுபோலத் தோன்றியது. ஒரு க்ஷணத்திலே கண்ணிலிருந்த திரையை விலக்கியதுபோலிருந்தது. நித்திய பரம்பொருளின் தோற்றத்தையே அவன் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

இதே சமயத்தில் திடீரென்று முரட்டுத் தொண்டையில் ஒரு குடியானவன் பாடும் பாட்டுக் கேட்டது:

"வயலுக்குள்ளே வயலுக்குள்ளே
வாத்துப் போலும் உன்னுடம்பை
வெயில் காய்ந்து வெளுக்கையிலே
எந்தன் ஹாங்க்காவே,
வெகு நேசம் கொண்டேனடி
எந்தன் ஹாங்க்காவே!"

இந்தப் பாட்டுக்குப் பதில் பாட்டாகத் தூரத்திலிருந்து நெருங்கி வந்து கொண்டிருக்கும் ஒரு பெண் குரல், பின்வரும் பாட்டைப் பாடியது:

"வெளுத்ததை என் உடம்பையில்லே
சட்டையைத்தான் வெளுத்ததையா
சட்டையைத்தான் உடம்பென்றிரே
எந்தன் காஸ்காவே,
சாயம் பூசிக் கொண்டேனே நான்
எந்தன் காஸ்காவே."

தரையிலிருந்து இளைஞன் எழுந்து கோவில் வாசலில் வந்து நின்ருன். வெளியே, தேகக் கட்டுள்ள ஒரு குடியான வாலிபன் ஒரு சட்டையோடு, காலில் செருப்பு ஒன்றும் போடாமல், வைக்கோல் திணித்த பலமான ஒரு தொப்பியை அணிந்து, 'ஜுனீபர்' கட்டைகளைச் சுமந்து கொண்டிருப்பதைப் பார்த்தான். அந்த இளைஞன் முளைக் குச்சியால் கிழங்குகளைத் தோண்டி யெடுத்துக் கொண்டும் கைகளை செடிக் கொம்புகளில் நனைத்துக் கொண்டும் இருந்தான். அங்கே பாதையோடு ஒரு பெண் முதுகில் புல்லுக் கட்டைச் சுமந்து கொண்டு போனாள். அவளுடைய ரவிக்கை மேலே பார்த்து மடக்கி விடப்பட்டு, அவளுடைய இடைவாரில் சொருகப்பட்டிருந்தது. அவளுடைய அகன்ற தோள்கள் பாரத்தினல் ஒன்று போலக் குனிந்துகொண்டிருந்தன. சிவப்புக் குட்டையால் சுற்றிக் கட்டப்பட்டிருந்த அவள் தலை மாத்திரம் அந்த வாலிபன் வேலை செய்துகொண்டிருக்கும் மலைப் புறத்தை எறிட்டுப் பார்த்துக்கொண்டிருந்தது.

அவள் பாதையின் திருப்பத்துக்கு வந்ததும் அங்கே நின்று, சொருகியிருந்த தன் ரவிக்கையின் கரையைக் கீழே இழுத்து விட்டாள். தன் சுமையைத் தரையில் இறக்கி வைத்தாள். உடனே, சிரித்துக் கொண்டே அந்த இளைஞனை அப்பால் சிறிது தள்ளினாள்.

நம் சாமியார் தம் கண்களைக் கையால் மறைத்துக் கொண்டான். ஆனால், அடுத்த வினாடியிலேயே, அந்த இருவரும் பாடும் ஒரு புதிய பாட்டு மரங்களின் நடுவே எதிரொலி செய்து கொண்டு கேட்கவே, கைகளை எடுத்துக் கீழே விட்டான். அந்தப் பாட்டை ஒரு விநோதமான ராகத்தில் பாடினார்கள். மரத்தோப்பு வாத்திய நரம்பு மாதிரி இந்த இரண்டு குரல்களின் சுருதியில் இழைந்து பிர்க்கா விடுவது போல இருந்தது.

"பூந்தோட்டத்தில் மரம் ஒண்ணும்;
பழத் தோட்டத்தில் மரம் ரெண்டாம்;
சின்ன வயது முதற் கொண்டு;
சிவன் எனக்கோ உன்மேல்தான்"

அவர்கள், நெற்றி முட்ட வளர்ந்திருக்கும் ரை கோதுமைப் பயிரின் ஊடாக ஒருவர்மீது ஒருவர் சாய்ந்து கொண்டு இடை வெளியாக இருக்கும் ஒரு இடத்தைப் பார்த்துப் போனார்கள். சூரியன் பூதாகாரமாக, பித்தளைத் தகட்டைப் போல உதயமாகி மலைக்கு மேலே வரும்போது கருகிறமான ரை கோதுமைப் பயிரின் மத்தியில் இரண்டு தலைகள் தெரிந்தன. இப்படி வெகு நேரம் அந்த இருவரும் நடந்து சென்றனர். கடைசி வரைக்கும் பயிர்கள் அவர்களைப் பூரணமாக மறைக்கவில்லை.

கோவிலில் நிற்கும் நம் இளைஞனின் மூடிய விழிகளிலிருந்து கண்ணீர் பெருகி வழிந்தது. தன்னுடைய கைகளை இறுக நெறித்துப் பிடித்துக்கொண்டு நின்றான். அவனறியாத சொற்கள், காதலுக்காக ஆசை கொள்ளும் சொற்கள் தன்னை யறியாமல் அவன் உதடுகளை அசைத்தன.

மனக் காட்சியில் அவன் எங்கோ கடல் அகட்டில் அமிழ்ந்து அமிழ்ந்து எழும் ஒரு பெண்ணின் வாரிவிடப்பட்ட நீண்ட கூந்தலையும், ஈரம் படிந்த கண்களையும் கண்டான். இது வரையும் கண்டறியாத ஒரு சக்தி, எடுத்துக் கூற முடியாத இனிமை பொங்கும் ஒரு சக்தி, உதறிக் களையவோ, அடக்கிவிடவோ முடியாத ஒரு சக்தி அவனுள்ளே எழுந்து அவனைத் தூரத்தே பரந்த வெளிக்குத் தூக்கிச் சென்றது. அவனுடைய ஆத்மா தன் விலங்குகளை ஒடித்துத் தூர எறிந்து விட்டு, துள்ளிக் குதிப்பதற்காகப் பாயும் குதிரைக் குட்டியைப் போல, சுதந்தர வெறியோடு சீறிப் பாய்ந்தது...

✲

இரண்டுக்கும் வித்தியாசம்!

முதலாளித்துவத்தின் அடிப்படையான குறை என்ன வென்றால், அதனுடைய நன்மைகளில் எல்லோருக்கும் சமபங்கு கிடையாது.

சமதர்மத்தின் அடிப் படைச் சிறப்பு என்ன வென்றால், அதன் கீழ் துன்பங்களில் எல்லோருக்கும் சமபங்கு இருக்கிறது,

—வின்ஸ்டன் சர்ச்சில்

ஈரல் குலை கட்டிவியாதிகள் குணப்படுத்த முடியும்,

ஈரல் குலைகட்டி வியாதிகளைக் கண்டு பயப்படக் கூடிய காலம் போய்விட்டது. வியாதி மிகவும் முற்றிவிட்டாலொழிய ஓர் அரிய உயிரைக் காப்பாற்ற முடியும்.

கீழ்கண்ட அறிகுறிகள் சந்தேகிக்க கூடியவை

அடிக்கடி ஜுரம் ஏற்படுதல், மலச்சிக்கல், அதிக மலப்போக்கு, வாந்தி, பசியின்மை, வயறு பொருமல், சோர்ந்து இருத்தல், அடிக்கடி சிணு சிணுத்தல்.

ஆரம்பத்திலேயே ஜாக்கிரதை வேண்டும்

அசட்டை செய்தோ, சரியான சிகிச்சைத் தவரினலோ ஆபத்தாய் முடியும்.

ஜம்மியின்

லிவர்க்யூர்

உபயோகியுங்கள்

குழந்தையின், ஈரல் குலைக்கட்டிக்கு ஜம்மியின் லிவர்க்யூர் உபயோகியுங்கள். எல்லா விடங்களிலும் விற்கப்படுகின்றன

ஜம்மி வெங்கிட்டரமணய்யா & சன்ஸ்

மைலாபூர் — மதராஸ்.

பிராஞ்சுகள்: — பம்பாய், கல்கத்தா, லக்னோ, திருச்சினப்பள்ளி, பெங்களூர், கும்பகோணம்.

J.N. 34 TM

வாழையடி வாழையாக வந்த நம் கூந்தல் வளர்ப்புக் கலையின்

★ பொக்கிஷம் ★

ஜாப்கோ

ஹேர் குரோயர்

இளவயதில் ஏற்படும் நரையைப் போக்கி, உதிரும் கேசத்தை நிறுத்தி கூந்தலை நீண்டு வளரச்

— செய்யும் —

ஜயபாரதம் கம்பெனி

மல்லேஸ்வரம் ● பெங்களூர்

பர்னிச்சர்களுக்கு பெயர் பெற்றது

ரென் கம்பெனியே



சென்னையிலுள்ள எங்கள் வாடிக்கைக்
காரர்களில் ஒருவருடைய வீட்டின்
உட்பக்கம், சில நாட்களுக்கு முன்
எங்களால் அலங்கரிக்கப்பட்டது

ரென் பென்னட் அண்ட் கம்பெனி

(இந்தியா) லிமிடெட்

பர்னிச்சர்கள் தயாரிப்பவர்கள்

34, மவுண்ட் ரோடு - சென்னை

கைபாத்த பொழைப்பு

கொத்தமங்கலம் சுப்பு

★

கைபாத்துப் பொழைக்கிறதே யாச்சு—ரெண்டு
கையிருந்தும் காரியத்துக் காகாமப் போச்சு

கோப்பையிலே காப்பிகுடிக் கோணும்—இந்தக்
கோப்பைபண்ணிச் சீனத்தான் கொண்டுவர வேணும்

பல்லுப்பிசின் பத்தெட்டு தினுசு—இதைப்
பரபரன்னு தேய்க்கவே பலவாட்டம் புருசு

முகவெண்ணை தடவிக்கிட வேணும்—இதில்
மோசம்வந்து விட்டாலோ முகம்வெந்து காணும்

தேக்கிறது அசல்நாட்டுச் சோப்பு—இதில்
திளங்கரையும் பணத்துக்கு ஸ்டர்லிங்கு டிராப்பு

பொடிபூசிக் கொள்ளஒரு டப்பா—இதிலே
போரபணம் கொஞ்சமோ கொள்ளைகொள்ளை யப்பா

செம்பட்டை மயிர்விரும்பும் தேசம்—அது
செஞ்சுதரும் ஹேர்ஆயில் விரும்புது நம் கேசம்

சிகரெட்டுப் புகைவிடவும் வேணும்—இதிலே
செலவாகும் பணம்மட்டும் சீமையிலே காணும்

களடாவில் தட்டிவரும் பிலேடு—ஒரு
கப்பல் வரத்தில் லாட்டி தம்பிமுகம் காடு

பொழைத்தியான் கைபாத்த பொழைப்பு—அவன்
போனாலும் நம்பளுக்கு தட்டுமோ மலைப்பு?

அணுக் குண்டு சாதித்தவை

சி. இ. எம். ஜோட்

அணுக் குண்டு முக்கியமாக ஒரு காரியத்தைச் சாதித்திருக்கிறது. போரின் மேலிருந்த மோகத்தை அது ஒழித்து விட்டது. 'மனிதனின் உயர்ந்த பண்புகளுக்கும் திறமைகளுக்கும் யுத்தமே அஸ்திவாரம்' என்று ரஸ்கின் கூறினர். இனி யாரும் அப்படிப் பேச முடியாது. நம் காலத்தில் கூட இதே மாதிரி நடந்து வருகிறது. வேறு ஐரோப்பிய உதாரணங்கள் இருக்கட்டும். சர். ஆர்தர் கீத் அவர்களை எடுத்துக் கொள்வோம்.

"ஒரு தோட்டத்தில் செடி கொடிகளிடையே வேண்டாத வளர்ச்சியை வெட்டி எறிவதன் மூலம் தோட்டக்காரன் அவற்றின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு வழி செய்கிருன். அதே போல இயற்கையும் தேவையில்லாத வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதன் மூலம் மனித சமுதாயமாகிற தோட்டத்தை ஆரோக்கிய நந்நிலையில் வைத்திருக்கிருள். யுத்தம் என்கிற கருவி மூலம் இயற்கை இந்த வேலையைச் செய்து முடிக்கிருள். அவளுடைய சேவைகள் வாழ்விற்கு இன்றியமையாதனவாகும்" என்று 1931-ல் அபர்டீன் பல்கலைக் கழக மாணவருக்கு நிகழ்த்திய தமது தேர்தல் பிரசங்கத்தில் அவர் கூறியுள்ளார். வாழத் தகுதியற்றவரை அழித்து ஒழிப்பதன்மூலம் யுத்தம் உயிர் நூல் முறைப்படி உபயோகமான ஒரு காரியத்தைச் செய்கிறது என்று இனி எவருமே சொல்ல முடியாதென்று எண்ணுகிறேன்.

"இருபது வருஷங்களுக்குள் என்னென்ன நிகழப் போகிறதோ!" என்று பூமிக்கடியில் ஓடும் ரயில்வேயில் வேலை செய்யும் தொழிலாளி ஒருவன் திகைத்தானும். உண்மையில் மக்கள் மனதில் இத்தகைய திகைப்பே குடி கொண்டிருக்கிறது. எத்தனை நாளைக்கு இந்த மாதிரி இருக்கப் போகிறது? அதிக நாளைக்கு இல்லை என்றே எண்ணுகிறேன். சந்தர்ப்பத்திற்கு ஏற்ப மனம் அநுசரித்துக் கொள்ளுகிறது. முக்கியமாக அதிர்ச்சி, பயம்-இவற்றைத் தாங்கும் சக்தியும் அதிவிரைவில் குறைந்து போகிறது. செய்திப் பத்திரிகைகள் தங்கள் சிந்தனைகளில் தேசத்தையே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. கணித வாக்கியத்தைப் பிரதானமாக வைத்து எண்ணுவது அவைகளின் இயற்கைக்கு மாருகத் தோன்றுகிறது. சீக்கிரமே அவைகளின் போக்கிலே மாறுதல் ஏற்படலாம். பத்திரிகைகள் இன்று பொது ஜன அபிப்பிராயத்தைப் பிரதிபலிக்கின்றன. இந்தப் பழக்கத்தைக் கைவிட்டு, பொது ஜன அபிப்பிராயத்தை

'அணுவில் அடைந்து கிடக்கும் சக்திகளை வெளிப்படுத்தும் புதுமையை மனிதன் கண்டு பிடித்தான். மனித ஆதிக்கத்துக்கு அதுவே உலை வைத்துவிட்டது...' வோர்ல்டு ரெவ்யூ பத்திரிகையில் சி. இ. எம். ஜோட் எழுதிய 'அணுக் குண்டு பற்றிய சிந்தனைகள்' என்ற கட்டுரையின் தமிழாக்கம்.

உருவாக்கவும், தலைமை தாங்கி மிகவும் மாறுன ஒரு நிலைக்கு அதனை நடத்திச் செல்லவும் பத்திரிகைகள் முன் வரலாம்.

தொழிற் கட்சி சர்க்கார் அங்கத்தினர்களுக்கு இது போன்ற விஷயங்கள் தெரியா தென்றோ அல்லது இவற்றால் அவர்கள் பாதிக்கப் படுவதில்லை என்றோ நம்புவது சிரமமா யிருக்கிறது. "அவர்களுடைய அதிகாரிகள் அவர்கள்மேல் ஆதிக்கம் செலுத்துவர்; அவர்களுடைய எண்ணத்தையும் கோணலான பாதையில் செலுத்துவர். தேச நலத்திற்குகந்ததாகவும்,லாபகரமாகவும் இருப்பதைச் செய்து முடித்துவிட வேண்டு மென்பதே வெளி நாட்டிலாகா வின் கொள்கையாகும். அதன் நோக்கம் எல்லாம் ருஷ்யாவோடு செய்யும் பேரத்தில் அணுக் குண்டு ரகசியத்தைத் தனக்குச் சாதகமாக எப்படிப் பயன் படுத்திக் கொள்வது என்பதுதான். சம பலக் கொள்கைச் சூதாட்டத்தில் அணுக் குண்டு ஒரு 'தடை' ஆகக் கருதப் படுகிறது. வேறு விதமாக நினைப்பதற்கு வெளி நாட்டிலாகாவின் பயிற்சியும் சம்பிரதாயமும் எப்படி இடங் கொடுக்கும்? தொழில் சர்க்கார் அங்கத்தினர்கள் வேறு எதையேனும் பற்றித் தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருப்பர். அவர்கள் கவனத்தை ஈர்க்கத்தான் அநேகம் பிரச்சினைகள் இருக்கின்றனவே. எதேச்சாதிகாரத்தை அவர்களாலும் சமாளிக்க முடியாது போய்விடும்'' என்றெல்லாம் கூறப்படலாம்.

அப்படியும் ஒரு வேளை இருக்கலாம். கடந்த நூறு வருஷ காலத்தில், தேசங்களின் சரித்திரத்தை நோக்கும்போது, 'அவ்வாறு நடக்காது' என்று அழுத்தமாக உறுதி கூற யாரால் முடியும்? அமெரிக்காவிற்கும் இங்கிலாந்திற்குமே சொந்தமாக விருக்கும் அணுக் குண்டு ரகசியம் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையின் ஐம்பெரும் அங்கத்தினரும் அறிந்த ரகசியமாக மாற வேண்டும். பிரிட்டிஷ் பிரதம மந்திரியும் இது விஷயமாக முயற்சி யெடுத்து இதனைச் சாத்தியமாக்க வேண்டும். சாத்தியமற்றது என்று தோன்றுவதும் நம்மை யெல்லாம் வெகு நாளாக ஏமாற்றி வருவதுமான சர்வதேச பாதுகாப்புச் சேனை என்ற கனவு அப்போது நினைவாகக் கூடும்.

அவ்வாறுனல், அதுவே உலகத்தின் முடிவாக விருக்கும் என்று எண்ணுகிறேன். இந்த முடிவை வருங்காலத்தைச் சேர்ந்த ஒரு சரித்திராசிரியனின் வார்த்தைகளைக் கொண்டு விவரிக்கிறேன். அந்தச் சரித்திராசிரியன் வேறொரு கிரகத்தைச் சேர்ந்தவனாக இருப்பது நல்லது; செவ்வாய் மண்டல வாசிகளின் சரித்திரத்தி லிருந்து ஒரு பகுதியைக் கீழே தருகிறேன். இந்தச் சரித்திரம் செவ்வாய் மண்டல வாசிகள் பூமியில் குடியேறி 10,000 ஆண்டுகளுக்குப் பிறகு எழுதப்பட்டதாகும். அதில் உள்ள விஷயம் வருமாறு:

"நமக்கு அருகாமையி லுள்ள பூமி மண்டலத்தில் உயிர் வகைகளின் பரிணமத்தில் 'ஊர்வன' போய், 'நடப்பன' தோன்றி யிருந்தன. அவைகளில் 'மூளை படைத்த மனிதர்கள்' ஒரு பகுதியாகும். பிற உயிர் வகைகளை விட இவர்கள் உடல் வலுக் குறைந்தவர்கள். உயிர் நூல் பூர்வமாகச் சங்கடம் நிறைந்த

காலத்தில் இவர்களுடைய சந்ததி யினர் செயலற்றிருந்தார்கள். உயிர்த்திருப்பதற்குச் சாதகமான நிலையில் இல்லாததால், சீதோஷ்ணத்தின் தீவிரங்களிலிருந்து தப்ப, மற்ற மிருகங்களின் தோலை இவர்கள் ஆடையாக அணிந்து கொண்டனர். ஆனால் இவர்கள் தந்திரம் மிகுந்தவர்கள். இருண்ட மனம் படைத்த நம் எழுத்தாளர், இதற்கும் நம் அறிவிற்கும் ஏதோ ஒற்றுமை இருப்பதாகக் கூறுகிறார்கள். இந்த மனிதர்கள் தங்கள் சாமர்த்தியத்தால் பூமியின் எஞ்சிய பகுதி முழுவதும் தம்முடைய ஆதிக்கத்தைப் பூரணமாக ஸ்தாபித்துக் கொண்டார்கள். இதர உயிர்வகைகளை வேட்டையாடத் தம் ஆதிக்கத்தை இவர்கள் உபயோகித்துக் கொண்டார்கள். விளையாட்டு என்பதற்காக உயிர் வகைகளை வேட்டையாடினார்கள். பிற உயிர்களைக் கொல்லுவதுதான் உயர்ந்த வாழ்வு என்று ஆண்கள் கருதினார்கள். பொய்க் கவுரவத்திற்காகவும் வேட்டையாடினார்கள். பெண்களோ, பிற உயிர்களின் தோல்களையும், சில சமயங்களில் அவைகளின் உயிரற்ற உடலையும் உடையாக அணிந்து கொண்டார்கள். தங்கள் உடற் கவர்ச்சியை அதிகரிக்கவே அவர்கள் அப்படிச் செய்தார்கள். இந்த மனிதர்கள் மிகவும் பயங்கரமானவர்கள். ஆனால் இவர்கள் சதா சச்சரவு செய்து கொள்ளும் இயல்புடையவர்கள். பரஸ்பரம் சச்சரவுகளிலும் சண்டைகளிலும் ஈடுபட்டு இவர்கள் தங்கள் சக்தியையெல்லாம் நாசம் செய்து வந்ததால் பலவீனமடைந்தார்கள். இல்லாவிடில் பூமியில் வேறு வித உயிர்களின் புல் பூண்டே இல்லாது இவர்கள் அழித்து விட்டிருப்பார்கள். அணுவில் அடைந்து கிடக்கும் சக்திகளை வெளிப்படுத்தும் புதுமையை மனிதன் கண்டு பிடித்தான். மனித ஆதிக்கத்துக்கு அதுவே உலை வைத்து விட்டது. மனிதன் இந்த மகத்தான சக்தியைத் தன்னையே அடியோடு அழித்துக் கொள்ள உபயோகித்துக் கொண்டான்.''

எதிர் காலத்தைப் பற்றிய நம்பிக்கையோடு சரித்திராசிரியர்கள் முடிப்பது வழக்கம். நானும் அவர்களுடைய முறையையே பின்பற்ற விரும்புகிறேன். ''பிரபஞ்சத்தில் இறைவனுடைய அருளாட்சி நடக்கிறதென்பதற்கு, தன் துஷ்டத்தனத்தினாலேயே அழிந்துபோன மனிதர்களின் கதையைச் செவ்வாய் மண்டலப் பூசாரிகள் உதாரணமாக அடிக்கடி எடுத்துக் காட்டுகிறார்கள்'' என்று, மேலே கூறிய செவ்வாய் மண்டலச் சரித்திரத்துக்கு, இந்தச் சிறிய அநுபந்தத்தையும் சேர்த்து வைக்கிறேன்.

✲

உலகப் போக்கு

உலகம் திருடனையும் கொலைகாரனையும் மன்னித்து விடுகிறது. ஆனால், எதையும் எதிர்பாராது உதவுபவனை அது வெறுக்கிறது.

—மைக்கேல் ஆர்லென்

எல்லோரும் செய்யக்கூடியது

இன்னொரு மனிதன் பேசுவதை அநுதாபத்தோடு கேட்டுக் கொண்டிருப்பது மிகவும் சிநேகபாவமான செய்கையாகும். இதை நாம் எல்லோரும் செய்ய முடியும்.

—ஸோரென் கேரேசல்

சக்தி கொள்ளடா !

பாரதி

ஓம்.

புதுச்சேரி
19 ஜூலை 1915

எனதருமைத் தம்பியாகிய ஸ்ரீ. நெல்லையப்ப பிள்ளைக்குப் பராசக்தி நன்கு காத்திடுக.

தம்பி — மாதத்துக்கு மாதம், நாளுக்கு நாள், நினதறிவு மலர்ச்சி பெற்று வருவதைக் காண்கிறேன். நினது உள்ளக்கமலத்திலே பேரறிவாகிய உள்-ஞாயிற்றின் கதிர்கள் விரைவிலே [illegible] நினக்கு நல்லின்பம் உண்டாகுமென்றே கருதுகிறேன்.

" " "

[illegible] நெஞ்சம் இளகி விரிவெய்த விரிவெய்த அறிவிலே சுடர் ஏறுகிறது. நம்மிலும் மெலியாருக்கு நாம் இரங்கி அவர்களை நமக்கு நிகராகச் செய்து விட வேண்டுமென்று பாடுபடுவதிலே நாம் வலிமை பெறுவதற்கு வழியாகும். வேறு வழியில்லை.

" " "

ஹா! உனக்கு ஹிந்தி, மராட்டு முதலிய வடநாட்டு பாஷைகள் தெரிந்திருந்து, அந்த பாஷைப் பத்திரிகைகள் என்ன அற்புதமான புதுமை பெற்றுள்ளன

வசனத்தில் கவிதை வேண்டுமா? இதோ: முத்து முத்தான எழுத்தில், திட்டுத் திட்டாக வசன கவிதை.

பக்கம் - 2

என்பதை நேரிடத் தெரிந்து கொள்ள முடியுமானால் — தமிழ் நாட்டாருக்கு எத்தனை நன்மையுண்டாகும்! தமிழ், தமிழ், தமிழ் - என்று எப்போதும் தமிழை வளர்ப்பதே கடமையாகக் கொண்டு. ஆனால் புதிய புதிய செய்தி, புதிய புதிய யோசனை, புதிய புதிய உண்மை, புதிய புதிய இன்பம் - தமிழில் ஏறிக் கொண்டே போக வேண்டும்.

" "

" "

தம்பி, — நான் ஏது செய்வேனடா!
தமிழை விட மற்றொரு பாஷை சுகமாக இருப்பதைப் பார்க்கும் போது எனக்கு வருத்தமுண்டாகிறது.
தமிழனை விட மற்றொரு ஜாதியான் அறிவிலும், வலிமையிலும் உயர்ந்திருப்பது எனக்கு சம்மதமில்லை.
தமிழச்சியைக் காட்டிலும் மற்றொரு ஜாதிக்காரி அழகாயிருப்பதைக் கண்டால் என் மனம் புண்படுகிறது.
தம்பி— உள்ளமே உலகம்.
ஏறு! ஏறு! ஏறு! மேலே, மேலே, மேலே! நிற்கும் நிலையிலிருந்து கீழே விழாதபடி கயிறுகள் கட்டி வைத்துக் கொண்டு பிழைக்க முயற்சி பண்ணும் ஈ: பழங்காலத்து பேர்களைக் கண்டு உடல் குலுக்கச் சிரி.
உனக்குச் சிறகுகள் தோன்றுக. பறந்து போ.

பக்கம் — 3

ஜய! பாடு— வேலை, வேலை, வேலை,

தம்பி — தமிழ்நாடு வாழ்க என்றெழுது.

தமிழ்நாட்டின் நோய்கள் தீர்க என்றெழுது.

தமிழ்நாட்டில் வீதிதோறும் தமிழ்ப்பள்ளிக்கூடங்கள் மலிக என்றெழுது.

அந்தத் தமிழ்ப் பள்ளிக்கூடங்களிலே கவிதை-கலை சொல்லும் பயிற்சி பெற்று வாழ்க என்றெழுது.

தமிழ் நாட்டில் ஒரே ஜாதி தான் உண்டு — அதன் பெயர் தமிழ் ஜாதி அது ஆர்யஜாதி என்ற குடும்பத்திலே தலைச்சிறந்தது என்றெழுது.

ஆணும் பெண்ணும் — உயிரின் இரண்டு கலைகள் என்றெழுது.

அவை ஒன்றிலொன்று தாழ்வில்லை என்றெழுது.

பெண்ணைத் தாழ்மை செய்தோன் கண்ணைக் குத்திக் கொண்டான் என்றெழுது.

பெண்ணை அடைத்தவன் கண்ணை அடைத்தான் என்றெழுது.

தொழில்கள், தொழில்கள் தொழில்கள் என்று கூவு.

பக்கம் — 4.

தப்பாத வேதம் சொல்பவனைக் காட்டிலும் நன்றாகச் சிரைப்பவன் மேல்நிலைத்தான் என்று கூவு. வியாபாரம் வளர்க, யந்திரங்கள் பெருகுக. முயற்சிகள் ஓங்குக. ஸங்கீதம், சிற்பம், யந்திரநூல், பூமிநூல், வானநூல், இயற்கை நூலின் ஆயிரம் கலைகள் இவை தமிழ் நாட்டிலே மலிந்திடுக என்று முழங்கு.

சக்தி, சக்தி, சக்தி, என்று பாடு.

தம்பி — நீ வாழ்க.

" "

"

உனது கடிதம் கிடைத்தது. குழந்தைக்கு உடம்பு சௌக்கியமில்லாமல் இருந்தபடியால் உடனே "ஜவாப்" எழுத முடியவில்லை. குழந்தை புதிய உயிர் கொண்டது. இன்று உன் விலாசத்துக்கு "நாட்டுப் பாட்டுக்கள்" அனுப்புகிறேன். அவற்றைப் பகுதி பகுதியாக உனது பத்திரிகையிலும் ஞானபானுவிலும் ப்ரசுரம் செய்வித்திடு. "புதுமைப் பெண்" என்றொரு பாட்டு அனுப்புகிறேன். அதைத் தவறாமல் உடனே அச்சிட்டு அதன் கருத்தை விளக்கி எழுதுக. எங்கேனும், எப்படியேனும் பணம் கண்டு பிடித்து ஒரு நண்பர் பெயரால் நமக்கு அனுப்புக. தம்பி — உனக்கேனடா இது கடமையென்று தோன்றவில்லை? நீ வாழ்க.

உனதன்புள்ள
பாரதி



சுவை நிரம்பியது

சுலபமாய் ஜீரணமாகிறது

சுத்தமானது

விடமின் அடங்கியது

டால்டாவில் வறுத்த பூரிகள் வாயில் கரைகின்றன—மேலும் ஊக்கத்தையும் அளிக்கின்றன!

டால்டா உங்கள் தின்பண்டங்களை ருசியுள்ளதாகச் செய்யும் வஸ்துமட்டுமன்று—அதுவே ஊக்கமளிக்கும் உணவு! எளிதில் ஜீரணமாகக் கூடியதும், விடமின் நிரம்பியதுமான இச் சமையல் செய்ய உதவும் சாதனத்தின் அறிந்த சத்தையளிக்கும் திறமையைக்கொண்டு உங்கள் தினந்தோறுமுள்ள சாப்பாட்டைச் சீர்படுத்திக் கொள்ளுங்கள். டால்டா ஒவ்வொரு ஸ்திரீக்கும் ஒரு நன்கொடை—அது அவர் தயாரிக்கும் சாதாரண தின்பண்டங்களுக்கு விசேஷச் சுவையையளிப்பதோடு அவர் குடும்பத்திற்கு அதிகப்படியான ஊக்கத்தையும் கொடுக்கிறது.

★ஆங்கிலத்தில் மட்டும் எழுதப்பட்டுள்ள டால்டா சமையல் புத்தகத்தின் உதவியுடன் உங்கள் சாப்பாட்டுத் திட்டத்தை அமையுங்கள். சத்தைத் தரும் திறமைக்கென ஆராய்ந்தெடுத்த சுவையுள்ள 150-க்கு மேற்பட்ட இந்தியத் தின்பண்டங்களைப் பக்குவம செய்யும் முறைகள் இதில் அடங்கியிருக்கின்றன. உங்கள் புத்தகத்திற்கு Dept. **A462** P.O. Box No. 353, Bombay, என்ற விலாசத்திறகு நான்கு அணு ஸ்டாம்பு அனுப்புங்கள்.

HVM. 48-50 TM

THE HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD.

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி

லிமிடெட்

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

எங்களுடைய விசேஷமான நூல்கள்:

5,00,000 நூற்கும் கதிர்கள்	ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக் கேற்றிய நூல்.	நம்பர் 80 வரை நூல்கள்

●

நாங்கள் சப்ளை செய்வது:

கைத்தறி, இயந்திரத்தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப் போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றது.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை.

●

ஐக்கிய மாகர்ண சர்க்கார் தங்கள் அறிக்கையில், இந்தியாவிலே நூற்கப்படும் நூல்களில், எங்கள் நூல்கள் மிருதுத் தன்மைக்கும், சன்னத்திற்கும், நேர்த்திக்கும், அழுத்தத்திற்கும் மிகச் சிறந்தவை யென்றும், எல்லா நெசவு தொழிலாளர்களும் விரும்புவதாகவும் கூறுகிறார்கள்.

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மானேஜர்கள்

மார்க்ஸீய பொருளாதாரம்

ரா. ஹாலாஸ்யநாதன்

நமது கண் முன்பு இரண்டு உலகங்கள் நிற்கின்றன. பஞ்சம், பட்டினி, வேலையில்லாத் திண்டாட்டம் முதலியன கோர தாண்டவமாடுகின்றன. மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் திட்டம் கிடையாது. லாபத்தை இன்னும் எப்படி அதிகரிப்பது என்பதற்கே திட்டம். எனவே, பொருளாதார நெருக்கடி சமூகத்தையே அரித்துத் தின்றுவருகிறது. இது தான் முதலாளித்துவ உலகம். பிரிட்டன், அமெரிக்கா, இந்தியா முதலிய நாடுகளின் நிலைமை இதுதான்.

சமதர்ம உலகத்தில் பஞ்சம் என்ற பேச்சே இல்லை. வேலையில்லாத் திண்டாட்டம் மருந்துக்குக் கூடக் கிடையாது. மக்கள் வாழ்க்கையை இன்னும் எப்படி உயர்த்துவது என்பதை அடிப்படையாகக் கொண்ட திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. எங்கும் சுபீட்சம் இன்ப நடம் புரிகிறது. ஸோவியத் யூனியனிலுள்ள பதினாறு குடியரசுகளின் நிலைமை இது தான்.

பஞ்சத்தாலும், பட்டினியாலும், வேலையில்லாத் திண்டாட்டத்தாலும் தவியாய்த் தவிக்கும் கோடானு கோடி இந்தியர்கள், சுதந்தர, சுபீட்ச இந்தியாவைச் சமைக்க விரும்பும் மக்கள், "ஸோவியத்யூனியனில் மாத்திரம் ஏன் பஞ்சமில்லை, பட்டினியில்லை, வேலையில்லாத் திண்டாட்டமில்லை எந்த அடிப்படையில் புது உலகத்தைச் சிருஷ்டித்திருக்கிறார்கள்? நாம் ஏன் அந்தப் பாதையில் செல்லக்கூடாது?" என்று கேட்கிறார்கள்.

மார்க்ஸீயத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு மனித சமூகத்தின் வளர்ச்சியை ஆதி நிலையிலிருந்து ஆராய்ச்சி செய்து எழுதப் பெறும் தொடர் கட்டுரைகளில் இது முதலாவதாகும். அடுத்த கட்டுரை 'புராதன பொது வுடைமைச் சமூகம்' பற்றியது.

சோவியத் மக்கள் 'பொதுவுடைமைத் தத்துவம்' (கம்யூனிஸம்) அல்லது 'மார்க்ஸ் தத்துவத்'தை (மார்க்ஸீயம்) பின்பற்றி, பூலோக சுவர்க்கத்தை ருஷ்யாவில் சிருஷ்டித்தார்கள்.

மார்க்ஸீயம், அல்லது பொதுவுடைமை என்றால் என்ன?

இயற்கையிலும், சமூகத்திலும் ஏன் மாற்றங்கள் ஏற்படுகின்றன? எப்படி வளர்ச்சி ஏற்படுகிறது? தொழிலாளி, முதலாளி என ஏன் சமூகம் இரண்டு முகாம்களாகப் பிரிந்து கிடக்கின்றது?......இந்தக் கேள்விகளுக்கு விடை கண்டு பிடிக்க, சுமார் அறுபது வருடங்கள் கார்ல் மார்க்ஸ், உலகத்தையும், மனித சமூகத்தையும் நுணுக்கமாக ஆராய்ச்சி செய்தார். பதிலையும் கண்டு பிடித்தார். இயற்கையிலும், சமூகத்திலும் ஏற்படும் மாற்றங்களுக்கும், வளர்ச்சிக்கும் பொது விதி யிருப்பதை விஞ்ஞான ரீதியில் விவரித்தார். இதற்குத் தான் மார்க்ஸீயம் அல்லது கம்யூனிஸம் என்று பெயர்.

" இதுவரையிலும் தத்துவ ஞானிகள் உலகத்தைப் பற்றிப்

பல்வேறு விதத்தில் வியாக்கியானம் செய்தார்கள். அவர்கள் செய்த காரியம் அவ்வளவு தான். ஆனல், அதை எப்படி மாற்றியமைப்பது என்பதே முக்கியமான பிரச்சினை" என்று மார்க்ஸ் கூறுகிருர்.

ஆராய்ச்சியின் பலனைக் கிடைத்த பொது விதி, எப்படிச் சமூகத்தை—உதாரணமாக இந்த முதலாளித்துவ சமூகத்தை—மாற்றி யமைக்கலாம் என்பதை விஞ்ஞான ரீதியாக விவரிக்கிறது.

மனிதர்களும், மனித சமூகமும் இயற்கையின் ஒரு பாகம். உலகம் வளரும்பொழுது, மனித வர்க்கமும் வளர்கிறது. மனிதனுடைய எண்ணங்களும் வளர்ச்சியடைகின்றன. இது நாம் கண் கூடாகக் காணும் காட்சி. சரித்திரத்தின் வாயிலாகத் தெரிந்து கொண்ட உண்மை. எனவே, முதலில், லோகாயத வஸ்துக்கள் தான் இருக்கின்றன. அது நமது அறிவுக்குக் கீழ்ப்படிந்ததல்ல. சுதந்தரமான அந்த வஸ்துவைத் தான் மனம் பிரதிபலிக்கிறது. முதலில் வஸ்து, இரண்டாவதாக அறிவு. இது தான் மார்க்ஸீயத்தின் 'லோகாயதக் கண்ணேட்டம்.'

மேலும் உலகம் மாயமானதல்ல; தெரிந்து கொள்ளமுடியாத வஸ்து வல்ல. அதன் சூட்சுமங்களை அறிந்து கொள்ளலாம் என்று லோகாயத வாதம் கூறுகிறது. இது உண்மையல்லவா? நாம் இன்று விஞ்ஞான உலகத்தில் வாழ்கிறேம். நீராவி, மின்சாரம், ரேடியோ, அணுச்சக்தி முதலியவைகளைக் கண்டு பிடித்திருக்கிறேம்......

மார்க்ஸீயம் இயற்கையை தர்க்க ரீதியான முறையில் (டயலக்டிகல்) ஆராய்ச்சி செய்கிறது. புராதன காலத்தில் கிரேக்கர்கள், எதிரியின் எதிர்வாதத்தைச் சர்ச்சை செய்வதன் மூலமாக உண்மையான முடிவுக்கு வந்தார்கள். இந்த முறை இயற்கைக்கும் அனுஷ்டிக்கப்பட்டது. அதாவது, இயற்கை இயங்கிக் கொண்டேயிருக்கிறது, தொடர்ச்சியாக மாறிக்கொண்டே யிருக்கிறது. எதிரும் புதிருமான சக்திகள் ஒன்றேடொன்று ஊடுருவிப் பாய்ந்து, இரண்டு முரண்பாடான சக்திகள் முட்டி மோதுவதால் வளர்ச்சி ஏற்படுகிறது என்று தர்க்க ரீதியான முறையைக் கொண்டு ஆராய்ச்சி செய்யப்பட்டது. இவ்வாறு ஆராய்ச்சி செய்வதற்குத்தான் தர்க்க இயல் லோகாயத வாதம் (டயலக்டிகல் மெடீரியலிஸம்) என்று பெயர்.

தர்க்க இயல் லோகாயத வாதத்தின், முக்கியமான கோட்பாடுகள் இவை தான்: (1) இயற்கை, அல்லது உலகத்திலுள்ள பொருள்கள் (மனித சமூகம் உள்பட) ஒன்றே டொன்று பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. தனித்திருக்க முடியாது. உதாரணமாக, தண்ணீர் இருக்கிறது. இதைச் சூடாக்கினல், அல்லது குளிர வைத்தால் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் நீராவியாக, அல்லது பனிக்கட்டியாக மாறுகிறது. இவ்வாறு மாற்றமடைவதற்கு ஏனைய சக்திகளும் தேவை.

(2) இயற்கை வஸ்துக்களும், சமூகமும் மாறிக் கொண்டே, வளர்ந்து கொண்டே இருக்கின்றன. உலகம், பல்லாயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பு எப்படி இருந்தது? இப்பொழுது எப்படி இருக்கிறது?...... சமூகமும் இன்றுள்ள நிலைமையிலா

ஆயிரம் வருடங்களுக்கு முன்பு இருந்தது ?

(3) இயற்கை வஸ்துக்களும், சமூகமும் மாறுகிறது, வளர்கிறது. ஆனால், நிதானமாக, படிப்படியாக மாறுதல் ஏற்படுவது கிடையாது. ஒரு குறிப்பிட்ட கட்டத்தில், திடீர் தாவுதல் ஏற்படுகிறது. உதாரணமாக, தண்ணீரையே எடுத்துக் கொள்வோம். அதைச் சூடாக்கினால், அல்லது, குளிர வைத்தால், ஒரு குறிப்பிட்ட கட்டம் வரையிலும் சூடு அதிகமாகிறது, அல்லது குளிர் அதிகமாகிறது. ஆனால், தண்ணீர் தண்ணீராகவே இருக்கிறது குணத்தில் எந்த விதமான மாற்றமும் ஏற்படவில்லை. ஆனால், குறிப்பிட்ட கட்டத்தில் திடீர் தாவுதல் ஏற்படுகிறது. தண்ணீர் நீராவியாக, அல்லது பனிக்கட்டியாக மாறுகிறது. தண்ணீரின் குணம் முற்றும் மாறுகிறது.

மனித சமூகத்திலும் இந்த மாற்றத்தைக் காணலாம். உதாரணமாக ருஷ்யாவைப் பாருங்கள். புரட்சி சக்திகள் வளர்ந்து கொண்டே யிருந்தன. ஒரு கட்டத்தில் புரட்சிசெய்து, திடீரென சமூகத்தின் குணத்தையே (முதலாளித்துவ சமூகத்தை சோஷலிஸ்டு சமூகமாக) மாற்றி விட்டார்கள்.

(4) இயற்கை, அல்லது சமூகத்தில் இரண்டு சக்திகள் இருக்கின்றன. ஒன்று ஆக்க சக்திகள்; மற்றொன்று அழிக்கும் சக்திகள். ஒன்று வளர்ந்து கொண்டே இருக்கிறது, மற்றொன்று அழிந்துகொண்டே இருக்கிறது. எதிரும் புதிருமான இரண்டு முரண்பாடான சக்திகளுக்கு இடையே முட்டி மோதல் நடக்கிறது. ஒன்று வளரப்போகிறது, மற்றொன்று அழியப் போகிறது. இத்தகைய போராட்டத்தின் மூலமாக வளர்ச்சி ஏற்படுகிறது.

இன்று சமூகத்தில், வளர்ந்து வரும் தொழிலாளர்களுக்கும், அழிந்துவரும் முதலாளிகளுக்கு மிடையே போராட்டம் நடக்கிறது. இந்தப் போராட்டத்தின் மூலமாக, ஒரு புதுச் சமூகம்—சோஷலிஸ்டு சமூகம் உதயமாகிறது.

தர்க்க இயல் லோகாயத வாதத்தின் கண்ணோட்டத்தின், அடிப்படையில் சமூகச் சரித்திரத்தை ஆராய்வதற்குத்தான் சரித்திர இயல் லோகாயத வாதம் (ஹிஸ்டாரிகல் மெடீரியலிஸம்) என்று பெயர்.

சமூக மாற்றம் ஏன் ஏற்படுகிறது? எப்படி? மூலகாரணமென்ன? சரித்திர இயல் லோகாயதம் இந்தக் கேள்விகளுக்குப் பதில் கொடுக்கிறது.

மனிதனுக்குத் தேவையான பொருள்களை எப்படிப் பெறுகிறோம், உற்பத்தி முறை என்ன என்பனவற்றை முதலில் தெரிந்து கொள்வோம். மனிதன் உயிர் வாழவேண்டுமானால், உணவு, உடை, வீடு முதலியன, இன்றியமையாதன. இவைகள் வேண்டுமானால், மனிதன் இவைகளை உற்பத்திசெய்ய வேண்டும். இவைகளை உற்பத்தி செய்ய, உற்பத்திக் கருவிகள் வேண்டும். உற்பத்திச் சாதனங்களை உற்பத்தி செய்வதோடு, அவைகளை உபயோகிக்கவும் தெரியவேண்டும்.

உற்பத்திச் சாதனங்களும், உற்பத்திச் சாதனங்களை உபயோகிக்கும் மனிதர்களும்தான், உற்பத்தி சக்திகள்.

மனிதர்கள் இவ்வாறு உற்பத்தி செய்யும் பொழுது, மனிதர்களுக்குள்ளே உறவு ஏற்படுகிறது. இதற்கு உற்பத்தி உறவுகள் என்று பெயர். நிலம், காடு, தண்ணீர், மூலப்பொருள்கள், உற்பத்திச் சாதனங்கள் முதலியன யாருக்குச் சொந்தம்? தனிப்பட்டவர்களா? ஒரு கூட்டத்தினரா? சமூகமா? யார் அவைகளைப் பெற்றிருக்கிறார்கள்?—முதலாளிக்கும், தொழிலாளிக்குமிடையே உள்ள உறவுதான் உற்பத்தி உறவுகள். பாக்டரிகள், மூலப் பொருள்கள், உற்பத்தி செய்த பொருள்கள் அனைத்தும் முதலாளிக்குச் சொந்தம். தொழிலாளிக்கோ, உழைக்கலாம். உழைப்புச் சக்தியை விற்றுக் குறைந்த கூலி பெறலாம். இதுதான் முதலாளி—தொழிலாளி உறவு.

உற்பத்தி முறை, உற்பத்தி உறவுகள் எப்பொழுதும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. உற்பத்திச் சக்திகளில் மாற்றமேற்படும்பொழுது, உற்பத்தி உறவுகளும் மாறுகின்றன.

உதாரணமாக, முதலாளித்துவ சமூகத்தை எடுத்துக்கொள்வோம். நிலப்பிரபுத்துவ சமூகத்தின் இறுதிக் கட்டத்தில் நீராவி மின்சாரம் கண்டுபிடிக்கப் பட்டு, மின்சார முறையில் உற்பத்தி செய்ய ஆரம்பிக்கவும்—அதாவது உற்பத்தி சக்திகளில் மாற்றமேற்பட்ட பொழுது—உற்பத்தி உறவுகளிலும் மாற்றமேற்பட்டது. நிலப்பிரபு, பண்ணை அடிமை என்ற முறை ஒழிந்து, முதலாளி, தொழிலாளி என்ற முறை தலைதூக்கிற்று.

உற்பத்தி முறையில் மாற்றமேற்படும்பொழுது, சமூகமுறையிலும், சமூகக் கட்டுப்பாட்டிலும், அரசியல் ஸ்தாபனங்களிலும்—அதன் முறையிலும், மதசம்பந்தமான கோட்பாட்டிலும்... மாற்றங்கள் ஏற்படுகின்றன. சுருங்கக் கூறின் புதிய சமூக, அரசியல் முறை ஏற்படுகிறது. எனவே, வளர்ச்சியின் வெவ்வேறு கட்டத்தில், மனிதர்கள் வெவ்வேறு உற்பத்தி முறைகளை உபயோகிக்கிறார்கள். வெவ்வேறு வாழ்க்கையையும் நடத்துகிறார்கள். உதாரணமாக, புராதன பொதுவுடைமைச் சமூகத்திலும், அடிமைச் சமூகத்திலும், நிலப்பிரபுத்துவ சமூகத்திலும், முதலாளித்துவ சமூகத்திலும், சோஷலிஸ்டு சமூகத்திலும் வெவ்வேறு உற்பத்தி முறைகளையும், உற்பத்தி உறவுகளையும் இவைகளை ஒட்டி வெவ்வேறு அரசியல், சமூக முறைகளையும் காணலாம்.

எனவே, சமூக வளர்ச்சியின் சரித்திரம் உற்பத்தி முறையினுடைய வளர்ச்சியின் சரித்திரம்—உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியின் சரித்திரம்—மனிதர்களின் உற்பத்தி உறவுகளின் சரித்திரம்தான்.

சமூக வளர்ச்சியின் சரித்திரம் லோகாயதப் பொருள்களை உற்பத்தி செய்கிறவர்களின் சரித்திரம்—அதாவது உழைப்பாளிகள் சரித்திரம். உழைப்பாளிகள் சரித்திரம் என்றால், அடிமைகளின், பண்ணை அடிமைகளின், தொழிலாளர்களின் சரித்திரம். இவர்கள் நடத்திய வர்க்கப் போராட்டத்தின் சரித்திரம்.

முதலாளித்துவ சரித்திராசிரியர்கள் மனித சமூகத்தின் சரித்திரத்தை எப்படி வர்ணிக்கிறார்கள்? தேசங்களுக்கு இடையே நடந்த யுத்தங்களையும், சில தனிப்பட்ட அரசர்களின், அல்

லது ராணுவத் தலைவர்களின், அல்லது ராஜதந்திரிகளின் வீர தீரச் செயல்களை விவரிக்கிறார்கள். சில சமயங்களில் மண், பெண், பொன் ஆசைக்காகவும், மதத்தைக் காக்கவும், தேச கௌரவத்தைப் பாதுகாக்கவும் யுத்தங்கள் நடந்தன என்கிறார்கள்.

"புராதன பொதுவுடைமைச் சமூகத்திற்குப் பின்பு, சரித்திரம் முழுதும் வர்க்கப் போராட்டங்களின் சரித்திரம்தான். (அடிமைக்கும்—எஜமானுக்கும், நிலப் பிரபுவுக்கும்—பண்ணை அடிமைக்கும், முதலாளிக்கும்—தொழிலாளிக்குமிடையே நடந்த வர்க்கப் போராட்டங்கள்தான்!) அதாவது சுரண்டுகிறவர்களுக்கும்—சுரண்டப் படுகிறவர்களுக்கும், ஆளும் வர்க்கத்திற்கும் ஆளப்படுகிற வர்க்கத்திற்கும் இடையே நடக்கும் போராட்டங்கள்..." என்று கம்யூனிஸ்டு அறிக்கையில் மார்க்ஸ் கூறுகிறார்.

இந்தத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு, சமூகம் எப்படி வளர்ச்சியடைந்தது, எப்படி மாற்றங்கள் ஏற்பட்டன, எப்படி சோஷலிஸ்டு சமூகம் தோன்றிற்று என்பன போன்ற விஷயங்களை ஆராய்ந்து பார்ப்போம்.

*

சக்தி • மாத வெளியீடு

தனிப்பிரதி 'தபால்'	0 8	ஆறு மாதம்	3 8
ஒரு வருஷம்	6 0	2 வருஷம்	11 0

ரெஜிஸ்டர் மூலம் பெற விரும்புவோர் பிரதி ஒன்றுக்கு 0-3-0 விகிதம் சேர்த்து அனுப்பவேண்டும்

பர்மா

தனிப்பிரதி	0 9	ஆறு மாதம்	4 0
ஒரு வருஷம்	7 0	2 வருஷம்	13 0

மலேயா, முதலிய வெளி நாடுகளுக்கு

தனிப்பிரதி	0 10	ஆறு மாதம்	4 4
ஒரு வருஷம்	8 0	2 வருஷம்	15 0

SHAKTI KARYALAYAM - ROYAPETTAH, MADRAS

என்ற விலாசத்திற்குச் சந்தாத் தொகை அனுப்பவேண்டும்.

கடல் உப்பா யிருப்பதேன்?

பிரான்சிஸ் மோசஸ்

ஓர் ஊரில் நந்தன், கந்தன் என்று இரு சகோதரர்கள் இருந்தார்கள். அவர்களில் மூத்தவனை கந்தன் பணக்காரன். நந்தனோ மிகவும் ஏழை. மேலும், கந்தன் கருமியாக இருந்ததால் நந்தனுக்கு எந்தவிதமான உதவியும் செய்யவில்லை. அதனால் நந்தன் ஊர் ஊராகச் சுற்றிப் பிச்சையெடுத்துப் பிழைத்து வந்தான். நந்தன் ஏழையாக விருந்தபோதிலும் நல்லவனாக இருந்தான்.

நந்தன் ஒரு நாள் ஓர் மரத்தடியில் உட்கார்ந்துகொண்டு, தான் பிச்சை யெடுத்துவந்த ஆகாரத்தைச் சாப்பிட ஆரம்பித்தான். அப்பொழுது அவன் எதிரே வயது முதிர்ந்த கிழவன் ஒருவன் வந்தான். வயது முதிர்ச்சியால் நடக்க முடியாமல் தள்ளாடிக் கொண்டே அவன் நந்தன் அருகில் வந்து, "சாப்பிட்டு ஒரு வாரமாகிறது; பசி காதை அடைக்கிறது. ஏதாவது சாப்பிட இருந்தால் தா" என்று கேட்டான். நந்தன் தனக்குப் பசியாக இருந்தபோதிலும், கையிலிருந்ததை யெல்லாம் கிழவனுக்குக் கொடுத்தான். அதைச் சாப்பிட்டு முடிந்ததும் கிழவன், திடீரென்று ஒரு கந்தர்வனாக உரு மாறிவிட்டான். அவன் கையில் அழகான சிறிய பெட்டி ஒன்று இருந்தது. நந்தன் பயந்து இரு கைகளையும் கூப்பி வணங்கினான். ஆனால் கந்தர்வன் "பயப்படாதே! நீ பசியாயிருந்தபோதிலும் எனக்கு ஆகாரம் தந்தாய். உனக்கு இப்பெட்டியைத் தருகிறேன். இதைத் திறந்து உனக்கு எது வேண்டுமென்று நீ கேட்கிறாயோ அது உடனே உனக்குக் கிடைக்கும். உனக்குப் போதுமானது வந்தவுடன் 'பந்த்கரோ' என்று சொன்னால் உடனே மூடிக்கொள்ளும்" என்று கூறி நந்தனை ஆசீர்வதித்து விட்டு மறைந்துவிட்டான். நந்தன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

நந்தனுக்கு மிகப் பசியாக இருந்ததால் அப்பெட்டியைத் திறந்து "நல்ல சாப்பாடு வேண்டும்", என்றான். உடனே ஒரு அழகிய தட்டில் விதவிதமான கறிவகையுடன் சாதம் வந்தது. அவன் வயிறார உண்டான். உண்ட மயக்கத்தில் தூக்கம் வந்தது. உடனே அவன் மந்திரப் பெட்டியை நோக்கி, "பஞ்சணை மெத்தையுடன் கூடிய கட்டிலும், விசிறுவதற்குப் பணிப் பெண்களும் வேண்டும்" என்று கூறினான். அழகிய கட்டிலும் விசிறுவதற்கு அழகிய பணிப் பெண்களும் தோன்றினர். அவன் 'பந்த்கரோ' என்று கூறிப் பெட்டியை மூடிவிட்டு, மந்திரத்தால் வந்த கட்டிலில் படுத்து நித்திரை செய்தான். அழகிய பணிப் பெண்கள் மயில் இறகினால் செய்த விசிறியால் விசிறிக்கொண்டே யிருந்தார்கள்.

கடல் நீர் உப்பானது என்பதை எல்லாரும் அறிவர். அதன காரணத்தை விஞ்ஞானம் வேறு விதமாகச் சொல்லக்கூடும். ஆனால் இந்தக் கதை ஆசிரியர் கூறும் காரணம் அழகானது என்பது மட்டுமல்ல, சுவையாகவும் இருக்கிறது. படித்துப் பாருங்கள்!

மறு நாள் பொழுது விடிந்ததும், தன் சொந்த ஊருக்குப் போக அவன் ஆசை கொண்டான். பெட்டியைத் திறந்து, வேலைக் காரப் பெண்களை மறையும்படி செய்துவிட்டு, தன் ஊருக்குத் தன்னைக் கட்டிலோடு கொண்டு போய்ச் சேர்க்கும்படி கூறி ஞன். ஊர் சேர்ந்தவுடன், பெட்டியை நோக்கி, ஒரு அரண் மனையையும், அரண்மனைக்கு வேண்டிய தட்டுமுட்டுச் சாமான்களையும் வரவழைக்கும் படி கூறினன். அவன் கூறிய படியே எல்லாம் வந்தன. பின்பு, அவன் தன்னை நன்கு அலங் கரித்துக்கொண்டு தன் நண்பர் களிடமும், அண்ணனிடமும் தான் பழைய கந்தனே, என்று தெரிவித்துக் கொண்டான்.

ஆனல், மந்திர சக்தியால் தான் பணக்காரன் ஆன வித்தையை மட்டும் அவர்களிடம் கூற வில்லை. அடுத்த நாள் அவர் களுக்கு விருந்தளிக்கப் போவ தாகக் கூறினன். எல்லோரும் அதற்குச் சம்மதித்து, அடுத்த நாள் அவனது அரண்மனைக்குச் சென்றார்கள்.

சாப்பிடும் அறை மிகவும் நன் ருக அலங்கரிக்கப் பட்டிருந்தது. அனைவரும் வரிசையாக உட்கார்ந் தார்கள். நந்தன் தன் மந்திரப் பெட்டியை அவர்கள் முன்பாக வைத்து, அதைத் திறந்து, ஒவ் வொருவர் முன்பும் ஒரு தட்டு வைக்கும்படி கட்டளையிட்டான். அவ்வாறே, ஒரு அழகிய தட்டு வரிசையாக வைக்கப் பட்டது. பின்பு, எல்லாத் தட்டுகளிலும் அறுசுவை ஆகாரம் படைக்கு மாறு சொன்னன். எல்லாத் தட்டுக்களிலும் அப்படியே படைக்கப்பட்டன. எல்லோரும் மந்திரப் பெட்டியின் மந்திர சக்தியை வியந்து கொண்டே சாப்பிட்டார்கள். ஒரு காலத் திலும் தாங்கள் இம்மாதிரி சாப் பாடு சாப்பிட்டதில்லை யென்று சொல்லிவிட்டு, பெட்டி அவன் கைக்கு வந்த கதையைப் பற்றி, கேட்டார்கள். நந்தன், அப் பெட்டி தனக்குக் கிடைத்த விவரத்தைக் கூறித் த்ருமம் செய்வதால் ஏற்படும் பலனைப் பற்றி ஒரு குட்டிப் பிரசங்கம் செய்தான். பின்பு அவனிடம் விடைபெற்றுக் கொண்டு எல் லோரும் தத்தம் வீட்டிற்குச் சென்றார்கள்.

பொருமைக்காரனை கந்தன், அப்பெட்டியை எவ்விதம் அபகரிக்கலாம் என்று யோசிக்க ஆரம்பித்தான். ஒரு எண்ணம் தோன்றியது. மறு நாள் தம்பி யிடம் வந்து, அன்று தன் மகன் பிறந்த தினமாகையால் தான் ஒரு விருந்து வைக்கப் போவ தாகவும், அதற்கு அப்பெட்டியை ஒரு நாள் இரவல் தரவேண்டு மென்றும் கேட்டான். கள்ளம் கபடம் தெரியாத நந்தன், தன் அண்ணன் மேலுள்ள பிரியத்தி ஞல், உடனே பெட்டியைக் கொண்டுவந்து கொடுததான்.

தன் வீடு சென்றதும், கந்தன் அப்பெட்டியை வைத்துக் கொண்டு அவ்வூரிலேயே இருந்து வர முடியாது என்று எண்ணி, அன்று புறப்படவிருந்த கப்பல் ஒன்றில் ஏறி, ரகசியமாக வேறு ஊருக்குக் கிளம்பி விட்டான்.

நடுப்பகலில் வெய்யில் கடுமை யாகவிருந்தது. கப்பலிலிருந்த கந்தனுக்குத் தாகமெடுத்தது. பெட்டியைத் திறந்து ஒரு டம்ளர் மோர் கொண்டு வரும்படி கூறி ஞன். உடனே மோர் வந்தது. மோர் புளிப்பாயிருந்ததால்,

கொஞ்சம் உப்பு கொண்டு வரும்படி கேட்டான். உப்பு வந்தது. மோரில் கலக்கிக் குடித்தான். உப்பு வந்துகொண்டே யிருந்தது. பெட்டியை மூடினல் உப்பு வருவது நிற்கும். ஆனல் பெட்டியை மூடச் செய்ய, 'பந்த் கரோ' என்ற மந்திரம் கந்தனுக்குத் தெரியவில்லை. நந்தனிடம் வாங்கிகொண்டு வந்த அவசரத்தில் அந்த மந்திரத்தைத் தெரிந்து கொள்ளவில்லையே!

"போதும்! நிறுத்து! வேண்டாம்! மூடிக்கொள்!" என்றெல்லாம் கூச்சலிட்டான். ஆனல் உப்பு வருவது நிற்கவில்லை. பெட்டியை என்னவெல்லாமோ செய்து பார்த்தான். பயனில்லை. உப்போ கப்பலை நிரப்பி விட்டது. கப்பலும் அமிழ்ந்து போகும் நிலைக்கு வந்துவிட்டது.

நடந்த விஷயத்தை யறிந்த மாலுமி கந்தனிடம் ஓடிவந்து, "உப்பு வருவதை நிறுத்து. இல்லாவிட்டால் அந்தப் பெட்டியைத் தூக்கிக் கடலில் எறிந்துவிடுவேன்" என்ருன். கந்தனுக்குத் தான் அதை மூடச் செய்யத் தெரியாதே! ஆகையால் மாலுமி, அந்தப் பெட்டியைக் கந்தனிடமிருந்து பிடுங்கிச் சமுத்திரத்திற்குள் எறிந்து விட்டான்.

அம் மந்திரப் பெட்டி கடலுக்குள் அமிழ்ந்தது. ஆனல் இன்றுவரை அது உப்புக் கக்குவதை நிறுத்தவேயில்லை. சமுத்திர ஜலத்துக்குள் இருந்துகொண்டு உப்பைக் கொடுத்துக்கொண்டே யிருக்கிறது. அந்த உப்பும், கரைந்து கொண்டே இருப்பதனல்தான் கடல் நீர் ஒரே உப்பாய்க் கரிக்கிறது!

*

"என்னல் முடியாது!"

1943, ஏப்ரலில் ராணுவத்தில் சேருகையில் வில்லியம் சரோயன் என்ற பிரபல அமெரிக்க ஆசிரியர் பின்வருமாறு கூறினர்:

"முன் எப்போதையும் விட இப்போது நம் நாட்டிலும் உலக முழுவதிலுமே, நான் எழுதுவதைப் போன்ற எழுத்துக்களே முக்கியமாகத் தேவை. நல்ல எழுத்தாளர்கள் தங்கள் நேர்மையையும் திறமையையும் காத்துக்கொள்ள வில்லையானல், மனித வாழ்வில் புண்ணியம் என்பது அடியோடு சிதைந்து போகும். அதை வாழ்வில் திரும்பப் பெறுவதென்பது இயலாமல் போய்விடும்.

வெறும் உடல் பலமே எதிரியின் சக்திகளைப் பயனற்றதாக ஆக்கிவிடுமென்று எண்ணுவது ராணுவ ரீதியாகத் தவருன கருத்து இல்லாவிட்டாலும், கொள்கைப் பூர்வமாகத் தவருன கருத்துதான். இயல்பான ஒரு உலகைச் சிருஷ்டிக்கவே நாம் முயலுகிறோம். ஆனல், ராணுவ உலகம் ஒருபோதும் இயல்பான உலகமாக இருந்தது கிடையாது; அவ்வாறு என்றும் இருக்கவும் முடியாது. கலை உலகில் ராணுவக் கண்ணேட்டம் என்பது பார்க்கப் போனல் மிகவும் சில்லரை விஷயம்

என்னை அவர்கள் என்ன செய்யச் சொல்லுவார்களோ, எனக்குத் தெரியாது. துப்பாக்கி ஏந்தி 'டிரில்' செய்யவோ, உருளைக்கிழங்கு உரிக்கவோ அல்லது வேறு எந்த விதமான வேலையையும் செய்யவோ எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனல், ராணுவத்தை உத்தேசித்து நாடகங்கள் எழுதுவது மட்டும் என்னல் முடியாத காரியம். உத்தரவுக்குக் கீழ்ப் படிந்து எதையும் என்னல் எழுத முடியாது."

"உங்கள் சருமத்தை
லக்ஸ் டாய்லட் சோப்
குளுமையாகவும், அழகுடையதாகவும்
வைத்துக்கொள்ளுகிறது" என்று
சொல்லுகிருர்
ஹஸன்பானோ
LUX
TOILET SOAP
சினிமா நட்சத்திரங்கள் விரும்பும்
அழகையளிக்கும் சோப்!
LTS. 141-111 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED

கும்பகோணம்

டி.எஸ். ஆர். & கம்பெனியின்

கோகுல் கூந்தல் தைலத்தை
கூந்தல் வளர்ச்சிக்கும்
சிரசின் குளிர்ச்சிக்கும்
சந்தனாதி, அரைக்கீரைவிதைத் தைலங்களையும்
உபயோகியுங்கள்

மதராஸ் ஸிட்டி ஏஜண்ட் :
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்
திருவல்லிக்கேணி
மதராஸ்

கோயமுத்தூருக்கு சோல் ஏஜண்ட் :
B. பாலபட்டாபி செட்டியார்
246, வைஸ்யாள் தெரு
கோயம்புத்தூர்

நேர்த்திக்கும்
உறுதிக்கும்

சாரதி
கைத்தறி நெசவுகள்

ஏ. ஆர். பி. சாரதி
தபால் பெட்டி நெ. 45
மதுரை

வாழ்க்கைத் தோழன்

கே. ராமகோடீஸ்வர ராவ்

எல்லாக் கலைஞனையும் போல், கவியும் உலகை உணர்ச்சிகளின் லீலையாகவே காண்கிறான்.

பிறரைப் போலல்லாது, அவன் "சிறையின் நிழல்" தன் மேல் படர்வதை அனுமதிப்பதில்லை. அவன் செல்வாக்குப் பரவும் இடங்களிலெல்லாம் சிறைச் சுவர்கள் தகர்கின்றன. மனித மனம் கட்டற்றுச் சுதந்தரமாய்க் களிகொண்டு திரிகிறது, ஷெல்லியின் வானம்பாடி போல. அழகுச் சிருஷ்டியும் அழகு ரசனையில் தோய்ந்து வரும் சத்திய வேட்கையுமே கவியின் முக்கிய நாட்டங்களாகும். வேதாந்தியைப் போல் அல்லாமல், அவன் வாழ்க்கையை அமைதியோடு, விருப்பு வெறுப்பற்ற நோக்கோடு பார்ப்பதில்லை. அரசியல்வாதியைப் போலவும், அவன் தினசரிச் சச்சரவுகளிலும், சாதாரணக் கவலைகளிலும் தீவிரமாகக் கலந்து கொள்வதில்லை. அவன் தன்னைச் சூழ்ந்து இருப்பவர்களின் சுக துக்கங்களில் பங்கு கொள்ளுகிறான். அதே சமயத்தில், அவைகளுக்கு மேற்பட்ட நிலையிலும் அவனால் வாழ முடிகிறது.

"கவி, வாழ்க்கையை எதிர் மறைப்போக்கிலோ, ஒரு அலட்சிய மனோபாவத்துடனோ அல்லது எல்லாம் அறிந்து விட்டோமென்றே அறிவு அகந்தையுடனோ அணுகுவதில்லை. கவி, வாழ்க்கைப் பாதையில் நம் உடன் வரும் ஒரு வழிப்போக்கன்."
—திருவேணி பத்திரிகைக் கட்டுரையின் சாரம்.

"வாழ்க்கை ஒரு சோதனை, துன்பம் நிறைந்தது. சந்தோஷம் என்பது சாத்தியமில்லை. அது ஒரு வீண் பிரமைதான்" என்று அடிக்கடி கூறி வருகிறார்கள். வாழ்க்கையை, அன்போடு போற்றிப் பேண வேண்டிய ஒரு வெகுமதியாகவே கவி கருதுகிறான். நம் அனுபவத்தை வளம்படுத்த நமக்குக் கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நாம் பழகும் இடங்களில் சிநேக பாவம் ஏற்படுத்தவும், தன்னலமற்ற தியாகத்தைக் கடைப்பிடிக்கவும், முதலில் நாம் வாழ்க்கையில் நம்பிக்கையும் விசுவாசமும் கொள்ள வேண்டுவது அவசியமாகும். சதா நம்பிக்கையோடிருப்பவன் ஒரு ஏமாந்த சோணகிரி அல்ல. மேகத்திற்குப் பின்னால் சூரிய வெளிச்சம் இருப்பதை அறிந்து கொள்ளும் தீர்க்க தரிசனம் அற்றவனை விட, வாழ்வின் அர்த்தத்தை அவன் நன்றாய் அறிந்திருக்கிறான் என்று சொல்லலாம்.

எழுத்தை—அது கவிதையானாலும், வசனமானாலும் சரி—துணைக் கொண்ட இலக்கியச் சிற்பி வாழ்க்கையை அதன் பல்வேறு வர்ணங்களிலும் கண்டு நேசிக்கிறான். அநேகமாய் அவன் இறை அன்பனாகவும் விளங்குகிறான். அவன் வாழ்வை நேசிக்கிறான். ஏனெனில், அது இறைவனால் அளிக்கப்பட்டது.

ஒவ்வொருவருடைய வாழ்வும் அவர் பிறந்த வேளை—சந்தர்ப்பங்கள்—இவற்றால் கட்டுப்படுத்

தப் பட்டிருக்கிறது. நாம் பிறக்க நேரிடும் சூழ்நிலையே நம் வாழ்வின் போக்கை உருவாக்குகிறது. அந்த நிலையில்தான் நாம் வாழ்வில் ஈடுபட்டு வெற்றி காணவேண்டியிருக்கிறது. வெற்றி, வெற்றி என்கிறார்களே, அதன் ரகசியம் என்னவோ?

உணவு, உடை, உறைவிடம்; உடல் நலம், நமது கடமைகளைச் செய்து முடிக்கத் தேவையான உடல் வலு; நம் இயற்கைக்கு ஏற்றதும் நம்முடைய சிறந்த இயல்பைப் பூரணமாக வெளிப்படுத்தக் கூடியதுமான ஒரு தொழிலில் திறமை; பெயர், செல்வம், பதவி, —இவை யெல்லாம் வெற்றியின் தேவைகளாகும். இவைகளின்றி வாழ்வு சுவையற்று ஒரு சுமையாகி விடுகிறது. வேதனை நிறைந்த வேலைகளை யந்திரம் போல் செய்ய நேரிடுகிறது. வாழ்வுப்பாதை மிக நீண்டு சுவாரஸ்ய மற்றுப் போகிறது. அவனுடைய பாதை—பிறருக்கு அவன் காட்டும் பாதை—தன்னை மறுத்தலும், வறட்டுத் துறவுமல்ல—உணர்ச்சிகளை மறுக்கவோ அவற்றை நசுக்கவோ அவன் உபதேசிக்கவில்லை. அதைவிட, அவன் தன் உணர்ச்சிகளைப் பயிற்றி, பரிசுத்தப் படுத்தி அவற்றைச் சாதனமாகக் கொண்டு, தீர்க்கதரிசியின் சமபாவத்தை—கீதை போற்றும் "சம தரிசனத்தை" அடையவே முயலுவான். அன்பு, துவேஷம்; அழகு, அவலட்சணம்; ஒருமைப்பாடு, வேற்றுமை—இந்த ஜதைகளை வேதாந்தி கடக்க முயலுகிறான். ஆனால் கவி, சைத்திரிகன், பாடகன், சிற்பி, இவர்கள் அன்பையும், அழகையும், ஒருமைப் பாட்டையும் போற்றுகிறார்கள். கலைச்சிருஷ்டிகளில் போலவே, தங்கள் சொந்த வாழ்விலும் இந்தப் பண்புகளுக்கும் இவற்றின் மாறுபாடுகளுக்கும் உள்ள வேற்றுமையை ஒவ்வொரு கணமும் தெளிவாகக் காட்டுகிறார்கள். அழகானவற்றையும் ஒருமைப்பாடு உடையனவற்றையும் வேண்டுமென்றே தேர்ந்தெடுத்தன் மூலம், மனிதனைத் தேவனுக்கும் நீண்ட யாத்திரையில் முதலடி எடுத்து வைத்தாயிற்று. இந்தப் போக்கைச் சில சமயம் "தப்பியோடும் மனப்பான்மை" என்று தவறாகக் கூறுகிறார்கள். "வாழ்வின் தீமைகளை விட்டு ஓடுவதாகும், மனித நடமாட்ட மில்லாத இடத்தில் தந்தக் கோபுரத்தில் அடைந்து கிடப்பதாகும்" என்கிறார்கள். கவிகளின், கலைஞர்களின் எல்லை மீறிய அன்பையும், ஆதரவு நிரம்பிய உள்ளத்தையும் நோக்கும் எவனுக்கும் அவர்களைப் பற்றிக் குறை கூறுவதன் அநீதி தெளிவாக விளங்கும். அவர்கள் சொல்லிலும், ஒலியிலும், உருவத்திலும், நிறத்திலும் அழகை உணரும் இயல்பு உடையவர்கள். நன்கு பண்படாத உள்ளங்களைவிட இவர்களை அந்த அவதூறு விரைவில் தாக்குகிறது. அவர்களிடைக் காணும் நுண்ணிய உணர்வுத் துடிப்பு கடவுள் அவர்களுக்களித்த நன்கொடை யாகும். ஆழ்ந்த சந்தோஷம் ஏற்படுவதைப் போல அதனால் ஆழ்ந்த வேதனை விளையும் போதும் அதை மேலாகப் போற்ற வேண்டும்.

ஒரு கவியினுடைய பிரசுரமான கவிதைகள், நாடகங்கள் மூலம் அவனுடைய மனத்தினை அறிய முயலுவது மிகுந்த சுவையான காரிய மாகும். கவிகள் நம் காலத் தவராயின், அதுவும் நம் நண்பர்களாக இருந்து விட்டால்,

அத்தகைய ஆராய்ச்சியினுல் ஏற்படக்கூடிய பயனே தனி தான். கொஞ்ச காலத்துக்கு முன், சிறையில், பிரபல கர்னுடக இலக்கிய ஆசிரியர் எழுதிய "யசோதரா" என்னும் நாடகத்தைப் படித்தேன். அந்த நாடகத்தில் ஓரிடம் வருகிறது. அதில்,புத்தபகவான்,தன் சொந்த ஊராகிய கபிலவாஸ்து நகரி விருந்து தன்னைக் காண வந்திருந்தவரிடம் தான் அந் நகரின் மாளிகைகளிலும், மலர்ச் சோலைகளிலும், முன்பு வாழ்ந்திருந்ததைப் பற்றிப் பேசுகிருர். செழித்து வளர்ந்து காட்சிக்கினிதான மரங்கள் செறிந்த வீதியைப் பற்றிய வருணனை ஒன்று வருகிறது. சந்திரன் மரங்களிடையே மறைந்து மறைந்து வெளிப்படு மல்லவா? அதைக் கவி வெகு அழகாகக் கூறியுள்ளார். சந்திரன் ஒரு மரத்தின் உச்சியி லிருந்து மற்ருெரு மரத்தின் உச்சிக்கு நகர்ந்து சென்றது, மரங்களாகிற சகோதரிகள், சந்திரனுகிற மலரை ஒவ்வொருவரும் தத்தம் தலையில் ஒரு சிறிது சூடிவிட்டு, அடுத்தவளுக்கு அளிப்பது போல் இருந்ததாம்! ஆஹா! எத்தகைய அன்பையும் நேயத்தையும் இது காட்டுகிறது! ஒரே மலரா யிருந்தாலும் அத்தனை சகோதரிகளும் தம்முள் ஒத்து அதனை அணிந்து கொள்கிருர்களே!

இதைப் படித்துவிட்டு, இதைப் பற்றி யோசித்துக்கொண் டிருந்தேன். பளிச்சென்று பழைய சம்பவமொன்று நினைவுக்கு வந்தது. கவியின் வீட்டிற்கு ஒரு சமயம் நான் போயிருந்தபோது நிகழ்ந்த சிறிய சம்பவம். நாங்கள் எல்லோரும் சாப்பிட இலை முன் உட்கார்ந் திருந்தோம். கவியினுடைய குழந்தைகள் ஒரே வரிசையில் இருந்தன. திடீரென்று குழந்தைகளுக்குள் சச்சரவு ஏற்பட்டது. ஒரு குழந்தை தன்னிட மிருந்ததை மற்ருென்றிற்குக் கொடுக்க மறுத்து விட்டதே, சச்சரவின் காரணம். சாப்பிடும்போது இருந்த அமைதி கெட்டது. கவி, இயல்பான தன் புன்னகையோடு, இனிமை ததும்பும் குரலில் பெரிய குழந்தையை நோக்கி, "கண்மணி! நீ பெரியவளோல்லியோ, அதை அவளுக்குக் கொடுக்க வேண்டாமா?" என்ருர். அந்தப் பெரிய குழந்தையும், சந்தோஷத்தோடு தான் முன்பு தர மறுத்ததைத் தன் தங்கைக்குக் கொடுத்து விட்டது. குழந்தைகளின் சண்டையைத் தீர்த்துச் சமாதானம் செய்தபோது, கவி, தான் பல வருஷங்களுக்கு முன்பு சித்தரித்த மரங்களின் சகோதரிப் போக்கை மனத்தில் கொண்டிருந்தாரென்று கூறுவதற்கில்லை. சிந்தை, சொல், செயல் மூன்றிலும் மேலான உண்மையைக் கடைப் பிடிக்கும் அவன் இயல்பாகவே சச்சரவையும், வேற்றுமையையும் ஒதுக்கி ஒருமைப்பாட் டுணர்வையும், நல்லெண்ணத்தையும், மேற்கொள்ளுகிருன். அவனுடைய இந்தக் குணம், அவன் வாழ்வில் ஒவ்வொரு செய்கையிலும், அவனுடைய ஒவ்வொரு எழுத்திலும் நன்கு பிரகாசிக்கிறது.

சிருஷ்டியில் ஈடுபடும்போது, கவி, தன் சிருஷ்டியைப் பற்றியே முக்கியமாகச் சிந்திக்கிருன். கடவுள் செய்வது போலவே, அவனும் கவிதையைச் சிருஷ்டிக்கிருன். அதனைப் படித்துப் பார்த்து மகிழ்வு கொள்ளுகிருன். ஆனல், அதன் சிருஷ்டியில் ஈடுபட்டிருக்

கும்போது அதுவே பின், பேர், ஊர் தெரியாத ஒரு வாசகனுக்கு மகிழ்ச்சியை,—பெரும் இன்பத்தைத் தரவல்லது என்பதை அவன் கவனிப்பதில்லை. காலக்கிரமத்தில், பிறர் தன் கவிதைகளைப் படித்து மகிழ்கிறார்கள் என்றறிய அவன் சந்தோஷமடையலாம். ஆனால், அவன் சிருஷ்டிக்கிறான் என்றால், கடவுளைப் போல அவனும் ஒரு சிருஷ்டிகர்த்தா என்பதால்தான். மேலும், அழகுச் சிருஷ்டி அவன் வாழ்வின் இன்ப மூச்சாகும்.

"நான் பாடுகிறேனென்றால், என்னால் பாடாமலிருக்க முடியாது" என்று கவி கூறுவது வீண் பெருமையல்ல. மிகச் சிலருக்கே இது பொருந்தும். பேனாப்பிடித்தெழுத வந்துவிடும் எல்லோரும், இத்தகைய உரிமை கொண்டாட லாயக்கு அற்றவர்கள்.

ஏதோ பாட்டின் ஒருபகுதியோ, செய்யுளின் ஒரு வரியோ நம் நினைவில் இருந்து கொண்டேயிருக்கிறது. வாழ்வில் நெருக்கடிகளின் போது அதனை நினைவுறுத்திக் கொள்ளுகிறோம். அது அச்சப்படும் மனத்துக்கு அமைதி தருகிறது. மனம் இருண்டு நிற்கும் சமயத்தில், ஒரு தெருப் பிச்சைக்காரனின் பாட்டுக்கூட நம்மை அமைதி உலகிற்கு அணைத்துச் செல்லுகிறது. நமக்கு மிகவும் வேண்டியவர்களின் வார்த்தைகள்கூடச் கசப்பாகத் தோன்றும் அவ்வேளையில், அந்த நாடோடியின் பாடல் நம் உள்ளத்திற்கு ஆறுதல் அளிக்கிறது. கண்ணீர்க் கடலென்று கூறப்படும் இவ்வுலகில், கவி, மெல்ல நம் கைப் பிடித்து நிரந்தர இன்பம் தவழும் மலை உச்சிகளுக்கு நம்மை அன்போடு வழி நடத்துகிறான்.

தன்னுள் உறையும் ஒருமைப்பாட்டு நிலையை, தான் நித்தமும் புதுப் புது உருவங்களில் விளக்கப் பாடுபடும் பண்பை, தன்னையறியாமலே பிறரும் புரிந்து கொள்ளும்படி செய்து விடுகிறான்.

சில சமயங்களில் நம் எண்ணங்கள் மண்ணைக் கவ்வுகின்றன. சிரமமான நீண்ட பிரயாணத்திற்குப் பிறகும், நாம் பாதை தெரியாது பரிதவிக்க நேரிடுகிறது. சொத்து, சுதந்தரங்கள் பறி போகின்றன. நம் குடும்பத்தில் ஒவ்வொருவராகக் காலன் கையில் சிக்குகிறார்கள் குழந்தைப் பருவத்தில், இளமையில் நம் தோழர்களா யிருந்தவர்கள் ஒருவரும் அருகில் இருப்பதில்லை. அயர்ச்சியுற்றுச் செயலிழந்த நிலையில், "நாம் இதுவரை பட்டதெல்லாம் வீண்தானா?" என்று பரிதவிக்கிறோம்.

கவி, வாழ்க்கையை எதிர்மறைப் போக்கிலோ, ஒரு அலட்சிய மனோபாவத்துடனோ, அல்லது எல்லாம் அறிந்து விட்டோமென்ற அறிவு அகந்தையுடனோ அணுகுவதில்லை. கவி, வாழ்க்கைப் பாதையில் நம் உடன் வரும் ஒரு வழிப்போக்கன். அவனுடைய மலர்ந்த புன்னகையும், இனிமையான கீதமும் என்றும் நமக்கு மகிழ்வூட்டுகின்றன. புகழ் முடி, கவிக்கே உரியது. எழுத்தின் முக்கியத்துவத்தை நிலை நாட்டினவன் அவன். பேருண்மையையும், பேரன்பையும் எழுத்திலே கூட்டிய பெருமை, அவனையே சாரும்.

*

காய்தே ஆஜம் ஜின்னு

அரசியல் வாதி

' ஆசியாவிலேயே மிகவும் சிறிய மெலிந்த மனிதர் ' என்று காந்திஜியைப் பற்றி வில் துராந்த் என்பவர் ஒரு சமயம் கூறினர். ' சந்தேகத்திற்கு இடமில்லாமல் ஜின்னுதான் நான் பார்த்த மனிதர்களில் மிகவும் ஒல்லியானவர் ' என்று ஜான் கந்தர் கூறுகிறுர்.

பார்த்தால் ஒடிந்து விழுந்துவிடுபவரைப்போல் இருந்தாலும், இவர்களுடைய சக்தி மகத்தானது. காந்திஜி, இதை ஆத்ம பலம் என்பார். ஜின்னுவைக் கேட்டால், தன் சக்தியின் ரகசியம் மன பலம்தான் என்று சொல்லுவார். அவர்களுடைய லட்சியப் பற்று எதனுலும் சிதைவுருதது. தடியடி, துப்பாக்கி, சிறை—ஒன்றும் அவர்களை அசைக்க முடியாது. அயலான் ஆதிக்கத்திலும் சுரண்டலிலும் சிறுமையுற்றும், சித்தம் சிறிதும் கலேவுருத தேசத்தின் உறுதியை அவர்கள் பிரதிபலிக்கிருர்கள். பிரிட்டனேடு மல்லிடும் இவர்கள் அரசியலில் எதிர் எதிராக நிற்கிருர்கள். இருவரில் யாரும் யாருக்கும் இளேத்தவரல்லர். எந்த ஆத்ம பலத்திஞல் காந்திஜி லட்சக்கணக்கான ஹிந்துக்களின் தலேவராகவும், உலகம் போற்றும் மகாத்மாவாகவும் ஆனுரோ, அதற்குச் சிறிதும் குறையாத மனதிடமும் பிடிவாதமும் ஜின்னுவுக்கும் இருக்கிறது.

ஜின்னுவின் பாக்கிஸ்தான் கொள்கை பிரபல மடைந்ததற்குக் காரணம் அவரது கொள்கை நியாயமல்ல—ஜின்னுவின் திறமையும், தியாகமும், நேர்மையும், பிடிவாதமுந்தான். ஸ்ரீ ஜின்னுவைப் பற்றிய ருசிகரமான தகவல்கள் இக்கட்டுரையில் உள்ளன. ஏஷியாடிக் டைஜெஸ்டில் கே. டி. சேத்னு எழுதிய கட்டுரையின் தழுவல்.

புல்லடிமைப்பட்டுக் கிடந்த பல்லாயிரம் இந்தியரை ஏகாதிபத்தியத்துக்கு எதிராகக் கொதித்து எழச் செய்தவர் காந்திஜி. ஹிந்துக்களோடு ஒப்பிடுகையில் மோசமான சிறுபான்மை வகுப்பினராயிருந்த முஸ்லிம்களே ஒன்றுதிரட்டி, சதா முன்னேற்றத் தீவிரமும், உரிமைப் போராட்ட உணர்வும் படைத்த ஒப்பற்ற ஓர் அரசியல் சக்தியாக மாற்றி விட்டது ஜின்னுவின் மாபெரும் சாதனேயாகும்.

எலும்புக்கூடாக விளங்கும் ஜின்னுவின் அசைக்க முடியாத மன உறுதி காங்கிரஸின் போக்கையே தடைப்படுத்தி விட்டது. பல்லாயிரம் மக்கள் தன்னேக் காய்தே ஆஜம் என்று போற்றி வணங்கவும் செய்தது ; ஆசியாவின் மிக முக்கிய மனிதராகவும் அவரை அது ஆக்கிவிட்டது.

அரசியலில் மட்டுமன்றி ஒவ்வொரு துறையிலும், காந்திஜியும் ஜின்னுவும் பெரிதும் மாறுபட்டே நிற்கிருர்கள். முதலிலிருந்தே இயல்பாகக் காந்திஜி மக்களில் ஒருவராய் ஒன்றிவிட்டார். ஜின்னுவோ, ஒதுங்கி நின்று சீமான் போல வாழும் சிறப்புடையவர். இன்று மக்களிடை அவர் நெருங்கிப் பழகுகிருர் என்ருல் அது இயல்பாக ஏற்பட்ட நிகழ்ச்சியல்ல. அப்படிச் செய்ய

வேண்டியது அவருடைய கடமையாகி விட்டது.

காந்திஜி ஏழ்மையின் உருவம். எளிமையின் பிரதிநிதி. ஜின்னு செல்வச் செழுமையில் திளைப்பவர். குடியானவனுடைய லங்கோட்டி காந்திஜிக்குப் பிடித்தமான ஆடையாகும். விலையுயர்ந்த, மிக நர்கரிகமான உடைகளையே ஜின்னு விரும்பி அணிகிருர்.

காந்திஜி அஹிம்சா மூர்த்தி. கத்தியையும் ரத்தத்தையும் பற்றிப் பேச ஜின்னு தயங்க மாட்டார்.

காந்திஜி ஆழ்ந்த மதப்பற்று உள்ளவர். ஜின்னு தன் வாழ்வின் பெரும்பாகத்தில் கொரானிலோ, முஸ்லிம் சடங்குகளிலோ அதிக அக்கறைகொண் டிருக்க வில்லை.

மேலை நாட்டு மோஸ்தரில் ஆடை தரித்த ஜின்னு இன்று இந்திய முஸ்லிமின் நீண்ட ஷர்வானியும் கறுப்புக் குல்லாயும் அணிகிருர். மசூதிக்கும் அடிக்கடி போகிருர். இஸ்லாமியப் புனித நூல்களைப் படித்து வியாக்கியானமும் செய்கிருர். இதெல்லாம் அவரிடம் ஏற்பட்டிருக்கும் ஒரு மாறுதல்தான் என்ருலும், இதைக்கொண்டு அவரிடம் அந்தராத்ம பூர்வமான பெரும் மாறுதல் ஏதும் ஏற்பட்டுவிட்டதாகக் கொள்வதற் கில்லை.

இன்றைய அரசியலில் காந்திஜியும் ஜின்னுவும் எதிர்க் கட்சிகளில் நிற்கலாம். ஒரு காலத்தில் அரசியலில் இவர்களுக்குள் வேற்றுமை இருக்கவில்லை. அப்போது ஜின்னு அதி தீவிர தேசிய வாதியாக விளங்கினர். திலகர், ஃபிரோஸ்ஷா மேத்தா—இவர்களுடன் சேர்ந்து ஐக்கிய இந்தியாவிற்காக அவர் நடத்திய போராட்டம் அரசியலின் முன்னணியில் அவரை நிறுத்தியது; மக்களுடைய உள்ளங்களைக் கொள்ளை கொண்டது. ஜின்னு அன்று கனவு கண்ட இந்தியா முஸ்லிம் இந்தியாவாகவோ, ஹிந்து இந்தியாவாகவோ இருக்கவில்லை. மதமோ, வகுப்பு வேற்றுமை உணர்வோ அன்று அவருள்ளத்தில் இடம் பெற்று இருக்க வில்லை. இந்தியாவும் அதன் மக்களுமே அவர் நெஞ்சு நிறைந் திருந்தார்கள்.

பரந்த நோக்கம் படைத்த லட்சிய தேச பக்தரா யிருந்த ஜின்னு ஒரு தீவிர மத வாதியாகவும், பிடிவாதம் மிகுந்த வகுப்பு வாதியாகவும் மாறியதற்குக் காந்திஜியும், காங்கிரசுமே ஓரளவு காரணம் என்று சொல்லலாம். காந்திஜி அரசியலில் மதத்தைக் கலந்தது ஜின்னுவுக்குப் பிடிக்க வில்லை. காங்கிரசிலிருந்த ஹிந்துக்கள் ராஜிய வியவகாரங்களில் மதவாதிகளைப்போல் சில சமயம் நடந்து கொண்டார்கள். காங்கிரசில் ஹிந்துக்களே பெரும் பான்மையினரா யிருந்த படியால் ஜின்னு சந்தேகம் கொள்ளலானுர். காங்கிரஸ் ஹிந்துக்களின் ஸ்தாபனம் என்று கருதியதோடு, அதனுல் ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமை ஏற்படப் போவதில்லை என்ற திட நம்பிக்கையும் கொண்டார்.

இந் நிலையில் பிரித்தாளும் சூழ்ச்சிகளில் பேர்போன பிரிட்டன் லீகைக் காங்கிரசிற்கு எதிராகத் தூண்டிவிட ஆரம்பித்தது. மத, வகுப்புப் பூசல்களை விளையாடவிட்டு, பிரிட்டன் தேசிய இந்தியாவின் அபிலாஷைகளைச் சிதற அடித்ததோடு நில்லாமல், முஸ்லிம்கள் மனத்தில் அர்த்த

மற்ற சந்தேகங்களை விதைத்து ஹிந்து-முஸ்லிம் பகையையும் வேறு வளர்க்க ஆரம்பித்தது.

பிரிட்டனின் அரசியல் கொள்கை

ஜின்னுவுக்கு அளவுக்கு மீறிய முக்கியத்துவம் கற்பித்துக் கொடுத்தது. சந்தர்ப்பத்தைச் சரியானபடி ஜின்னு பயன்படுத்திக் கொண்டார். அரசியலில் மத உணர்வை ஒரு துருப்புச் சீட்டாக வைத்து ஆடிப் பிரமாத வெற்றியும் அவர் அடைந்து விட்டார். எப்படியோ அவருடைய முயற்சிகள் இந்திய முஸ்லிம்களின் உள்ளத்தைத் தொட்டு விட்டன. முஸ்லிம்களின் ஆதரவு, அவரிடமே மறைந்து கிடந்த இஸ்லாம் உணர்வைத் தட்டி எழுப்பியதோடு, அவருக்கும் அவரைப் பின்பற்றுபவருக்குமிடையே இதய பூர்வமான ஒரு தொடர்பையும் ஏற்படுத்தி வைத்தது.

அன்று ஐக்கிய இந்தியா கோரிய அவர் இன்று பாக்கிஸ்தான் கனவு காண்கிறார். பாகிஸ்தான் அனுபவ சாத்தியமற்றதென்று நன்கு அறிந்திருந்தும், தன் பிடியைச் சிறிதும் விட்டுக் கொடுக்க அவர் மறுத்துவிட்டார். தன் கோரிக்கை ஈடேற, எந்த நலனையும் தியாகம் செய்ய அவர் பின்வாங்க மாட்டார். அரசியலில் கட்சிகளிடையே சமரசம் காண ஒன்றன்பின் ஒன்ருய் எழுந்த பல முயற்சிகள் அவருடைய மூர்க்கமான பிடிவாதத்தால் முறிந்து போயிருக்கின்றன.

அரசியலில் அடியெடுத்து வைத்த போது 'முஸ்லீம் கோகலேயாக விளங்கவேண்டுமென்பதே என் பேராவலாகும்' என்று கூறியவர் ஜின்னு. ஹிந்து முஸ்லிம் ஐக்கியத்திற்குப் பங்கம் நேராத வகையில் முஸ்லிம் நலன்களைக் காக்க விரும்பிய அவர், அந்தக் கொள்கையைக் காற்றில் விட்டு விட்டு, இன்று பாக்கிஸ்தானை முரட்டுத்தனமாக வற்புறுத்தும் அளவுக்கு எத்தகைய மாறுதலை அடைந்து இருக்கிருர்!

இந்தியாவிலேயே தலை சிறந்த

சட்ட வழக்கறிஞரில் ஜின்னு ஒருவர். சட்ட நுணுக்கங்களை நுணுகி ஆராய்ந் தறிந்த மேதை. நியாயஸ்தலத்தில் தெளிவாகவும், பண்பட்ட முறையிலும் வழக்கை எடுத்துப் பேசுவதில் சமர்த்தர். அவர் யாருக்கும் பயப்படாத நேர்மை கொண்டவர். யாராயினும் சரி, சமயம் நேர்ந்தால் சரியானபடி சூடு கொடுக்கத் தயங்க மாட்டார். ஒரு சமயம், தன் கட்சியை எடுத்துப் பேசிக்கொண் டிருக்கும் போது, ஒரு விஷயத்தை ஆங்கில நீதிபதியின் மனத்தில் பதியவைக்க வேண்டுமென்பதற்காக விசேஷ அழுத்தத்தோடு கூறினர். அது பிடிக்காத நீதிபதி "மிஸ்டர் ஜின்னு! நீர் ஒரு மூன்ருந்தர நீதிபதியோடு பேசவில்லை என்பதை உணர வேண்டும்" என்ருர். ஜின்னு பளிச்சென்று "மூன்ருந்தரமான யோசனை எதையும் தங்களுக்குக் கூறவில்லை, பிரபு" என்று பதில் கொடுத்தார். திலகர் வழக்கிலும், பின்னர் ஹார்னிமன் வழக்கிலும் அவர் வாதாடியது சரித்திரப் பிரசித்தி பெற்றதாகும். தாக்குவதில் அவருக்கு இணை அவரே. லார்டு வில்லிங்டனுக்கு ஞாபகார்த்தக் கட்டிடம் எழுப்பமுயற்சிநடந்தபோது, ஜின்னு (அவர் அப்போது தேசிய இந்தியாவின் திலகமாக. விளங்கினர்) அதை எதிர்த்து, அந்த முயற்சியைச் சின்னு பின்னமாக்

கினர். இந்தியாவிற்காக அவர் செய்த மகத்தான தியாகத்தை வியந்து, மக்கள் அவர் பெயரால் பம்பாயில் ஒரு ஹால் எழுப்பினர்கள்.

துணிவும், அசாதாரணமான தைர்யமும் படைத்தவர் ஜின்னா. மிரட்டலுக்காகவோ, வேறு எந்த விதமான அபாயத்துக்காகவோ தன் கட்சியை விட்டுக் கொடுக்கவோ, பிடியைத் தளர்த்தவோ அவர் ஒரு போதும் சம்மதியார். எதிர்ப்பிலே தீவிர உற்சாகம் பெறும் உள்ளம் படைத்தவர் அவர்.

நேர்மையில் அவர் அணுவும் பிறழாதவர். அவருடைய மேன்மைக்கே அந்தத் தலைசிறந்த பண்பு ஒரு முக்கியக் காரணமென்னலாம். ஒரு கட்சிக்காரன் சிக்கலான ஒரு வழக்கில் அவருடைய யோசனையை நாடினான். அந்த வழக்குக்கு ஏராளமான தொகை பீஸ் கேட்டார். கட்சிக்காரனிடம் ரூபாய் பதினாயிரமே இருந்ததால், ஜின்னா முதலில் மறுத்துவிட்டார். அவன் மிகவும் வேண்டவே, ஜின்னா ஒரு ஏற்பாட்டுக்குச் சம்மதித்தார். அவர் அந்த வழக்கு சம்பந்தமான கட்டுகளைப் படித்துக் கொண்டே போக வேண்டியது. எந்த இடத்தில் அவருடைய பீஸ் பதினாயிரத்துக்கு வந்து விடுகிறதோ, அங்கே நிறுத்தி விடவேண்டியது. அதுவரை படித்ததைக் கொண்டு அவனுக்கு யோசனை கூறவேண்டியது. (அதாவது மணிக்கு இவ்வளவு என்று ஏற்பாடு). இறுதியில் கணக்கிட்ட போது ஜின்னாவின் பீஸ் மூவாயிரத்து ஐந்நூறு தான் ஆகியிருந்தது. மீதிப் பணத்தை ஜின்னா உடனடியாகக் கட்சிக்காரனிடமே திருப்பித் தந்து விட்டார். அரசியலிலும் அவருடைய இந்த நேர்மையைக் காணலாம்.

ஒரு தலைவருக்கு வேண்டிய உயர்ந்த பண்புகளையெல்லாம் அவரிடம் பூரணமாகக் காண்கிறோம். சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பு இந்தியா மந்திரியாயிருந்த மாண்டேகு பிரபு ஜின்னாவைப் பற்றித் தன் டயரியில் பின்வருமாறு குறித்து வைத்திருக்கிறார். "மிஸ்டர் ஜின்னா மிகுந்த புத்திசாலி. தன் நாட்டு நிர்வாகத்தில் அவருக்கும் பங்கு இல்லாமலிருப்பது பெருத்த அநீதியாகும்."

அக் காலத்தில் ஜின்னா, சுரேந்திரநாதர், பெஸண்ட், காந்திஜி—இவர்களுடன் சேர்ந்து நாட்டிற்கு உழைத்தார். 'இந்த நால்வரும் இந்திய அரசியலின் உண்மையான பெரும் தலைவர்கள்' என்று மாண்டேகு பிரபு சிறப்பித்து உள்ளார். நால்வரில் இருவரே இன்றுள்ளனர். ஒரு காலத்தில் இந்தியாவின் மேன்மைக்காக இணையாக நின்று போராடிய இவர்கள் இன்று எதிர் எதிராக நின்று போராட நேர்ந்திருப்பது இந்தியாவின் துரதிருஷ்டமேயாகும். இருந்தாலும், "பாவம்போல்புண்ணியம்" என்ற அனுபவ மொழிப்படி, மீண்டும் மகாத்மாஜியும் காய்தே ஆஜமும் ஒன்று சேர்ந்து, இந்நாட்டு மன்னர்களாகிய நம் அனைவரையும் ஜாதி, மத, வேற்றுமைகளைக் கடந்த சுதந்தர இந்தியர்களாக ஐக்கியமுற்று வாழும்படி செய்யவே போகிறார்கள் என்ற நம்பிக்கை நம்மில் பலருக்கு உண்டு. அந்த அதிர்ஷ்டம் என்று கிட்டுமோ, யார் அறிவார்?

*



காய்தே ஆஜம் முஹமது அலி ஜின்னு

"இது என்ன! மனுஷனு, பூதமா!!"



"ஆ ஹா ஹா! 'தேவமகள் இவள் யாஆரோ—
இவள் யா ஆ ஆ ஆ ரோ ஓ ஓ ஓ....!!!'"



பித்துக் கொள்ளிக் கலைஞர்கள்

சிந்தனைக் கெட்டாத, மனத்தின் பைத்தியப் போக்குகளைச் சித்திரங்களில் அப்படியே 'படம் பிடிப்ப'தில் நிபுணரான சைத்திரிகர் ஸால்வடார் டாலி

(மேலே) டாலியின் இந்தப் படத்துக்கு 'ஹிட்லர் புதிர்' என்று பெயர். ராட்சஸ டெலிபோனிலிருந்து பிரம்மாண்டமான மழைத்துளி சொட்டுகிறது. தட்டில் சிறிய ஹிட்லர் படம் கிடக்கிறது. பக்கத்தில் சேம்பர்லின் குடை தொங்குகிறது. அர்த்தமென்ன? சாக்ஷாத் டாலிக்கே அது தெரியாதாம்!



கோணல் கலை நிபுணர் பேப்ளோ பிக்காஸோ

இன்றைய மனித சமூகத்தின் காட்டு மிருண்டித் தனத்தையும், குரூரத்தையுமே அஸ்திவாரமாகக் கொண்டவை இவரது ஓவியங்கள்.

குடும்பம்

ஆண், பெண், தாய்மை—இவர்களுடைய கண்ணியத் தன்மையைச் சித்தரிக்கிறது இந்தப் படம்

கோழிப் பெண்

பெண் முகத்தின் நேர் பார்வை, பக்கப் பார்வை—இரண்டையும் தந்துள்ளார். பார்ப்பவர் மனத்தில் பயங்கர உணர்வை எழுப்புவதே அவர் நோக்கம்

பிக்காஸோ
எழுதிய
படங்கள்



"சொல்லுடா கணபதி!

அரியும் சிவனும் ஒண்ணு,
அறியாதவன் வாயிலே மண்ணு!"

"இவ வெத்திலை போடுவாளா?"

"ஹோப்லெஸ் கண்ட்ரிமெயிட்!"



“ஆழ்வார் அடியார்களே!
‘ஆயுதப் பரிகரணத்தை அடியோடு ஒழிப்போம்’
என்றது நானா? நம்மாழ்வாரா?”

“நிரஞ்சன் ஸிங்ஜீ! வஹ்
க்யா ஸோச்தா ஹை”?

“எந்தா விளிச்சோ?”





காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தின்
இடை வேளையில் தலைவர்கள் சந்திக்கிறார்கள்

நமது மாகாணத்தின் புதிய மந்திரிகள்

ஸ்ரீ பி. வீராசாமி, ஸ்ரீ வி. ராகவ மேனன்





இந்தியாவின் குரல்

சர். எஸ். ராதாகிருஷ்ணன்

இந்தியருடைய, வாழ்க்கையின் ஒவ்வொரு துறையையும் ஆக்கிரமித்து நிற்கும் புதிய அரசியல் உணர்வு, இந் நாட்டைப் பார்ப்பதற்காக வேறு நாடுகளிலிருந்து வருவோர் ஒவ்வொருவருடைய கவனத்தையும் கவர்ந்திருக்கிறது. "இந்தியருடைய கவனம் எல்லாம் எந்நேரமும் தீவிரமாக ஈடுபட்டிருப்பது அரசியலில்தான். கலைப் பிரச்சினைகள், சமூகப் பிரச்சினைகள், ஏன், பொருளாதாரப் பிரச்சினைகளும் கூட—எல்லாம் இரண்டாம் பட்சமானவையே. இதை உணராமல் இந்தியரைச் சரிவரப் புரிந்துகொள்ள முடியாது" என்று இ. எம். ஃபார்ஸ்டர் என்பவர் வானொலி மூலம் செய்த 'இருபத்து ஐந்து ஆண்டு கழித்து மீண்டும் இந்தியா போகிறேன்' என்ற தனது பிரசங்கத்திலே கூறியுள்ளார். கடந்த அக்டோபரில் ஜெயப்பூரில் நடந்த அகில இந்திய எழுத்தாளர் மகாநாட்டுக்கு இ. எம். ஃபார்ஸ்டரும், ஒளல்டு என்பவரும் விஜயம் செய்திருந்தார்கள். அவர்களுக்கு இந்தியாவில் எங்கும் அன்பான வரவேற்புக் கிடைத்தது. அரசியலில் ஒரே துவேஷமும் மனக்கசப்புமாக இருக்கும் இந்தக் காலத்திலும், அத்தகைய வரவேற்புக் கிடைத்ததிலிருந்து, தங்களுடைய பரந்த மனத்தையும், சகிப்புத் தன்மையையும், இந்தியர் கைவிட்டுவிட வில்லை என்பது நன்கு தெளிவாகிறது. அரசியல் மனவேற்றுமைகள் சொந்த உறவுகளைக் கெடுத்துவிட வில்லை. முக்கியமாக இதற்கு மஹாத்மாவினுடைய மகத்தான தலைமையே காரணமாகும். பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு இந்தியர்களுக்குத் தகராறு இருக்கலாம். ஆனால், பிரிட்டிஷ் கலாசாரத்தின் பிரதிநிதிகளோடு அவர்களுக்கு எந்தவிதமான தகராறும் கிடையாது. பல வேளைகளில் தாங்கள் உல்லாசமாகப் பொழுதுபோக்கவும், தூய இன்பம் துய்க்கவும் காரணமாயிருந்த பிரிட்டிஷ் எழுத்தாளர்களுக்கும், பிற நாட்டு எழுத்தாளர்களுக்கும், படித்த இந்தியர் பலர் மிகவும் கடமைப்பட் டிருக்கிறார்கள். அரசியல் மாறுபாட்டங்கள், பொருளாதாரப் போட்டிகள்—இவைகளுக்குப் பின்னே கலாசாரங்களின் கலப்புறவு நாளும் வலுப்பட்டு வந்திருக்கிறது.

"நமது நவீன நாகரிகம் அறிவு ஒளி வீசுவது, தர்க்க பூர்வமானது; கட்டுப்பாடு மிகுந்தது. ஆனால் அதில் மனிதத் தன்மை தான் அவ்வளவாக இல்லை" என்கிறார் பேரறிஞர் ராதாகிருஷ்ணன். இந்தக் கட்டுரை அமெரிக்கப் பத்திரிகையான ஏஷியா அண் அமெரிக்காஸ் என்ற பத்திரிகையில் வெளி வந்தது.

இந்தக் கலாசாரப் பரிவர்த்தனை ஒருதாத்ததா யிருக்கவில்லை. மனித குலத்தின் சரித்திரத்தில் பல சமயங்களில் இந்தியாவுக்கும், மேல் நாட்டுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருந்திருக்கிறது. ஆரம்ப கால இந்திய இலக்கியமும், நமக்குக் கிடைக்கக்கூடிய, இந்தோ-ஐரோப்பியரின் ஆரம்பகால இலக்கியச் சாஸனமும் ஒன்றேதான். "இந்தோ ஐரோப்பிய மக்க

ளுடைய புராதன இலக்கியம் இந்தியாவில் பாதுகாக்கப் படுகிறது. நமது சொந்தக் கலாசாரத்தின் ஆரம்ப நிலைகளைப் பற்றி அறிய வேண்டுமானால், நாம் இந்தியா செல்ல வேண்டியதுதான். இந்திய இலக்கியத்தின் தொன்மையைப் பற்றி நாம் என்ன கருத்துக் கொண்டிருந்தாலும், ஒரு விஷயம் மட்டும் தெளிவாய்க் கூறலாம். இந்திய இலக்கியத்தினுடைய புராதனச் சின்னம் அதே சமயத்தில் இந்தோ-ஐரோப்பிய இலக்கியத்தின் புராதனச் சின்னமாகவும் விளங்குகிறது'' என்று புரொபஸர் விண்டர்நிட்ஸ் என்பவர் எழுதுகிறார். இந்தோ-ஐரோப்பிய இலக்கியத்தின் அந்தப் புராதனச் சின்னம் ரிக்வேதம்தான். கூடமாக விருந்த மதங்கள் மூலமாகவும், பித்தக்கோராஸ் முதல் பிளேட்டோ வரை பலவிதக் கிரேக்கஞானிகள் மூலமும்தான், உபநிஷத்துக்களின் ஞானம் மேல் நாட்டுக்குப் பரவியது. இந்தியாவின் மேற்குப் பாகமும் சேர்ந்திருந்த பாரசீக சாம்ராஜ்யம் இத்தகைய பரிவர்த்தனையின் இடைக்களன் ஆகி நின்றது. அசோகனின் பௌத்த மதப் பிரசாரம் சிரியாவையும், பாலஸ்தீனத்தையும் பாதித்தது. கிருஸ்துவ மதவடிவில் பௌத்தம் மேல்நாடு முழுவதையும் வசப்படுத்தும் தருவாயில் இருந்தது. அலெக்சாந்தர் படையெடுப்பு இந்தியாவில் கிரேக்கக் கலாசாரத்தின் எதிரொலிகளை எழுப்பியது. அராபியரின் ஸ்பானியப் படையெடுப்பு மூலமும், மத்திய தரைக் கடல் நாடுகளின் தென் கரைப் படை யெடுப்பு மூலமும், இந்த எதிரொலிகள் மத்தியகால ஐரோப்பாவிலும் கேட்டன. இதன் விளைவாக, ஐரோப்பியப் புராதன நூல்கள் மீண்டும் முக்கியத்துவம் பெற்றன. இயல் நூல் சாத்திரங்கள் எழுந்தன.

இந்தியா, அரசியலில் தளையுண்டிருந்தும், அதன் சிந்தனை ஊற்று, ஷோபனேர், ஹார்ட்மன், நீஷே, முதலியோருடைய தத்துவ நுல்களின் மூலம், ஐரோப்பிய தத்துவ ஞானத்தில் கலந்திருக்கிறது. இந்தியக் கலாசாரம் மேன்மையானது, ஜீவனுள்ளது என்பதற்கு, எமர்சன், விட்மான், தோரோ முதலிய அமெரிக்கத் தத்துவஞானிகளும், டபிள்யு. பி. ஈட்ஸ், ஜியார்ஜ் டபிள்யு. ரஸ்ஸல் முதலிய ஐரிஷ் எழுத்தாளர்களும், ரொமேன் ரோலான் போன்ற ஐரோப்பிய எழுத்தாளரும் சான்று கூறியுள்ளார்கள். இக்காலத்து பிரிட்டிஷ் எழுத்தாளரும் இதற்கு விலக்கல்ல. நவீன நாகரிகத்தின் ஒருதலைப் பட்சமான முன்னேற்றத்திலுள்ள குறைபாடுகளுக்கு இந்தியாவின் மேதை தக்க மாற்றாக விளங்கு மென்பதில் சந்தேகமில்லை. சுத்த விஞ்ஞான ரீதியில் வளர்ந்துவிட்ட கலாசாரம் சாதனங்களையே அதிகமாக மதித்துக் குறிக்கோளை அலட்சியம் செய்துவிடுமோ என்ற பயம் ஏற்பட்டிருக்கிறது. அத்தியாத்மக் கொள்கைகளை வற்புறுத்திக் கூற வேண்டிய தீவிர அவசியம் ஏற்பட்டிருக்கிறது. நமது நவீன நாகரிகம் அறிவு ஒளி வீசுவது, தர்க்க பூர்வமானது; கட்டுப்பாடு மிகுந்தது. ஆனால், அதில் மனிதத் தன்மைதான் அவ்வளவாக இல்லை. விளக்கம் பெறாத அறிவால் விளையக்கூடிய விபத்து எவ்வளவு கொடியதாக இருக்கும் என்பது சொல்லத் தேவையில்லை. இரண்டுபெரிய நகரங்களை

அழித்துத் தரைமட்ட மாக்கியதை, விஞ்ஞானத்தின் மகத்தான சாதனையாகப் பெரிய நாகரிக நாடுகள் கொண்டாடுவதை ஒரு உதாரணமாகக் கூறலாம். அறிவியலை ஒட்டிய தவருலோ, அல்லது ஒழுக்க முறைமை பற்றிய அறியாமையாலோ, நாம் அவதிப்படவில்லை. ஆத்மீகத் துறையில் குருடாயிருப்பதுதான் நம் துன்பத்துக்குக் காரணமாகும். பாஸ்கல் கூறியுள்ளபடி, சிந்தனைப் படியிலிருந்து தர்மப் படியை எட்டிப் பிடிக்க வேண்டும். இந்த விஷயத்தில் இந்தியா உதவக்கூடும்.

எங்கள் நாட்டில் சமீப காலத்திய நிகழ்ச்சிகள் எல்லாம் ஒரு தலைப் பட்சமாகவே இருந்துவந்திருக்கின்றன. அதன் விளைவுகள் எங்களைப் பாதித் திருக்கின்றன. ஆத்மீக உணர்வில் அளவுக்கு மீறி லயித்து விட்டோம். சுத்த அத்தியாத்ம வாழ்வில் நிலையூன்றிப் போனேம். இதன் மூலம், இந்திய ஜாதியின் சமூக வாழ்வில் உண்மையான முன்னேற்றத்தையும் புறக்கணித்து விட்டோம். அத்தியாத்ம நினைவினல் சிறந்த மனிதர்கள் மிக மேலான நிலைக்கு உயர்ந்திருக்கிருர்கள் என்பதற்கு, அத்தியாத்ம உணர்வுக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதியான முக்கியத்துவம் ஒரு உதாரணமாகும். ஒவ்வொரு தலைமுறையும், இந்நாட்டில் உலகம் போற்றும் உத்தமர் பலரை ஈன்றிருக்கிறது. அதே மாதிரி தங்களுடைய கடவுட் காதலில், மனித குலத்தின் மாண்பை மறந்துவிடுவதால், எத்தகைய கேவலமான நிலைக்கு ஒரு ஜாதி வந்துவிடும் என்பதற்கும் இந்தியா உதாரணமாகத் திகழ்கிறது. சரீர, மன, சமூக அமைப்புக்களைச் சரிவரக் கவனியாது அத்தியாத்மத் துறையில் சுத்தமாகமூழ்கிப் போய்விடவே, அது ஜாதியின் முன்னேற்றத்தையே தடைப்படுத்தி விட்டது. மேல் நாட்டின் ராஜிய, விஞ்ஞானக் கலாசார மோதுதலுக்குப் பிறகே நமக்கு விழிப்பேற்பட்டது. நமது புராதன ஞானத்தின் புறக்கணிக்கப்பட்ட அம்சம் நம் நினைவில் ஏறியது.

தெய்வ ராஜ்யம் என்பது பூரணத்துவம் நிறைந்த மனித உறவுமுறைகள் சாத்தியமாகிவிட்ட ஒரு உலகம்தான். மக்களின் துயர ஓலம், நாம் நம்முடைய சமூகப் பொறுப்பை உணர்ந்துகொள்ளத் தவறிவிட்டோம் என்பதை வலியுறுத்துகிறது. சமூகத்தில் 90 சத விகிதத்தினருக்கு வாழ்க்கை நடத்தத் தேவையான கல்வி, சவுகரியம், சந்தர்ப்பம், இல்லையானல், அந்தச் சமூகத்தில் ஏதோ கோளாறு இருக்கிறது என்றுதான் அர்த்தம். மனிதனை மிருகத்தினின்றும் உயர் நிலையில் வைப்பது சரீர, சம்பந்தப்பட்ட சில சிறந்த பண்புகளே ஆகும். அவற்றை வளர்க்க வகையில்லாத சமூகம் குறைபாடு உள்ளதுதான்.

துன்பமுற்ற மக்களின் பரிபவங்களைக் கண்டு உள்ளம் உருகும் தற்கால இந்தியனுக்கு, உருவற்ற கருத்தில் திளைக்கும் படித்த சிந்தனையாளர், பல்லாயிரம் மக்கள் சாக்கடைகளிலும் நடைபாதைகளிலும் செத்துமடிய, கோயிலிலும் மசூதியிலும் சென்று தொழுவதோடு திருப்தியுற்று நின்றுவிடும் மத பக்தர்கள்—இவர்களிடம் ஆத்திரமே ஏற்படுகிறது. ஆத்மீக வாழ்வு சமூக வாழ்வுக்குப் புறம்பானதல்ல. இந்தியாவை அரிக்கும்

நோய்களான, வறுமை, அறியாமை, வியாதி, வேலையின்மை-எல்லாம் விதியின் தண்டனைகள் அல்ல. இவற்றைப் போக்கிவிட முடியும். மனித முயற்சியால் இவற்றைத் தடுத்துவிட முடியும். இந்த விஷயத்தில் அதிகக் கவனம செலுத்தப்படவில்லை. இந்தியா மதபக்தி மிகுந்தது; இப்போதைக்கு, மதம்தான் ஒரு புதிய உருவில் தோற்றமளிக்கிறது. உலகில் கடவுளுக்குப் பணி செய்வோம். மனிதருடைய உள்ளங்களில் கடவுள் தன்மையைக் காப்பாற்றுவோம். பட்டினி கிடக்கும் உடலுக்கும், வறுமையுற்றிருக்கும் மனத்துக்கும் அவற்றினுடைய கவுரவத்தையும், மதிப்பையும் நிலை நாட்டுவோம். உரிமையற்றுப் போய்விட்ட மக்கள் உள்ளங்களிலே சுயமரியாதை உணர்வைத் தூண்டுவோம். அதுதான் மதம். அரசியலும் அதுவேதான்.

இந்தியா சுதந்தரம் அடைய வேண்டும், சுய ஆட்சி பெற வேண்டும், அதன் பிறகே மக்கள் வாழ்வு சிருஷ்டித் திறன் உடையதாக ஆக முடியும். தனி மனிதனுக்கும் பரந்த விசாலமான திருஷ்டி ஏற்படும். இந்தியாவின் அடிமைத்தனம் இளைஞர் உள்ளங்களில் உறுத்திக் கொண்டே இருக்கிறது. இந்தியன், உணர்வில் புண்பட்டிருக்கிறான். இந்தியா சுதந்தரத் தனியரசாகத் தலை தூக்கும் போதே, அவனுடைய உள்ளப் புண்ணும் ஆறும். பிரிட்டிஷ் ஆட்சி வாபசாகி விட்டால், இந்தியா வெங்கும் குழப்பமும், பஞ்சமும் ஏற்படும் என்ற பயமுறுத்தலைக் கைவிட வேண்டும்; மக்களிடம் தங்களுக்குள்ள மகத்தான பொறுப்புக்களைச் சுட்டியும், அரசர்களுக்குக் கொடுக்கப் பட்டுள்ள சரித்திரப் பிரசித்தமான வாக்குறுதிகளை எடுத்துக் காட்டியும், இந்திய தேசிய வாழ்வின் பிரதான அம்சங்களிடையே நிலவும் வேற்றுமையை வற்புறுத்தியும்,—பார்க்கப் போனால் இந்தியா இதற்கு ஜவாப்தாரியே அல்ல—இந்தியாவின் போக்கைத் தடை செய்வதை விடுத்துப் பிரிட்டன் ஒரு மகத்தான முடிவு செய்யவேண்டும். ஒன்றுபட்ட ஐக்கிய இந்தியாவைத் தோற்றுவிக்க வேண்டும். அதில் சமூக நியாயம், தனி மனித சுதந்திரம்-இவை உறுதி கூறப்பட வேண்டும்.

சுதந்தர இந்தியா பிரிட்டனோடு சிநேகப் பான்மையில் ஒத்துழைக்க முடியுமானால், அது சுதந்தரத்தின் மாபெரும் சாதனையாக விளங்கும்.

உலகில் ஊழிக் கூத்து இப்போதுதான் நடந்து ஓய்ந்திருக்கிறது. இனித்தான் புது உலகம் உதயமாக வேண்டும். கீழ் நாடுகளின் சிறப்பியல்புகளைக் கொண்ட இந்தியாவுக்கும் மேல் நாட்டின் சிறப்பியல்புகளைக் கொண்ட பிரிட்டனுக்கும் இடையே ஏற்படும் கூட்டுறவு, லட்சியங்களையும் சாதனங்களையும் இணைத்து நிறுத்தக் கூடிய செறிந்த அறிவுக்கு அடிகோலும்.

புதிய பர்மா

பர்மிய நண்பன்

இயற்கை அழகிற்குப் பெயர் பெற்ற தேசம் பர்மா. மூன்று புறங்களில் மலைத்தொடர் மதில் சுவர் எழுப்பியது போல் நிற்க, ஒருபுறம் விரிந்த கடல் பரந்து கிடக்கிறது.

பர்மாவின் விஸ்தீரணம் 2,61,610 சதுர மைல்கள். 1951ல் எடுக்கப்பட்ட கணக்குப்படி ஜனத்தொகை 14,667,000. பர்மிய மக்களில் 85 சத விகிதத்தினர், புத்த மதத்தைக் கடைப்பிடிக்கிறார்கள். ஷான் என்ற பாஷையும், பர்மிய பாஷையுமே பெரும்பாலோரால் பேசப் படுகின்றன.

பர்மா ஒரு நெல் களஞ்சியம். சாகுபடியாகும் மொத்தப் பிரதேசத்தில் மூன்றிலிரண்டு பங்கில் நெல் பயிராகிறது. நெல் விளைவதற்குப் போதுமான மழை பெய்யாத பிரதேசங்களில் சோளம் முதலிய இதர தானியங்கள் விளைகின்றன. ரப்பர், பெட்ரோலியம், அம்பர், தேக்கு முதலியன பர்மாவின் முக்கிய உற்பத்திப் பொருள்களாகும்.

ஒரு காலத்தில் அதன் கிராமங்கள் செழிப்புற்று இருந்தன. மக்கள் வாழ்க்கையில் இன்பமும் நம்பிக்கையும் நிறைந்திருந்தன.

"பிரிட்டன் கொடுப்பதாகக் கூறும் குடியேற்ற நாட்டாந் தன்மை பர்மாவில் யாரும் விரும்புவதாகத் தெரியவில்லை. பர்மியர் இஷ்டத்துக்கு எதிராகச் சாம்ராஜயத் தேர்க்காலில் இன்னமும் பர்மாவைப் பிணைத்து வைக்கப் பிரிட்டன் நினைக்குமானல், அது ஏமாந்து தான் போகும்" 'இங்கிலீஷ் டைஜெஸ்ட் கட்டுரை யொன்றைத் தழுவி எழுதியது இந்தக் கட்டுரை.

ஆனல் இன்று நாம் பார்க்கும் பர்மா வேறு. அது நீண்ட நோயிலிருந்து பிழைத்தெழுந்த நோயாளியை ஒத்திருக்கிறது. கதிரின் பாரம் தாங்காது பயிர் தழைத்துத் தள்ளாடிக் கொண்டிருந்த விளை நிலங்கள் இன்று அநேகமாகப் பாழ்பட்டுக் கிடக்கின்றன. பொருளாதாரம் சீர் குலைந்து, வாழ்க்கை நிலைகுலைந்து கிடக்கிறது.

பர்மாவை விடச் சிறியதான அதன் அண்டை நாடு ஸயாம் கூடச் சுதந்தரமாய்த் தலை நிமிர்ந்து நிற்கிறது. ஆனல் பர்மாவின் பந்தம் இன்னும் அறுபட்டபாடில்லை. அது இன்னமும் கவர்னர் ஆட்சியின் கீழ் அவதிப்படுகிறது. பர்மியரிடையே நிலவிய கட்சிப் பிணக்குகளே அவர்களுடைய அரசியல் முன்னேற்றத்துக்கு இதுகாறும் பெருத்த தடையாக நின்றன.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தோடு பர்மா சேர்ந்ததிலிருந்து, ஜப்பானுடன் யுத்தம் ஏற்பட்டதுவரை —அந்த இடைக் காலத்தில்—பர்மியத் தலைவர்கள் ஒருபோதும் ஒத்து வேலை செய்யமுடியாமல் திண்டாடினர்கள். யுத்தத்துக்கு முன்பு ஒரு கோஷ்டி மட்டும் தலை தூக்கியது. வெகு வேகமாக முன்னேறிக் கொண்டு வந்த அந்த கோஷ்டி விரைவிலேயே பொது மக்களின் பூரண ஆதரவைப் பெற்றுவிட்டது. இந்தக் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் தீவிர தேசிய வாதிகள். அவர்கள் பூரண சுதந்தரம் கோரினர். குடியேற்ற நாட்

டந்தஸ்தை அவர்கள் சட்டை செய்ய வில்லை. சுதந்தரத்திற் காகக் கஷ்டப்படவும், தியாகம் செய்யவும் தயாரா யிருந் தனர். சிறை சென்று வந்த தும், அவர்கள், தேசிய வீரர்களும் தியாகிகளுமாக ஆகி விட்டார் கள். 'தேசிய பர்மியப் படை களின்' தலைவரா யிருந்த ஆங் சான் என்பவரும், 'பாசிஸத்தை எதிர்க்கும் மக்களுடைய சுதந் தரச் சங்க'த் தலைவரான தாண் டூன் என்பவரும் இந்தத் தீவிரக் கட்சி யைச் சேர்ந்த தலைவர்களாகும். பர்மியரின் உள்ளங்களில் அழியா இடம் பெற்றிருக்கும் இவர்களே இன்று 'பர்மாவின் சார்பில் அதன் சுதந்தர அபி லாஷைகளைப் பறை சாற்றுகிறார் கள்.

இந்தத் தீவிர வாதிகள் யுத்தத் துக்கு முன்பே தங்கள் போராட் டங்களையும், பிரசாரங்களையும் ஆரம்பித்து விட்டார்கள். 1942ல் துரதிருஷ்ட வசமாக, ஜப்பானி யர்களின் வார்த்தைகளை நம்பி அவர்களுடன் ஒத்துழைத்தார் கள். வெகு விரைவில் ஜப்பானி யர்களின் 'குட்டு' வெளிப் படவே, திரும்பவும், 1943-ல் பிரிட்டிஷாருடன் சேர்ந்து கொண்டு, ஜப்பானியனைத் துரத்து வதில் பங்கு கொண்டார்கள். அந்தச் சமயத்தில், அவர்கள் காட்டிய மனத் துணிவும், தைரி யமும் விடா முயற்சியும் உலகத் தையே பிரமிப்பில் ஆழ்த்தின.

யுத்தம் முடிந்தது; ஜப்பானி யர்கள் தோலைந்தனர். ஆனால் பிரிட்டிஷ் ஆட்சி மட்டும் திரும்ப ஓட்டிக் கொண்டது.

மூன்று வருஷங்களில் குடி யேற்ற நாட்டு அந்தஸ்து அளிப்பதாகவும் அதுவரை ஜனங் களால் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு கவர் னரே ஆட்சி செலுத்துவார் என் றும், சமீபத்தில் வெளியான பிரிட்டனின் வெள்ளை அறிக்கை கூறுகிறது. ஆனால் பிரிட்டனின் இந்தத் திட்டம் பர்மியரைத் திருப்தி செய்யவில்லை. அவர்கள் ஓரே குரலில் "வெள்ளையனே வெளியே போ!" என்று முழங்குகிறார்கள்.

"பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் சிநேகமாகவே இருக்க நாங்கள் விரும்புகிறோம். ஆனால் சுதந்தரம் எங்களது பிறப்புரிமை என்பதை உறுதியாக நம்புகிறோம். பிரிட் டிஷ் சாம்ராஜ்யத்திலேயே பர்மா தங்கி யிருக்கவும் கூடும். ஆனால் அந்த விஷயத்தில் முடிவு செய்ய வேண்டியவர்கள் நாங்களே" என்று சமீபத்தில் ஒரு பர்மியத் தலைவர் கூறினார்.

பூரண சுதந்தரம் அடைந்து விடுவது என்று பர்மா கங்க ணங் கட்டிக்கொண் டிருக்கிறது. பிரிட்டனால் அதன் சுதந்திர லட்சியத்தை இனியும் ஒத்திப் போட முடியாது. பிரிட்டன் கொடுப்பதாகக் கூறும் குடி யேற்ற நாட்டந்தஸ்தை பர்மா வில் யாரும் விரும்புவதாகத் தெரியவில்லை. பர்மியர் இஷ்டத் துக்கு எதிராகச் சாம்ராஜ்யத் தேர்க்காலில் இன்னமும் பர்மா வைப் பிணைத்துவைக்க பிரிட்டன் நினைக்குமானால் அது ஏமாந்து தான் போகும்.

✲

வேலைக்காரர் விஷயம்

மகாத்மா காந்தி

வீட்டில் வேலைக்காரர்களை வைத்துக் கொள்ளும் வழக்கம் இன்று நேற்று ஏற்பட்டது அல்ல; வெகுகாலமாகவே இருந்து வருகிறது. ஆனால், 'எஜமானன் வேலைக்காரனை எவ்விதமாகப் பாவிக்கிறான் என்பது மட்டும் காலத்துக்குக் காலம் மாறி வந்துகொண்டிருக்கிறது. சிலர் வேலைக்காரர்களைத் தங்கள் குடும்ப அங்கத்தினர்களைப் போலவே நடத்துகிறார்கள். சிலர் அவர்களை அடிமைகளைப் போலவும் தட்டு முட்டுச் சாமான்களைப் போலவுமே கருதுகிறார்கள். சாதாரணமாக உள்ள கருத்து இந்த இரண்டு அபிப்பிராயங்களையும் தழுவியதாக இருந்து வருகிறது.

இந்தக் காலத்தில் வேலைக்காரர்களுக்கு எங்கும் அதிகமான கிராக்கி ஏற்பட்டிருக்கிறது. அவர்களும் தாங்கள் இல்லாமல் முடியாது என்பதை அறிந்துகொண்டு விட்டதால், தங்கள் இஷ்டம்போல் வேலை நிபந்தனைகளையும், சம்பள விகிதத்தையும் கேட்கிறார்கள். அவர்கள் தங்கள் கடமையைச் சரிவர உணர்ந்து நிறைவேற்றுவார்களானால், அவர்கள் கேட்பது நியாயமே. அப்படி நடந்து கொண்டால், அவர்கள் வேலைக்காரர் என்ற நிலைமையை விட்டு வீட்டுக்காரர் என்ற நிலைமையை அடைந்து விடுவார்கள். ஆயினும், ஹிம்சைதான் ஜெயிக்கும் என்ற நம்பிக்கை அதிகமாகிக் கொண்டு வருகிறது. இந்த நிலைமையில், வேலைக்காரர்கள் வீட்டுக்காரர் என்ற ஸ்தானத்தைப் பெறுவது எப்படிச் சாத்யமாகும்? இந்தக் கேள்வி சரியான கேள்வியே.

பிறருடைய ஒத்துழைப்பை விரும்புவதோடு பிறருடன் ஒத்துழைக்கவும் விரும்புபவன், வேலைக்காரரை நம்பி வாழலாகாது. வேலைக்காரர் கிடையாத காலத்தில் வேலைக்காரர் வேண்டுமானால், கேட்டதையெல்லாம் கொடுக்க வேண்டியதும், சொல்வதற்கெல்லாம் சம்மதிக்க வேண்டியதும் அவசியம்தான். ஆனால், அந்த மாதிரி வேலைக்காரரை நியமித்துக் கொள்கிறவர் கடைசியில் எஜமானாக இருப்பதற்குப் பதிலாகத் தம்முடைய பணியாளின் வேலைக்காரனாகவே ஆகிவிடுவார். அது எஜமானருடைய நன்மைக்கும் உகந்ததல்ல, வேலைக்காரருடைய நன்மைக்கும் உகந்ததல்ல. ஆனால், ஒருவர் அடிமைத்தனத்தை விரும்பாமல் ஒத்துழைப்பையே விரும்புவாரானால், அவர் தமக்கும் நன்மையைத் தேடிக் கொள்ளுவார். எவருடைய ஒத்துழைப்பை நாடுகிறாரோ, அவருடைய நன்மையையும்தேடிவிடுவார். இந்தத் தத்துவத்தை அனுசரித்து நடந்தால் குடும்பம் வேறு, உலகம்

காந்தியடிகள் அவ்வப்பொழுது, பேசியது, எழுதியது முதலியவைகளைத் தொகுத்து தேசபக்தர் ஸ்ரீ. பொ. திருகூட சுந்தரம் பிள்ளை மேற்பார்வையில் 'காந்திவழி' என்ற பெயரில் சென்னை இலக்கியப் பண்ணையார் வெளியிடுகிறார்கள். காந்தி வழி முதல் புத்தகத்தில் அடங்கியது இந்தக் கட்டுரை.

வேருக இருக்காது. மனித ஜாதி யிடமுள்ள உறவும் மாறுதல் அடைந்துவிடும். நாம் விரும்பும் லட்சியத்தை அடைய நமக்கு இதைத் தவிர வேறு மார்க்கம் கிடையாது.

இந்தத் தத்துவப்படி நடக்க விரும்புகிறவர் ஆரம்பத்தில் சிறிது சிறிதாகவே செய்து பார்ப்பர். ஆயிரக் கணக்கான மக்களின் ஒத்துழைப்பைப் பெறக்கூடிய ஆற்றலிருந்த போதிலும், தனித்து நிற்கக் கூடிய சக்தியைப் பெறுவதற்காகப் போதுமான சுய மரியாதையும், தன்னடக்கமும் பயில வேண்டும். அத்தகையோர், யாரையும் தன்னுடைய வேலைக்காரனகக் கனவில்கூட பாவிக்கக் கூடாது; அடிமையாக வைத்திருக்க முயலவும்கூடாது. எஜமானன் என்பதையே மறந்துவிட்டு, வேலைக்காரரைத் தன்னுடைய நிலைமைக்குக் கொண்டுவர முயல வேண்டும். அதாவது, எது பிறர்க்குக் கிடைக்க முடியாதோ, அது இல்லாமலே வாழ்வதற்குத் தயாராய் இருக்க வேண்டும்.

*

அட பாவி!

எனது நன்மையையே எப்போதும் நாடுபவர்கள் அனேகர் இருக்கிருர்கள். ஆனால் ஒரே ஒருவருக்கு மட்டும் 'அவன் செத்துத் தொலைய மாட்டானு,' என்றிருக்கிறது. அவர் வேறு யாருமில்லை. என் வைத்தியர் தான். வெகு நாட்களுக்கு முன்பு, என்னுடைய ஆயுள் மிகச் சீக்கிரமே முடிந்து விடும் என்று அவர் கூறியிருந்தார்.

இப்போது நான் உயிரோடிருக்கும் ஒவ்வொரு தினமும் அவருடைய கீர்த்தியைப் பழித்துக் கொண்டிருப்பதாக அவர் நினைக்கிருர்!

—எச். ஜி. வெல்ஸ்.

கவலை வேண்டாம்.

தன்னைப்பற்றி ஒரு பேப்பரில் மிக மோசமாக எழுதப்பட்டிருப்பதைக் கண்ட ஒருவன், தன் வக்கீலிடம் சென்று, அதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாமென்று கேட்டான். அந்த வக்கீல் ஒரு பெரிய சிந்தனையாளர். அவர் கூறிய யோசனை இதுதான்:

"நீ ஒன்றுமே செய்ய வேண்டியதில்லை. ஏனென்றால், அந்தப் பேப்பரைப் பார்ப்பவர்களில் பாதிப்பேர் அந்தக் கட்டுரையைப் பார்த்திருக்க மாட்டார்கள். கட்டுரையைப் பார்த்தவர்களில் பாதிப்பேர் அதை வாசித்திருக்கமாட்டார்கள். அதை வாசித்தவர்களில் பாதிப்பேர் அதைப் புரிந்துகொண்டிருக்கமாட்டார்கள். புரிந்துக் கொண்டவரில் பாதிப்பேர் அதை நம்பியிருக்க மாட்டார்கள். ஆகவே, அதை நம்பக்கூடிய ஒரு சிலரைப் பற்றி நீ ஏன் கவலைப்படவேண்டும்?"

லைப்பாய்
பழக்கத்தையும் அவன்
அறிந்திருக்கிறான்!
இப்பொழுது அவன் அதிக விஷயங்களைக் கற்றுக்கொள்கிறான். ஆனால் லைப்பாய் சோப்பைத் தினசரி உபயோகிக்கும் பழக்கம் தவிர, வாழ்க்கையில் அவனுக்கு வேறொன்றும் அதிக நன்மை செய்யப்போவதில்லை. பாதுகாப்பற்றவர்களை எல்லா இடங்களிலும் பிடிக்கிற அழுக்கு அபாயத்திலிருந்து தான் கற்பித்த புத்திமதிகள் அவனுக்குப் பாதுகாப்பளித்திருக்கிற தென்பதாக அவன் தாய் சந்தோஷமும், பெருமையும் அடையக்கூடும்.
லைப்பாய் ஒரு நல்ல சோப்பைக் காட்டிலும் சிறந்தது.
அது ஒரு நல்ல பழக்கம்
LIFEBUOY
SOAP
LEVER BROTHERS (INDIA) LIMITED

சோஹல்

படை, சொறி, சிரங்கு, முகப்பரு, சேற்றுப் புண், கரப்பான், வேனல் கட்டி, தீப்பட்ட ரணம் முதலிய சர்ம ரோகங்களுக்கும் சிறந்த களிம்பு

க்யூரோசால்

இருமல், காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு முதலியவைகளுக்கு கைகண்ட மருந்து

எல்லா இடங்களிலும் கிடைக்கும்

டிஸ்டிரிபியூடர்கள்

T. N. C. நாகலிங்கம் பிள்ளை & ஸன்ஸ்,
மருந்து ஷாப் : : மதுரை

சென்னை நகர் ஏஜண்டுகள் :
A.S. நாயகர் & கோ.,
2, சுப்பிரமணியம் சந்து, ராட்டன் பஜார், சென்னை

கோவை, சேலம் ஜில்லா ஏஜண்டு :
K. வீராசாமி
83-B. M.N.G. தெரு, கோயம்புத்தூர்

ஆந்திரா & நிஜாம் சமஸ்தான ஏஜண்டுகள் :
காரிஸன் காமர்ஸ்,
கவர்னர்ஸ்பேட், பெஜவாடா

வெற்றியின் ரகசியம்

துர்கனேவ்

அவன் ஒரு அசடு. தன்வாழ்வின் பெரும் பகுதியைச் சந்தோஷமாகவே கழித்தான். தனக்கு மூளை கிடையாது, தான் ஒருமுட்டாள் என்று பிறர் தன்னைப் பற்றி நினைப்பதை வதந்திகள் மூலம் மெள்ள மெள்ள அறிந்தான்.

இதை அறிய அவனுக்கு வருத்தமாயிருந்தது. விசனத்தோடு, தன் மனதுக்குப் பிடிக்காத வதந்திகளை எப்படிப் போக்குவது என்பதைப் பற்றி யோசிக்கலானான்.

சட்டென்று, அவனுடைய மந்த மூளையில் ஒரு யோசனை பளிச்சிட்டது.

மேலும் காலத்தை வீணாக்காது, அந்த யோசனைப்படி நடக்க ஆரம்பித்தான்.

அதே தினம் அவன் நண்பன் ஒருவனை நடுத்தெருவில் சந்தித்தான். நண்பன், பிரசித்தி பெற்ற ஒரு சித்திரக்காரனைப் பற்றிப் புகழ ஆரம்பித்தான். உடனே அந்த அசடு, ஆச்சரியம் தொனிக்கும் குரலில் "அட ராமா! அந்தச் சித்திரக்காரனுக்கு இப்போதெல்லாம் மதிப்பு ஏது? அவன் காலம் மாறிவிட்டது. இது உனக்குத் தெரியாதா? நீ இப்படிப் பேசுவாயென்று நான் எதிர்பார்க்கவே யில்லை. நீ ஒரு பிற்போக்குடையவன்" என்று கூறினான்.

நண்பனுக்கு இதைக் கேட்டதும் மிகுந்த அவஸ்தையாய்ப் போய்விட்டது. அந்த அசடு சொன்னதை அப்படியே ஆமோதித்துத் தொலைத்தான்.

கொஞ்சநாள் கழித்து அவனைச் சந்தித்த இன்னொரு நண்பன் "நான் இன்று படித்துக் கொண்டிருக்கும் புத்தகம் அற்புதமாயிருந்தது" என்று அவனிடம் கூறினான்.

அசடு பழைய ஆச்சரியம் கலந்த குரலில், "அட ராமா! வெட்கமில்லாமல் சொல்லுகிறாயே! அது ஒரு உதவாக்கரைப் புத்தகம். யாருமே இப்போது அதைப் படிப்பது கிடையாது. உனக்கு இது தெரியவில்லையே. நீ மிகவும் பிற்போக்குடையவன்" என்றான்.

அந்த நண்பனுக்கு என்னவோ போல் இருந்தது. அசடு சொன்னதைச் சரியென்று ஒத்துக் கொண்டான்.

அவனைச் சந்தித்த இன்னொரு பேர்வழி, "எனது நண்பன் ந. நா. அருமையான மனிதன். உண்மையில் அவனைப்போல உயர்ந்த மனிதன் கிடைக்க மாட்டான்" என்று தன் சினேகிதனைப் பற்றி அளக்க ஆரம்பித்தான்.

அசடு பேச ஆரம்பித்தான். ஆச்சரியத்தோடு "அட ராமா! அந்த ந. நா. சுத்த அயோக்கியன். அவன் தன் குடும்பத்தை ஒட்டாண்டி யாக்கிவிட்டான். இந்த விஷயம் தெரியாதவர் கிடையாதே. நீ சுத்த பிற்போக்குடை

நீள நெடுங் கதையாய்ச் சொல்ல வேண்டியவைகளை, சூத்திரம் போல, வசன கவிதையாகச் சொல்லுவதில் ருஷ்யப்பேரறிஞரும் கவிஞருமான இவன் துர்கனேவ் வல்லவர்.

யவன்'' என்று ஒரு போடு போட்டான்!

அந்தப் பேர்வழி ஒரு எக்கச் சக்கமான நிலைமையில் தான் இருப்பதை உணர்ந்தான். அசடு சொன்னதை ஏற்றுக் கொண்டு தன் சிநேகிதனைக் கைவிட்டான். தன்னெதிரில் யாராவது ஒருவனைப் பற்றியோ, அல்லது ஏதாவது ஒரு விஷயத்தைப் பற்றியோ புகழ்ந்தால் போதும். அவன் இந்த ஒரே பதிலைத்தான் விட்டெறிவான். சில சமயங்களில் கடிந்துகொள்ளும் பாவனையில், "இன்னமும் அதிகாரத்தில் நீ நம்பிக்கை வைத்திருக்கிருயா?'' என்று அவன் அனேகரைக் கேட்டதுண்டு.

"அவன் ஒரு முரடன். துர்க்குணம் படைத்தவன். ஆனாலும் எவ்வளவு சிறந்த மூளை அவனுக்கிருக்கிறது!'' என்று மக்கள் அவனைப் பற்றிப் பேசிக் கொண்டார்கள். "அவனுடைய நாவன்மைதான் எப்பேர்ப்பட்டது!'' என்ருர்கள் சிலர். ஆம், உண்மையாகவே அவன் ஒரு திறமைசாலிதான் என்று அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

ஒரு பத்திரிகையின் ஆசிரியர் மதிப்புரை எழுதும் பகுதியை மேற்கொள்ளுமாறு அவனை அழைத்தார்.

எதாயிருந்தாலும் சரி, யாராயிருந்தாலும் சரி, அசடு ஒரேயடியாகக் கண்டித்து எழுத ஆரம்பித்தான். ஒருபொழுதும் அவன் தன் நடையை மாற்றவோ அல்லது தன் தாக்குதல் வேகத்தைக் குறைக்கவோ இல்லை.

அதிகாரத்தையும், அதிகார வெறியையும் சதா கண்டித்துக் கொண்டிருந்த அவனே இப்போது ஒரு அதிகார வெறியனுகி விட்டான். இளைஞர் அவனை வணங்கினுர்கள். அவனைக் காண நடுங்கினர்.

இளைஞர்களால் வேறு என்ன தான் செய்ய முடியும்? பொதுவாகப் பார்த்தால், யாரும் யாரையும் வணங்கக் கூடாது தான். ஆனல் இவன் விஷயத்தில் அப்படியில்லையே! அவனேடு மாறுபட்டவர்கள் பிற்போக்கு உடையவர்களாகிவிட மாட்டார்களா? இப்படியிருப்பதனுல்தான் கோழைகளைக் கொண்டு அசடுகளும் வயிறுவளர்க்க முடிகிறது.

✲

அன்னத்தை நிந்திக்கக் கூடாது;
அதுவே விரதம்.

அன்னத்தை எறியக் கூடாது;
அதுவே விரதம்.

அன்னத்தை மிகுதியாக உண்டுபண்ண வேண்டும்;
அதுவே விரதம்.

வீட்டுக்கு வந்தவர் யாராயிருந்தாலும் மறுக்கலாகாது;
அதுவே விரதம்.

ஆகையால், எந்த விதமாகவேனும் அதிக அன்னத்தை
அடையவேண்டும்.

—தைத்திரீயோபநிஷத்

அமீனோ சத்துக்கள்

பாகோ

உடலுறுப்புக்களை வளர்ப்பதிலும் உடல் நலத்தைப் பேணுவதிலும் புரதம் (ப்ரொட்டீன்) முக்கிய அம்சமாக விளங்குகிறது. தசை, ரத்தக் குழாய்கள், இதயம், ஈரல் போன்ற முக்கிய உறுப்புக்கள் வளரவும், நல்ல நிலையில் இயங்கவும் புரதம் முக்கிய காரணமாகும். உடல் வளர்ச்சியில் பிரதான அம்சமாகவிளங்கும் இந்தப் புரதத்தின் நுண்ணிய ரசாயனக் கூறுகளே அமீனோ சத்துக்கள்.

நாம் உண்ணும் பால், இறைச்சி முதலிய ஆகாரப் பொருள்களிலிருந்து, ஈரல் புரதத்தைச் சேகரித்துப் பின் அதைப் பல விதமான அமீனோ சத்துக்களாகப்பிரித்து விடுகிறது. ரத்தக் குழாய்களின் மூலம் அந்தச் சத்தை உடலின் பலஉறுப்புக்களுக்கும் அனுப்புகிறது. அமீனோ உற்பத்தி செய்பவை ஜீரண உறுப்புக்களே. தேய்ந்து போன உறுப்புக்களை அமீனோ சத்துப் புதுப்பிக்கிறது. ஓய்ந்து போன உறுப்புக்களுக்கு அது புத்துயிரளிக்கிறது.

ஜீவ சத்தான அமீனோ நாம் உண்ணும் ஆகாரத்திலேயே இருக்கிறது என்ற விஷயம் சமீபத்தில்தான் டாக்டர்களுக்குத் தெரிய வந்தது. யுத்தத்துக்கு முன்பு, சராசரி மனிதன் உண்டு வந்த ஆகாரத்திலிருந்து அவன் தேவைக்கான அமீனோ சத்துக் கிடைத்துவந்தது.யுத்தம் வந்தது; எல்லாப் பொருளுக்கும் வறட்சி ஏற்பட்டது. பங்கீடு முறை வந்தது; பால், இறைச்சி முதலிய புஷ்டி உணவுகளுக்குப் பஞ்சம் ஏற்பட்டது. என்னதான் இதர உணவுப் பொருள்கள் கிடைத்தன என்றாலும், அவன் ஆகாரத்தில் அவன் தேவைக்கு வேண்டிய புரதச் சத்து இருந்தும் அவன் வளர்ச்சி பாதிக்கப் பட்டது. சிலர் தலை வழுக்கை விழுந்தோ, பல் சொத்தைப் பட்டோ, அல்லது சொறி வந்தோ அவதிப் படலானார்கள். வைத்தியர்களுக்குவிஷயம் விளங்கவில்லை. பல பரிசோதனைகள் நடத்தினர். புரதத்தில் பலவகை அமீனோ சத்துக்கள் இருப்பதையும், அவைகள் அளவு குறைவதாலோ, இல்லாது போவதாலோ தான் கோளாறுகள் ஏற்படுகின்றன என்பதையும், அவர்கள் கண்டனர்.

1935-ல் கலிபோர்னியோ சர்வ கலாசாலையைச் சேர்ந்த புரொபசர் டபிள்யு சி. ரோஸ் என்பவர் தமது பரிசோதனைகள் மூலம் பத்து வித அமீனோ சத்துக்கள் மனித வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாதன என்று முடிவுகட்டி உள்ளார். இது வரை அமீனோவில் இருபத்து மூன்று வகை இருப்பதாகத் தெளிவாகி யுள்ளது. இவற்றில் முக்கிய மானவை பத்து அமீனோ சத்துக்கள்தாம்.

வைத்திய சாஸ்திரத்தில் புது சகாப்தத்தை உண்டாக்கிய சாதனங்களில், வைட்டமின், பெனிசிலின் இரண்டுக்கும் பிறகு அமீனோ சத்துக்கள் தான் முக்கியமானவை—புதுமையானவை, அதியாச்சரியமான பலனுள்ளவை. இது பற்றி வெளிவந்துள்ள விஷயங்களின் சாரத்திரன் இது.

வகைகள் :

(1) ஆர்ஜினேன் : குழந்தைப் பேறுக்கு உதவி செய்வது இந்த அமீனே. இது 1895-ல் கண்டு பிடிக்கப்பட்டது.

(2) டிரிப்டோபேன் : இந்த அமீனே குறைவதாலோ, இல்லாது போவதாலோ, நான்கு வித நோய்கள் ஏற்படுகின்றன. தலை வழுக்கை விழுதல், புணர்ச்சி விழைவின்மை, பல் சொத்தை யாதல், கண்களில் சதை படர்தல் இவை ஏற்படுகின்றன.

(3) லைசின் : உணவில் இது குறைந்து விடுமானல், பெண்களின் மாதவிடாய்க் காலங்கள் தவறிப் போகின்றன.

இந்த மூன்று அமீனேக்களைப் பற்றித்தான் சிறிது விவரமாகத் தெரிகிறது.

இதர முக்கிய அமீனேக்களின் பெயர்கள் வருமாறு:

(4) ஹிஸ்டிடின் : (5) ஐஸோர் லென்சினேன் : (6)லென்சின் : (7) மெதியோனேன்: (8) ∴ பெனிலாலனேன் :(9)திரியோனேன் (10) வலேன் :

வலேன் : இந்த அமீனே நரம்புகளின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகிறது.

மெதியோனேன் என்ற அமீனே ஈரல் நல்ல நிலையில் இருக்க அவசிய மானது.

டைரோசின், கிளிசின் இரண்டும் இரண்டாம் பட்ச அமீனே தொகுதியைச் சேர்ந்தவை.

உணவில் கிளிசின் சத்துக் கலப்பதால், உடல் தசைகள் வலுவடைகின்றன.

புரதச் சத்துள்ள உணவுகள்: இறைச்சி, மீன், கோழி, பாலடை, பால், முட்டைகள், தானியங்கள்,கடலைகள், அவரை, மொச்சை முதலியன. முக்கியமாக மாமிசம், முட்டைகள், பாலடை இவை முதல்தரப் புரதச் சத்துள்ள உணவுப் பொருள்கள். இவைகளில் எல்லாவித முக்கியமான அமீனே சத்துக்களும் அடங்கி யுள்ளன.

ஷாட்ரோ, கேவியார் என்ற மீன் இறைச்சிகள் ஆர்ஜினேன் சத்து அதிகம் உள்ள உணவுப் பொருள்கள்.

பாலில் புரதம் அதிகமிருந்தாலும் அமீனே சத்து சுமார்தான். மொச்சை வகைகளும், பருப்புக்களும், கடலைக்கொட்டைகளும் சுமார் அளவு புரதச் சத்துள்ளவை. ஆனல், இவற்றில் அமீனே சத்து அபரிமிதமாக இருக்கிறது.

கோதுமைப் பண்டங்களில் அமீனே சத்து கொஞ்சம்தான். பசுமையான காய்கறிகளில் உள்ள அமீனே சத்து சொற்பமே.

நீண்டகாலப் பட்டினி, கொடிய நோய், பிரமாத ரண சிகிச்சை—காரணமாக ஜீரண உறுப்புக்கள் சக்தி இழந்து விடுகின்றன. உட்கொள்ளும் ஆகாரத்திலிருந்து உடலுக்கு வேண்டிய புரதத்தைத் தயாரித்துக் கொள்ள அவ் வுறுப்புக்களால் முடியாது போகிறது. புரதம் வெகு வேகமாகக் கரையும் போது உடல் நலம் ஒரேயடியாகச் சீர் கெடுகிறது. புரதச் சத்துக் கழிவின் அபாயத்தைத் தடுக்க வழிகாணது டாக்டர்கள் திகைத்தனர். ஆபரேஷன் நடந்து சில காலம் வரை நேரடியாக உணவு கொள்வது சாத்தியமில்லை. அந்த நிலையில், மாற்று

ரத்தத்தைச் செலுத்தியோ, குளுக்கோஸ் இஞ்செக்ஷன் கொடுத்தோ, நோயாளியின் தேக சுகம் மோசமாகி விடாத படி ஓரளவுக்குப் பார்த்து வந்தனர். அமீனோவைப் பற்றி அறிந்து கொள்ளும் வரை இந்த வழியைத் தான் டாக்டர்கள் பின்பற்றினர்.

எவ்வளவு தான் புரதம் இன்றியமையாதது என்றாலும், அது நேரே ரத்தத்தில் கலக்க முயாது. ரசாயன உபாயங்களின் மூலம் பலவேறு விதமான அமீனோ சத்துக்களாகப் பிரிக்கப்பட்ட பிறகே அது ரத்தத்தில் கலந்து கொள்ள ஏற்றதாகிறது.

புரதச் சத்துக் கரைவுக்குத் தக்க மாற்று, அமீனோ. நோயாளியின் உடல் நலமோ, உடல் நிறையோ ஒருசிறிதும் பாதிக்கப் படாத விதத்தில் எத்தகைய பெரிய ரண சிகிச்சையையும் நடத்துவதை அமீனோ ரசாயனம் சுலபமாக்கி விட்டது.

ரண சிகிச்சை முறையில் அமீனோ, பிரமாத முக்கியத்துவம் வாய்ந்தது. உதாரணமாகச் சில சந்தர்ப்பங்களை நோக்குவோம்:

1936-ல் ஒருவனுக்கு வயிற்றில் பிளவை புறப்பட்டிருந்தது. அதை ஆபரேஷன் செய்து அகற்றுவது சாத்தியமாயில்லை. அவனால் ஒருதுளி தண்ணீரும் அருந்த முடியவில்லை. சர்க்கரை நீரையும், உப்பு நீரையும் கரைத்து உள்ளே செலுத்தி வந்தும், நோயாளி அணு அணுவாகச் செத்துக் கொண்டிருந்தான்......கடைசியாக, டாக்டர்கள் அமீனோ தயாரிப்பை உபயோகித்தனர். மணிக்கு மணி ஒருமாத காலம் அதனை உள்ளே செலுத்தி வந்தனர்.

பிரமிக்கத் தக்க வகையில் அவன் குணமடைந்தான். எழுந்து நடக்க முடிந்ததோடு, பிறவார்டுகளுக்கும் சென்று மற்றவருக்கு உதவவும் அவனால் முடிந்தது.

2. அடி வயிற்றில் கண்ட பெரும் நோயால் ஒரு பல் வைத்தியன் துடித்துக் கொண்டிருந்தான். அவனுடைய சிறு குடலில் மூன்று அடி தவிர மற்றப் பாகத்தையும், பெருங் குடலில் சரி பாதியையும் இரண்டு ஆபரேஷன்களில் வெட்டி எடுத்துவிட வேண்டியதாயிற்று. வேறு சாதாரண முறையில் ஆபரேஷன் நிகழ்ந்திருந்தால், நோயாளியின் பாடு ஆபத்தாய்ப் போயிருக்கும். ஆரம்பத்தில், நோயாளிக்குத் தாராளமாக அமீனோ இஞ்செக்ஷன் கொடுத்த பிறகு, ஆபரேஷன் நடந்தது. இடையில் எவ்விதமான சிக்கலும் நேரவில்லை. நோய் குணமானதோடு அவன் உடல் நிறையும் ஐம்பது பவுண்டுகள் அதிகரித்ததாம்.

3. ஹோபாக்கன் என்ற ஊரைச் சேர்ந்த ஒரு கப்பல் தள வேலையாள், சிகரெட் பிடித்துக் கொண்டும், படுக்கையில் படுத்துக்கொண்டும் புத்தகம் படித்துக் கொண் டிருந்தான். பிறகு அப்படியே தூங்கி விட்டான். படுக்கை தீப் பிடித்து, அவன் அணிந்திருந்த பைஜாமா அவன் தலை, முகம், கை, கால்கள், மார்பு எல்லாம் கருகிவிட்டன. பெல்விவே ஆஸ்பத்திரியில் முதலிரண்டு நாட்களுக்கு அவனுக்குக் கொள்ளை கொள்ளையாக ரத்த ப்ளாஸ்மாவை இஞ்செக்ஷன் செய்தனர். தினமும் அவன் உடலி லிருந்த புரதம் பயப்படும்படிக்கு அவ்வளவு பெரும் அளவில் கரைந்தோடிக் கொண்டிருந்தது. அவன் உடலுக்குத் தேவையான நிலையில் புரதச் சத்து அளவைப் பாது

காக்கத் தினமும் 20,000 கனவிகள் புஷ்டி உணவை அவனுக்கு அளிக்க வேண்டும். அதாவது, மிகவும் சுறுசுறுப்பான மனிதன் சாப்பிடும் உணவைப் போல் இது ஐந்து மடங்கு அதிகம். இந்த புஷ்டியைப் ப்ளாஸ்மா மூலமே அளிக்க வேண்டும். அதற்கு நாளொன்றுக்கு இருபத்து மூன்று முறை ப்ளாஸ்மா இஞ்செக்ஷன் கொடுக்க வேண்டும். அதற்குத் தேவையான அளவு மாமிசம் கிடைக்குமா, அத்தனை புஷ்டிச் சத்தையும் ப்ளாஸ்மாவாகவே நோயாளி உட்கொள்ள முடியுமா, என்பது வேறு கேள்வி. தவிரவும், இப்படிச் சிகிச்சை செய்யத் தினமொன்றுக்கு 15 டாலர் செலவாகும். இந்த நிலையில், அமீனோ ரசாயனம் இந்த நெருக்கடியைத் தீர்த்து வைத்தது. இதற்கான செலவும் தின மொன்றுக்கு மூன்று டாலர்தான்.

வயிற்றில் புரையோடிப் போய் விட்ட புண்களைக் குணப் படுத்துவதிலும் அமீனோ உபயோகமானது என டாக்டர்கள் கூறுகிறார்கள். [ஆனால், குடல் புண் விஷயம் இன்னும் டாக்டர்களுக்கே சரியாகப் பிடிபடவில்லை.] "வயிற்றுப் புண்களைக் குணப்படுத்தும் முறையில் அமீனோவின் குணத்தைப் பற்றி முடிவு கட்டுவது . அவசரமான செய்கையாகும்" என்று டாக்டர் ஃப்ராங்க் கோடியூய் என்பவர் (நியூயார்க் சர்வ கலாசாலை, பெல்லிவி ஆஸ்பத்திரி—இவற்றைச் சேர்ந்த ஆராய்ச்சி நிபுணர்) கருதுகிறார்.

ஆபரேஷனுக்குப் பிறகு உடல் வாட்டம் ஏற்படுவது தடுக்க முடியாதது. ஆனால், அதனால் பலவீனம் அதிகரித்து நோயாளியை அதிகமாகப் பாதித்து விடாதபடி ஓரளவுக்குச் செய்ய முடியும். அதற்கு, ஆபரேஷனுக்கு முந்தியே நோயாளியின் உடல் வளம் வெகு நன்றாகவும் உறுதியாகவும் பண்படுத்தப்பட வேண்டும். இந்த விஷயத்திலும் அமீனோ பிரமிக்கத்தக்க விதத்தில் பயனாகிறது என்று டாக்டர்கள் கூறுகிறார்கள்.

சில மூத்திரக்காய்க் கோளாறுகளிலும் உயர்ந்த அமீனோ உணவால் குணம் கண்டிருப்பதாகக் குழந்தை நோய் நிபுணர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். ஃபிலெடெல்பியாவில் ஒரு ஐந்து வயதுக் குழந்தை "ஹெர்ஸ் பிரிங்" (பெருங்குடல் வீங்கி, அதனால் வளர்ந்த நோய்) நோயால் வருந்தியது. கொழுப்பு, சர்க்கரைச் சத்துகள், இவற்றோடு அமீனோவும் ஐந்து நாட்களுக்குத் தொடர்ந்து குழந்தைக்குக் கொடுக்கப்பட்டது. குழந்தை, மரணத்தின் பிடியிலிருந்து காப்பாற்றப் பட்டது.

கர்ப்ப ஸ்திரிகளுக்கும் அமீனோ பல வகைகளில் உபயோக முள்ளது. இன்னும் பல விதங்களில் உதவவும் கூடும்.

நியூ ஆர்லியன்ஸில் லூய்சியானா அரசாங்க மருத்துவச் சர்வ கலாசாலைப் பள்ளியைச் சேர்ந்த டாக்டர் ரூபர்ட். ஈ. ஆர்னலும் அவர் சகாக்களும், பின்வருமாறு கூறுகிறார்கள்: "அமீனோ சத்துக்களைத் தனியாகவோ அல்லது ரத்தப்ளாஸ்மா இஞ்செக்ஷனோடு கூடவோ கர்ப்ப ஸ்திரீகளுக்கு அளிப்பதால், அவர்களுக்கு ஏற்படும் 'எடிமா' என்ற கொடிய நோயை விரைவில் குணப்படுத்தி விடலாம்."

மருத்துவத் துறையில் அமீனே ஒரு சர்வ நோய் சஞ்சீவினி. உபயோகத்தில் அதைப்பற்றிய மிகவும் முக்கியமான ஆட்சே பணை அதன் துர்நாற்றமும், விரும்பத்தகாத சுவையும்தான். வாயருகே கொண்டுபோனுலே, ஒரேயடியாகக் குமட்டலும் வாந்தியும் வந்து விடும். எத்தகைய திடசாலியும், ஆரோக்கியமான குடல் உள்ளவனும் தினமும் மூன்று நான்கு முறை என்று பலவாரங்கள் தொடர்ந்து அதைச் சாப்பிடுவது மிகவும் துர்லபமே.

தக்காளி ரசம், பழரசம் அல்லது சாக்கலேட்டுடன் சேர்த்துச் சாப்பிட்டாலும், அதன் குமட்டல் சுவை அப்படி ஒன்றும் அதிகமாய்க் குறைந்து விடுவதில்லை.

அருவருக்கும் அதன் சுவையை மறைக்க ஒரே வழி, நாவின் சுவைக் குமிழிகளை 'ஏமாற்றுவது' தான். மூக்குத் துவாரங்கள் வழியே குடலுக்கும், சிறுகுடலுக்கும் குழாய் மூலம் அமீனேவைக் கொண்டுசெலுத்த வேண்டும். நோயாளிக்கு இதனுல் துன்பமும் நோவும் அதிகரிக்குமானுலும், அமீனேவை அப்படியே விழுங்கும் 'கண்ணராவிக்கு' அவன் இந்த வேதனையையும் பொறுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிருன்.

அமீனே ரசாயனத்தில் அருவருப்புத் தட்டும் அம்சங்களை நீக்காவிட்டாலும், கூடியவரை குறைப்பது சம்பந்தமாகவாவது பலரும் பல வழிகளில் உழைத்து வருகிருர்கள். பென்சில்வேனியா சர்வகலாசாலை டாக்டரொருவர் இவ்விஷயமாக ஒரு சிறு மாற்றம் செய்திருக்கிருர். கால் நடைகளின் நீண்ட எலும்புகளைக் கொண்டு தயாரித்த 'ஜெலாட்டின்' என்ற பொருளை அமீனே ரசாயனத்துடன் கலந்து கொடுப்பதால், அமீனேவின் இயல்பான அசங்கிய — அருவருப்புத் தன்மை சிறிது மட்டுப் படுகிறது என்பதைப் பரிசோதனை மூலம் கண்டுள்ளார்.

அமீனே என்பது ஒரே மருந்தின் பெயரல்ல. ஒரே தன்மை வாய்ந்த பல மருந்துப் பொருள்களின் கூட்டு அல்லது தொகுப்புப் பெயர் ஆகும். இதுவரை அமீனேத் தொகுதியில் இருபத்து மூன்று சத்துக்கள் இருப்பனவாகத் தெரிகிறது. புரதச் சத்தினின்றும் பிரித்தெடுக்கப்படும் சில அமீனேப் பொருள்களில் வேறு பொருள்களும் மிக நுண்ணிய அளவில் கலந்துள்ளன என்று தெரிகிறது. கலப்பற்ற ரீதியில் அமீனேவைப் பிரித்து எடுக்க வழி காணவேண்டும்.

அமீனே தயாரிப்பு—அவற்றை உட்கொள்ளும் முறைகளில் மாறுதல் செய்தல்-சம்பந்தமாகப் பெரும்படியான அளவில் ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. இது விஷயமாக முதலில் வேலை செய்ய ஆரம்பித்தவர் டாக்டர் ஐ. எஸ். ராவ்டின் என்பவர். இந்த துறையில் பென்சில்வேனியா சர்வ கலாசாலை ஹாரிசன் ரண சிகிச்சை இலாக்காவைச் சேர்ந்த டாக்டர்களும் பரிசோதனைகள் நடத்தி வருகிருர்கள்.

அமீனே ஒரு சர்வ ரோக சஞ்சீவினிதான். ஆனுல், அதைத் தயாரிப்பது எளிதானதல்ல. அதை உபயோகிப்பதிலும் பல சிக்கல்களைக் கடந்தாக வேண்டும்.

அமீனோ ரசாயனம் சிரமமானது என்பதை விட, செலவு ஏராளமாக ஏற்படக் கூடியது என்பது மிகவும் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம்.

1939-ல் இல்லினுய் சர்வ கலா சாலையின் ஆராய்ச்சிக் கூடத்தில் புரொபசர் சி. எஸ். மார்வெல் என்பவர் ஆறு பவுண்டு திரியோனைன் என்ற அமீனோ தயாரித்தார். அவருக்கு ஒரு பவுண்டு அமீனோ தயாரிக்க 900 டாலர் பிடித்ததாம். இந் நிலையில் ஒரு திரியோனைன் உணவு மாத்திரை 100 டாலர் விலை பெறும்.

இன்றைய நிலையில், அமீனோ பிரத்தியேக உபயோகத்திற்கே லாயக்கானது. பொது ஜன உபயோகத்துக்கு அது கிடைக்க வேண்டுமானால், ஏராளமான அளவில் மலிவான முறையில் அந்த ரசாயனம் தயாராவதற்கு வழி காணவேண்டும். இன்று பல டாக்டர்களின் கருத்தை ஈர்த்திருப்பது இந்த ஒரே நோக்கந்தான். இதற்காகப் பலர் பல வழிகளில் பரிசோதனைகளை நடத்திப் பாடுபட்டு வருகிறார்கள்.

பெனிசிலின் போல, அமீனோவும் விஞ்ஞான யுகத்தின் மகத்தானதொரு வெற்றியாகும். பெனிசிலின் அன்று மிகவும் அருமையாயிருந்தது. விலையும் அதிகமாக இருந்தது. இன்று பெனிசிலின் ஏராளமாக உற்பத்தியாகிறது. மலிவாக விற்கிறது. எல்லாருடைய உபயோகத்துக்கும் எளிதில் கிடைக்கும் நிலையிலுள்ளது. அமீனோ ஆராய்ச்சி, உற்பத்தி விஷயமாகச் சுமார் இருபத்து ஐந்து கம்பெனிகள் அமெரிக்காவில் ஈடுபட்டு வேலைசெய்து வருகின்றன. கூடிய விரைவிலேயே பெருவாரியான அளவில், எவரும் எளிதில் விலை கொடுத்து வாங்கும்படிக்கு, அமீனோ சத்துக்கள் கிடைக்கும் என்பது நிச்சயம்

✲

"முத்தமிட் முடியுமா?"

இங்கிலாந்தில் ரிச்மாண்ட் என்ற விடத்தில் ஜூன் 27-ம் தேதி நடந்த ஒரு ருசிகரமான சம்பவம் பேப்பரில் வெளியாகி இருந்தது.

ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்த ஒரு யுவதி தூக்கத்தில் ஆழ்ந்திருந்தாள். அவள் நல்ல அழகி.

அதே வண்டியில் இரண்டு வாலிபர்களும் இருந்தார்கள். அவர்களில் ஒருவன் தூங்கும் அழகியைக் காட்டி மற்றவனிடம் "அவளை உன்னால் முத்தமிட முடியுமா? பந்தயம் கட்டுவாயா?" என்று சவால் விட்டான்.

மற்றவன் அந்தச் சவாலை ஏற்றுக்கொண்டான். அழகியை முத்தமிட்டு விட்டு, பந்தயத் தொகையான இரண்டு ஷில்லிங்கையும் பெற்றான்.

விழித்துக் கொண்ட அழகி வெகுண்டாள். விளைவு என்ன தெரியுமா? முத்தமிட்ட ஆர்ச்சிபால்ட் கிலர் என்ற வாலிபனுக்குக் கோர்ட்டில் 4 பவுன் அபராதம்!

இப்பொழுது பூராவும்
வெண்மையானது
—ஜாஸ்தி அழுக்குப்படியும்
இடங்கள் உள்பட
ஒவ்வொரு உடையிலும் சீக்கிரம் மலினமாகும் பாகங்கள் உண்டு—அந்த பாகங்களை சொற்பமாக சோப்பைத் தேய்த்து, தண்ணீரில் நனைத்து அடித்துத் துவைப்பதால் அதிகமாகக் கெட்டுப்போகக் கூடினவை.
உங்கள் துணிகளை ஸன்லைட் முறைப்படி சுத்தம் செய்து அடித்துத் துவைப்பதனுலேற்படும் நாசத்தை விலக்குங்கள்.
ஸன்லைட் சோப்பின் ஏராளமான சுயமாக இயல்கிற நுரையை நனைந்த துணியிடையே புகுத்திக் கசக்கி, பிறகு அலசி சுத்தம் செய்தால், துணி மிக தூய்மையாகவும், வெண்மையாகவு மாகிறது. . . அத்துடன் உங்கள் ஆடைகளுக்கு, இச் சுத்தமான சோப்பை பயன் படுத்துவோருடைய இஷ்டபோகமான தோகையை யொத்த மிருது தன்மையும் ஏற்படுகிறது. ஸன்லைட் உங்கள் துணிகளுக்கும், அவையின் சாயங்களுக்கும் குணமளிப்பதோடு, உங்கள் கைகளை மிருதுவாகவும், மழமழப்பாகவும் வைத்துக் கொள்ளுகிறது.
இது ஸன்லைட் முறைப்படி சுத்தம் செய்தது!
SUNLIGHT SOAP
ஸன்லைட் சோப்
S.79-50 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED

தாயின் மகிழ்ச்சி

பலவருஷங்கள் தனிமையிலும் அசௌக்யத்திலும் உழன்ற பின்னர் ஒரு புஷ்டியான குழந்தைக்குத் தாயாக விருப்பதில் அவள் பெருமைப் படுகிருள்.

கர்ப்பக் கோளாறுகளுக்குச் சிறந்த ஔஷதம்.

பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்

அருணை

கர்பாசயரோக நிவாரணி:

ஆயுர் வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ்

உன்னத தயாரிப்புகள்!

மோஹன்ராம்

பெட்ஷீட்டுகள் ★ டவல்கள்

●

மதுரை நிட்டிங் கம்பெனியாரின்

M. K. C. "சிங்க மார்க்"

பனியன்கள், புல் ஓவர்ஸ், அண்டர் வேர்ஸ், புளவ்ஸஸ், ஸ்வெட்டர்ஸ் Etc.

●

Stockists :

மனோஹரன் ஸ்டோர்ஸ்

181, கீழவாசல் :: மதுரை

தந்தி : 'Harantalky' போன் : நெ. 219

பணம்

கலா நிலயன்

மனிதர்தம் மனோபாவம் பல வகையா யிருப்பினும், அனைவரும் பொருள் தேடும் நோக்கத்தில் சமானமானவர். ஆசைகள் அனேகமுள வெனினும், அவையெல்லாம் பொருள் ஆசையில் அடங்கியவை எனலாகும். மனிதர் நோக்கம் எதுவாயினும், முதற் கவலை பொருள் கவலையே. நமக்கு இதம் தரும் பதம் பிறிதென்று நாம் கருதினும், அதை அடைதற்குப் பொருளே மூலமென்று நாம் நம்புகின்றோம். பொருளை உபயோகிக்கும் வழிகளைப் பற்றி மனிதர் அபிப்பிராயங்கள் வித்தியாசப் படினும், அனைவரும் பொருளின் அவசியத்தையும் மதிப்பையும் அங்கீகரிக்கின்றனர். "பணம் பத்தும் செய்யும்" என்பது பழமொழி.

பணத்தின் உதவியால் படைக்கலாகாதது ஒன்று மில்லை என்று தோன்றுகிறது. "கொண்டாட்டும் குலம்புனைவும்," வண்டார் பூங் குழலார் இன்பமும், வானோங்கு மாடங்களும் தோட்டங்களும், வாகனமும் பரிஜனமும், ஊரார் புகழ்ச்சியும் செல்வரையே சேர்கின்றன. "சேராதன வுளவோ பெருஞ் செல்வர்க்கு" என்கின்றார், கம்பரும். ஆதலின், பொருள் பல்வகை இன்பங்களுக்கும் ஆதாரமாய் நிற்கின்றது.

பணம் ஒரு கருவி—நல்ல கருவி. அதைச் சரியாய் உபயோகிக்க நமக்குத் தெரியாவிட்டால், அது யாருடைய குற்றம்?—கலாநிலைய ஆசிரியர்களுள் ஒருவர்தான் இதை எழுதியிருக்க வேண்டும். தெரிந்தவர்கள் தெரிவிக்க வேண்டுகிறோம்.

பொருளின் அவசியம் இவ்வாறிருப்பதால், ஒவ்வொரு மனிதனும் செல்வம் சேகரிப்பதில் மனத்தைச் செலுத்துவது இயற்கையே. உலக வாழ்க்கைக்கு இன்றியமையாதனவும் இதத்தைத் தரக்கூடியவையுமான கைத்தொழில், சித்திரம், சிற்பம், சங்கீதம் முதலிய துறைகளில் ஜனங்கள் இறங்கி உழைத்துத் தமது சிரமத்திற் கேற்ற சன்மானம் எதிர்பார்ப்பதும் இயற்கையே. பொருளீட்டும் ஆசை தருமத்துக்குக் கட்டுப்பட்டிருந்தால் ஒரு விதக் கேடும் விளையாது. தாம் விழையும் பொருளுக் கேற்ப உழைத்தும், உலகத்துக்குத் தாம் செய்யும் உதவியால் வரும் ஊதியத்தை அனுபவித்தும் வருபவர் அறத்தின் வழி நிற்பவராவர். முயற்சியால் செல்வ மெய்தின் அச் செல்வம் சிறப்பாம்.

ஆனாலோ, மனிதர் கொள்கின்ற ஆசை அவர் முயற்சிக்கும் யோக்கியதைக்கும் தக்க வாறிருப்பதில்லை. உழைப்பின்றியே பொருளீட்டுவதில் நாட்ட முடையோர் அனேகர்.

அத்தகையோர் சுற்று முற்றும் நோக்கி, பணம் தேடும் வழிகள் எவையெனு முளவோ என்று ஆராய்கின்றனர். இவ் வழிகளைக் கண்டுபிடிக்கப் பெரிய ஆராய்ச்சி அவசியமில்லை. தரும சிந்தையும் நற் புத்தியு முடையோர் நீடித்த முயற்சியால் தமது வாழ்நாளின் இறுதியிலும் கூட ஈட்டவொண்ணாத பொருளை அயோக்கியர் பற்பல உபாயங்

களினாலும் வஞ்சனைகளினாலும் சில நாட்களில் எய்துகின்றனர். நம்பிக்கையுள்ள நல்லவர் கைப் பொருள் எளிதில் பொய்யர் கைவச மாகின்றது. இளைஞர், அறிவீனர், உன்மத்தர் முதலியோரது செல்வம், தந்திரத்தினாலும் பலவந்தத்தினாலும் எளிதில் அபகரிக்கப்படுகின்றது. செல்வம் தீய வழிகளில் சேகரிக்கப் படினும், அது தன்னை யடைந்தவருக்குப் பேருதவி புரிகின்றது. பலர் கண்களைப்பகட்டுகிறது அவர்கள் செய்யும் அக்கிரமங்களை மறைத்து, அவற்றை வெளிப்படுத்த எண்ணங் கொண்டவர் வாயையும் அடக்குகிறது. மிகப் பெரிய திரவியத்தைச் சேகரித்தவர்களிடம் இவ்வளவு பொருள் எப்படிச் சேர்ந்தது என்று கேட்கவும் ஜனங்கள் பயப்படுகின்றார்கள். எளியோர் பயந்து பயந்து அக்கிரம வழிகளில் சிறிது பொருள் தேடுவதைப் பார்த்துத்தான் மனிதர் கோபாவேசங் கொண்டு அவ் வஞ்சகரைச் சந்திக்கிழுக்கின்றனர். இந்த கீழ்ப்படிகளைத் தாண்டி மேற்சென்ற அயோக்கியர்களைப் பெருமை பாராட்டியும் கொண்டாடியும் புகழ்ந்தும் வருவது பெரும்பாலோர் இயற்கை. பணம் சேர்க்கச் சேர்க்க அதனால் விளையும் நலத்தையும் பலத்தையும் அறிந்து, அறிவிலிகள் செய்யும் வஞ்சனையாலும், அதனைப் பொருக்கெனப் பெற வேண்டுமென்னும் அவசரத்தாலும், உலகவாழ்க்கையின் சமாதானம் நிலை குலைகின்றது. பொருள் சேர்ந்தால் பயம், சேராவிடின் துக்கமாதலின், மனிதர் இரு கிளையாய்ப் பிரிந்து, ஒரு திறத்தார் வஞ்சிப்பதும், மற்றொரு திறத்தார் அவ் வஞ்சனையை எதிர்ப்பதுமாய் நிற்கின்றனர். உலகத்தின் தற்கால நிலைமையை உன்னுங்கால், மனிதர் ஒருவருக் கொருவரும், தேசங்கள் ஒன்றிற் கொன்றும் நம்பிக்கை குன்றியிருப்பது வெளிப்படையாகிறது. காகிதமும் கையெழுத்தும், சாட்சியும் அரசாங்கத்தினரது முத்திரைகளு மில்லாமல் ஒரு விவகாரமுமில்லை. மனிதர்களுடைய துன்மார்க்கத்துக்கும், நம்பிக்கைத் துரோகத்துக்கும் இதைவிட என்ன அத்தாட்சி வேண்டும்?

பணத்தைச் சேர்ப்பதற்குரிய தந்திர வழிகள் ஏகதேசம் அறநெறிக்கு ஏற்றனவல்ல; சில, தருமத்துக்கு நேர் விரோதம்; அவை அறத்தை மறந்தன்றி, அறிந்தே அறவே அகற்றும் ஆறுகள்; மற்றும் சில, அறமோ மறமோ என அயிர்ப்பைத் தந்து அதர்மத்தையே விளைவிப்பனவாகி நல்லோரையும் ஈர்த்து, சாதுக்களையும் மருட்டும் தன்மையன. இன்னவர் மற்றோரைப்போல் நெடுங்காலம் தீய வழிகளில் இழிந்துழலாமல் சீக்கிரம் நல்வழிக்குத் திருந்துகின்றனர்.

முற்காலத்தில் நிலச் செழிப்பால் எல்லோரும் இனிது அருந்தி இருக்கப் போதிய அளவு உணவு கிடைத்திருந்தால், சண்டை சச்சரவில்லை; போட்டியும் பொய்யுமில்லை. சமராஜ்யம் சமாதானமாய் விளங்கிற்று. அக் காலம் மீண்டும் வாராது. இக் காலம் உழைப்பவருக்கு உரிமை உண்டாகிறது. உழைப்பின்றி உண்ணக் குறுக்கு வழி தேட அனேகர் முயல்கின்றனர். மரம் நடாமல் பழம் தின்னவும், போருக்கு பின் நின்று, வெற்றியின் வெகுமதிகளுக்கு முன்னிற்கவும் ஆயத்தமானவர் அனேகர்.

பொருளீட்டுதலால் அறத்துக்கு விளையும் தீமைகளை உன்

னிச் சிலர் பொருளை வெறுத்து விடுகின்றனர். இவர்கள்,தம்மால் அடக்கி ஆளமுடியாத பயத்தால் பொருள் நசையை நசுக்கி விடுகின்றனர். இத்தகையோர் தீமையை ஒழிக்கின்றார் எனினும்,பொருளால்பெறக்கூடிய நன்மையையும்கூட இழந்து உதாசீனராய்க் காலத்தைப் பிறர்க்குப் பயனின்றிக் கழிக்கின்றனர். ஜன சமூகத்துக்கு இவர்களால் தீமை இல்லை, ஆனல் நன்மையுமில்லை.

நமது வாழ்நாளின் இன்பத்துக்குப் பொருள் இன்றியமையாதது. இப்பொருளைதருமவழிகளிற் காட்டிலும் தீய நெறிகளில் எளிதில் அடையலாம். எப்பொழுதும் மானிடர் மனத்துள் நின்று உந்தும்பொருளாசைக்குப் பரிகாரம் கடவுள் சிந்தனையும், 'அறம் வெல்லும், பாவம் தோற்கும்,' என்னும் மனோதிடமுமே.

✻

அவர்களுக்கே தெரியாது!

கொலைகாரர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்று ஒன்பது பேருக்கு, காலையில் முக க்ஷவரம் செய்து கொள்ளும் போது, தாங்கள் அன்று பொழுது சாய்வதற்குள் கொலை செய்யப் போகிறோம் என்பது தெரியாது.

—டார்லிங் பிரபு

பெயர் விபரீதம்

ஸ்ரீ பட்டாபி சீத்தாராமையயா சமீபத்தில் எழுதிய "இறகுகளும் கற்களும்" என்ற புத்தகத்தில் இந்திய அரசியலையும் அதில் சம்பந்தப் பட்டவர்களையும் பற்றி அனேக சுவாரஸ்யமான கதைகள் உள்ளன. ஒன்று வருமாறு:

1937-ல் சட்டசபைத் தேர்தலுக்குக் காலம் சென்ற சர். சி. ஒய். சிந்தாமணி அபேக்ஷகராய் நின்றார். அவருக்கெதிராகக் காங்கிரஸ் சார்பில் ஒரு க்ஷத்திரிய ஸ்திரீ போட்டியிட்டாள். ஸ்ரீ சிந்தாமணி நோயுற்றிருந்ததால், அவருக்காக அவருடைய சகாக்கள வேலை செய்தனர். அந்தப் பிரதேசத்தில் செல்வாக்குடையவரான ஒரு க்ஷத்திரிய வாக்காளர் சிந்தாமணி விஷயத்தில் அக்கறை கொண்டிருந்தார். இது சிலருக்குப் பிடிக்கவில்லை. 'கவுரவம் வாய்ந்த ஒரு க்ஷத்திரிய ஸ்திரீக்கு எதிராக ஒரு தாசியை அந்த க்ஷத்திரியர் ஆதரிப்பது கேவலம்' என்று யாரோ கதை கிளப்பி விட்டார்கள்!

'வேறு யாரையேனும் நிறுத்தி வைக்கலாம் அல்லது காங்கிரஸ் அபேக்ஷகரையே ஆதரிக்கலாம்' என்பதுதான் அவர்களுடைய வாதம்.

ஒரு தாசியின் பெயரைப்போலச் ஸ்ரீ சிந்தாமணியின் பெயரும் தொனித்ததால், விளைந்த விபரீதம் அவர் தேர்தலில் தோற்கடிக்கப் பட்டதுதான்.

இரண்டும் ஆபத்துதான்!

அதிகாரத்தைச் சரியான வழியில் செலுத்தத் தகுதி இல்லாதபோது உன் கையில் அதிகாரம் கிடைத்துவிடுவது எவ்வளவு ஆபத்தானதோ, அதே போல நீ சரியான பக்குவம் பெறுவதற்குள் உனக்குத் 'திடீர் பிராபல்யம்' கிட்டிவிடுவதும் ஆபத்தானதே யாகும்.

கதம்பம்

அணுக்குண்டு சமாச்சாரம்

அணுக் குண்டின் எடை நாலு டன்கள், என்று 'டெய்லி எக்ஸ்பிரஸ்' தரும் ஒரு செய்தி கூறுகிறது. முட்டை அளவுக்கு இருக்கும் இக் குண்டுகளைப் 'பறக்கும் கோட்டை' விமானங்களில்தான் எடுத்துச் செல்ல முடியும். பாதுகாப்புக் காரணங்களை உத்தேசித்து அதன் அளவை இன்னும் குறைக்க முயன்று பார்த்தும் முடியவில்லை.

காங்கிரஸ் இந்தியா

காங்கிரஸ் எட்டு மாகாணங்களில் பூரண அதிகாரம் வகிக்கிறது. ஒன்பதாவது மாகாணத்தில் ஒரு யூனியனிஸ்டு மந்திரி சபை நடக்கிறது. பாக்கி இரண்டு மாகாணங்களில் பிரிட்டிஷ்காரர்கள் ஓட்டளிக்காமலிருந்திருந்தால், முடிவுகள் வேறுவிதமாக இருந்திருக்கும். காங்கிரஸ்தான் பலம் பொருந்திய ஸ்தாபனம்; மக்களின் இருதய கமலத்தில் பொதிந்து கிடக்கும் ஸ்தாபனம்; அரும் பெரும் தியாகங்களினால் நிர்மாணிக்கப்பட்ட ஸ்தாபனம். இந்துக்கள், பார்சிகள், கிருஸ்தவர்கள், முஸ்லிம்களில் ஒரு பெரும் பகுதியினர் ஆகியோர் காங்கிரசுடன் இருக்கிறார்கள்."

—சர். எஸ். ராதாகிருஷ்ணன்

தபால் வேகம்!

தெபாய் என்ற ஊரிலிருந்து ஒருவர் 1936, ஏப்ரல் 5-ம் தேதியன்று, புலந்த்ஷகர் ஜில்லா காங்கிரஸ் கமிட்டிக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அந்தக் கடிதம் 1946, ஜூன் 5-ம் தேதி கமிட்டியார் கையில் கிடைத்தது.

இதில் விசித்திரம் என்னவென்றால் தெபாய் என்ற ஊருக்கும் புலந்த்ஷகருக்கும் உள்ள தூரம் நாற்பதே மைல்கள்தான்! —அதுமான்

சத்திய வழி

சத்தியத்தைப் பரிபூரணமாகக் கடைப் பிடிக்கும் மனிதன் இவ்வுலகில் இல்லை. பரிபூரண சத்தியம் என்பது கடவுளின் தன்மை. மானிடர்களாகிய நாம் பரிபூரணமில்லாத சத்தியத்தைத்தான் அனுஷ்டிக்க முடியும். எனவே, சத்தியத்தை நாம் காணும் வழியில் பின்பற்ற வேண்டும். அம்மாதிரி சத்தியத்தை நாடினால், தவறான திசையில் செல்ல மாட்டோம்.

—காந்திஜி.

செய்திப் புகை!

'கயிறு திரிப்ப'தில் கை தேர்ந்த சில நிருபர்கள் சிம்லா மகாநாட்டின் போது ஸ்ரீமதி சரோஜனி நாயுடுவை அணுகி அவரிடமிருந்து ஏதேனும் செய்திபெற முயன்றனர்.

ஸ்ரீமதி நாயுடுவுக்கு இவர்கள் தொந்திரவு பொறுக்க முடியவில்லை. "கொஞ்சம் பொறுத்திருந்துதான் பாருங்களேன். இவ்வளவு அவசரப்படும் உங்கள்மீது கண்ணீர்ப் புகையைப் பிரயோகித்தால்கூடத் தப்பில்லை" என்றார் தமாஷாக.

"கண்ணீர்ப் புகை எதற்கு? கொஞ்சம் 'செய்திப் புகை' பிரயோகியுங்கள், போதும்!" என்று கூட்டத்திலிருந்த ஒரு நிருபர் பதிலளித்தார்.

ஏழை எழுத்தாளன்

பேனாவையும் மூளையையும் கொண்டு ஒருவன் பிழைக்க எண்ணினால், எழுத்துலகில் எல்லோரும் அவனை முதலில் சீரழிக்கிறார்கள். அவனுடைய முயற்சிகளெல்லாம் முறியடிக்கப் படுகின்றன. படித்துப் பார்க்காமலே அவன் எழுத்துக்களைத் திருப்பி அனுப்பி விடுகிறார்கள். சொல்லப் போனால் ஒரு கொலைகாரனைவிடக் கேவலமாக அவனை நடத்துகிறார்கள்.

—மேரி கரோலி

கெட்ட பழக்கங்கள்

எ. ஆர். ஸ்டாடின்

நாம் பிறந்த நிமிஷத்திலிருந்தே நமக்குப் பழக்கங்கள் உண்டாகின்றன. அவை உண்டாவது சுலபம். ஒரு காரியத்தைக் கொஞ்சத் தடவை செய்தால், அது பழக்கமாய் விடுகிறது. தவிர, கெட்ட பழக்கங்கள் உண்டாவது எவ்வளவு சுலபமோ சரியாய், கணக்காய், அதே அளவு சுலபம் தான் நல்ல பழக்கங்கள் உண்டாவதும். அப்படி இருந்தும், நமது பழக்கங்கள் பெரும்பான்மையும் கெட்டவைகளாகவே இருக்கின்றன. இதுமிகவும் வருந்தத் தக்கது. இந்தக் கட்டுரையிலே நமது தேக பலத்தையும் சுகத்தையும் கெடுத்து, ஆயுளைக் குறுக்கும் சில சாதாரணப் பழக்கங்களைப் பற்றிக் கொஞ்சம் சொல்லலாமென்று யோசித்திருக்கிறேன். முதலாவதாக, சில கெடுதலான மனோநிலைகளைப் பார்ப்போம். ஒரு வேளை எல்லாப் பழக்கங்களும் முதலிலே மனத்திலேதான் நினைவு வடிவங்களாகத் தொடங்கலாம். "நினைவைப்போலத்தான் மனிதன்" என்று பைபிளும் சொல்லுகிறது, அல்லவா? எப்பொழுதும் மனச் சோர்வுடன் இருத்தல் மிகவும் கெடுதலான ஒரு பழக்கம். அதனல் தேக அவயவங்கள் அனைத்தும் சோர்வடைகின்றன. விசேஷமாக, இரைப்பை மந்தப் படுகிறது. நமது அவயவங்களிலே உணர்ச்சிகளால் மிகவும் சுலபமாகப் பாதிக்கப் படக் கூடியவைகளிலே இரைப்பையும் ஒன்று. துயரமான எண்ணங்களும் சோர்வும் பரபரப்பும் நரம்புக் கிளர்ச்சியும் ஜீரணத்திற்கு இடையூறு பண்ணுகின்றன. நீங்கள் கவனித்திருப்பீர்கள், எப்போதாவது அதிகக் கவலையாக இருக்கும் சமயம் ஆகாரம் சாப்பிட்டால், வாயிலே எப்போதும் போல எச்சில் ஊறுது, ஆகாரத்தை விழுங்க முடியாது. இதற்கு என்ன காரணம் என்றால், எச்சில் பைகள் மனச்சோர்வினல் ஸ்தம்பித்து விடுகின்றன. அவசரப் பட்டுச் சாப்பிட்டாலும் இப்படி நடப்பதுண்டு. மனச் சோர்வினல் ஆகாரத்திற்குப் பின் வயிற்றுவலிகூட உண்டாகும். உறக்கம் கெடும், சிடுசிடுப்பும் கோபமும் உண்டாகும். இப்படிப் பட்டவர்கள் மற்றவர்களோடு சுமுகமாகப் பழகுவதும், தங்கள் வேலையிலே முன்னேறுவதும் அதிகக் கஷ்டம்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது அனுபவ வாக்கு. நோய் ஏற்படுவதற்குப் பெரும்பாலும் நம்மிடையுள்ள சில கெட்ட பழக்கங்களே காரணம். அவற்றால் உடல் நலம் எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்ற முக்கியமான விஷயத்தைப் பற்றிக் கூறுகிறது இக் கட்டுரை. இது நல்வழியிலிருந்து எடுத்ததாகும்.

சில ஜனங்கள் எப்பொழுதும் துக்கமாக இருக்கிறார்கள். சோர்வான எண்ணம் தவிர, வேறெந்தவித எண்ணங்களையும் அவர்களால் எண்ண முடிவதில்லை. சதா ஆபத்தை எதிர்பார்த்தவண்ணம் இருக்கிறார்கள். இத்தகைய மனோநிலை மிகவும் மோசமானது. இதைவிட, எவ்வளவோ நல்லது மனத்தைக்

குதூகலமான எண்ணங்களால் நிரப்பிவைப்பது. அவை ஜீரணக் குழாய் முழுவதுக்கும் இதம் செய்கின்றன

இனி, மனச்சோர்வைப்போலக் கலக்கம், பயம், கவலை, பரபரப்பு-ஆகிய உணர்ச்சிகளும் ஜீரணத்திலே பலமாகத் தாக்குகின்றன. அது போக, அட்ரெனலின் என்னும் நீரையும் நேரே இரத்தத்திற்குள்ளேயே கொட்டும்படி செய்கின்றன. இந்த நீர் இருதயத்தை அதிக வேகமாகத் துடிக்கச் செய்யும் வல்லமையுடையது. அதனால் சில சமயங்களில் இரத்த அமுக்கம்கூட மிகவும் அதிகப்படுகிறது.

டாக்டர்கள் சில மனிதர்களுடைய இரைப் பைக்குள்ளே பார்த்திருக்கிறார்கள். இரைப்பையின் உட்புறம் நெடுகிலும் ஒரு மெல்லிய ஜவ்வு இருக்கிறது. அதிலே சந்தோஷம், சோர்வு, பயம், கோபம் ஆகிய உள்ளத்துணர்ச்சிகள் என்னென்னவித மாறுதல்களை உண்டாக்குகின்றன என்று டாக்டர்கள் கவனித்திருக்கிறார்கள். அவர்கள் கவனித்த ஒரு மனிதன் எவ்வளவோ காலமாக ஒரு குறிப்பிட்ட வீட்டை வாங்கவேண்டுமென்று யோசித்திருந்தான். ஆனால் திடீரென்று அவன் அதை வாங்க முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டது. அன்று டாக்டர்கள் வெகு ஆவலாக அவன் இரைப் பைக்குள்ளே பார்த்தார்கள். அங்கே சிற்சில இடங்களிலே இரத்தம் ஒழுகிக் கொண்டிருந்தது. அவன் அடைந்த ஏமாற்றத்தின் வேகம் இரைப்பையில் போய்ப் பலமாய் மோதிய காரணத்தால் இது உண்டானது. இப்படி வேறு அநேக சந்தர்ப்பங்களிலும் அவன் இரைப் பையிலே கனத்த இரத்த ஒழுக்கு உண்டாகக் கண்டார்கள்.

இன்னொரு கெட்ட பழக்கம் சதா விறைப்பாக இருத்தல். அநேகர் பகல் முழுவதும் முறுக்கிவிட்ட வீணைத் தந்திகளைப் போல விர்ரென இருக்கிறார்கள். இரவில் படுக்கப்போகும் போது கூட அவர்கள் கை முஷ்டித்துக் கொண்டிருக்கும், பல் நறநறவெனக் கடிக்கும். இது பெரும்பாலும் உள் பயத்தினால் உண்டாவது. ஆனால் அது என்ன காரணத்தால் உண்டானாலும் சரி, அது உடம்புக்குக் கெடுதல் என்பதற்குச் சந்தேகம் இல்லை. அது தூக்கத்தை வரவொட்டாது தடுக்கும். தூக்கம் விட்டு விட்டு வரும். அல்லது சுக நித்திரையாக இருக்காது. எப்பொழுதும் விட்டாற்றியாக இருக்கப் பழகவேண்டும். உடம்பும் ஆறியிருக்க வேண்டும், மனதும் ஆறி யிருக்க வேண்டும். இது அதிகச் சிரமமல்ல விறைப்புக் கொள்ளும் தசைகளில் அநேகம் சித்தத்தின் ஆட்சிக்குட்பட்டவை. அவைகளைத் தளர்த்தி விட்டுக்கொள்ளலாம். கொஞ்சம் முயற்சி தான் தேவை.

விசேஷமாக, வேலை செய்யும் போது, மனம் ஆறியிருக்கவேண்டும். அப்போது விசுவோ, ஆத்திரமோ, படபடப்போ, உக்கிரமோ, வேகமோ, முக்கல் முனகலோ ஆகாது. பிறரை முடுக்கவும் கூடாது. அதனால் தேக சக்தியும் நரம்புச் சக்தியும் தான் வீணாகின்றன. விரைவில் களைப்புத் தட்டும். உடல் தளர்ச்சி உண்டாகும். எப்போதும் நிதானமாக வேலை செய்யவேண்டும். நிம்மதியாகச் செய்ய வேண்டும். உடம்பும் மனதும் மகிழ்ந்திருக்கும் நிலை தான் வேலைசெய்வதற்கு

ஏற்ற நிலை. ஒரு வேலையைச் செய்வதற்குத் தேவையான அளவு சக்திக்கு மேல் கொஞ்சமும் செலவழிக்கக் கூடாது. ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்தவுடனே, அன்று இன்னின்ன வேலை செய்ய வேண்டும், இன்ன வேலைக்கு இன்ன அளவு சக்தி செலவழிக்க வேண்டுமென்று திட்டம் போட்டுக்கொள்ள வேண்டும். தேக சக்தியைச் சேமித்து வைப்பதும் கடுமையான ஆயாசம் ஏற்படாமல் தடுப்பதும் அத்தியாவசியம்.

அநேகர் ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் வேலை செய்வதை ஒரு பெருமை என்று எண்ணிக்கொள்கிறார்கள். அது தப்பு. எந்த வேலையையும் "ஒரே மூச்சிலே" செய்துவிட முயலக் கூடாது. இடைக்கிடையே நின்று உடம்பையும் மனத்தையும் ஆற்றிவிட்டுக்கொள்ள வேண்டும். கருமமே கண்ணான போதிலும், மெய்வருத்தமும் பார்க்க வேண்டும். பசி நோக்க வேண்டும். கண் துஞ்ச வேண்டும். இதெல்லாம் அத்தியாவசியம். எப்பொழுதும் வேலை நினைவாகவே இருக்கக் கூடாது.

உங்கள் வேலை உங்களுக்குப் பிடிக்கவில்லையானால் கூடிய சீக்கிரம் அதை விட்டுவிட்டு வேறு வேலை பாருங்கள். பிரியமில்லாததை உடம்பையும் மனத்தையும் வருத்திச் செய்து கொண்டிருக்கக் கூடாது. வேண்டாவெறுப்பு வேலை உடம்புக்குக் கெடுதி செய்யும்.

நமது உணவு விஷயத்திலும், நாம் அநேக தீய பழக்கங்களைப் பிடித்துக்கொண்டிருக்கிறோம். அவைகளிலே ஒன்று உடம்புக்குத் தீங்கு செய்யும் உணவுகளை உண்ணுவதாகும். நல்லவைகளையும் கூடத் தீங்கான முறையில் உண்ணுகிறோம். பெருவாரியான ஜனங்களுக்கு என்ன ஆகாரம் சாப்பிட வேண்டும், எப்படிச் சாப்பிட வேண்டுமென்று தெரிவதில்லை. பாமர ஜனங்களை விடுங்கள். நன்றாகப் படித்தவர்களைப் பாருங்கள். பீ. ஏ., எம். ஏ. என்று படித்திருக்கிறார்கள். இந்தப் பாடம் படிக்கவில்லை. பாடங்களிலெல்லாம் முக்கியமானது இந்தப் பாடம். இதைப் படிக்கவில்லை. எவ்வளவு ஆச்சரியம்! ஒரு போதும் அவசரமாகச் சாப்பிடக் கூடாது. அப்படிச் சாப்பிடுகிற போது, ஜீரண ரசங்கள் சரியாக ஊறமாட்டா. இரைப்பையும் உணவை நன்றாகத் தள்ளாது. ஜீரணம் முழுவதும் அதனால் பாதகமடையும். அவசரமாகச் சாப்பிடுவதைப் போல, ருசியில்லாத உணவுகளையும், நன்றாகத் தயாரிக்கப்படாத உணவுகளையும் சாப்பிடுவது கெடுதலாகும்.

இதைவிட மோசமானது காலந் தவறாது உண்ணாமையாகும். அநேகர் ஒரு நாளைக்குப் பன்னிரண்டு மணிக்கும், மற்றொரு நாளைக்கு ஒரு மணிக்குமாகச் சாப்பிடுகிறார்கள். இடையில் நினைத்த நேரம் சிற்றுண்டி வேறு; கண்ட பட்சணங்களைச் சாப்பிடுகிறார்கள். முதலிலே சாப்பிட்ட ஆகாரம் இன்னும் இரைப்பைக்குள் இருக்கும் போதே, மேலும் ஏதாவது சாப்பிட்டால், இரண்டாவதாகச் சாப்பிட்டது ஜீரணமாகும் வரையிலும் அது இரைப் பைக்குள்ளேயே தேங்கிக் கிடப்பதைச் டாக்டர்கள் பார்த்திருக்கிறார்கள். இதனால் இரைப்பை காலியாவதில் தாமதமும், ஆகாரத்திற்குப் பின்

வயிற்று நோவும் உண்டாகின்றன.

இன்னும், மில்லில் அரைத்த தானியங்களையும், தானிய மாவுகளையும், வெள்ளைச் சர்க்கரையையும் அதிகமாகச் சாப்பிடுவதும் நல்லதல்ல. இந்தப் பதார்த்தங்கள் வயிற்றை என்னவோ நிரப்பலாம்; உடற் சூடு தரலாம். ஆனால், அவைகளிலே ஜீவாதாரச் சத்துக்களாகிய வைடமின்களும் உலோகப் பொருள்களும் இல்லை. இவைகளை மட்டும் சாப்பிட்டு ஆரோக்கியமாக இருக்க முடியாது. வைடமின்களும் உலோகப் பொருள்களும் வேண்டும். இவை பழம், கறிகாய்களில் அமோகமாக இருக்கின்றன.

இப்போது கொஞ்ச காலமாக வைடமின் மாத்திரை சாப்பிடும் பழக்கம் எங்கும் பரவிக்கொண்டு வருகிறது. இயற்கை வைடமின்களைப் போல இவை அவ்வளவாக உடம்பில் சேருமா என்பது இன்னும் திட்டமாகத் தெரியவில்லை. தவிர, அவைகளின் விலையும் அதிகம்.

மற்றுமொரு கண்டிக்கத்தக்க பழக்கம் காப்பி, தேயிலை, புகையிலை, ஊறுகாய், மதுபானம் முதலியவைகளை உபயோகித்தலாகும். இவை ஜீரணக் குழாயில் உறுத்தும் தன்மை யுடையவை. அப்படியே சர்க்கரையும், தித்திப்புப் பட்சணங்களும் அதிலே உறுத்தும். ஆகாரம் சாப்பிட்ட பிறகு பீடி, சுருட்டு, சிகரெட் பிடிப்பது மிகவும் கெடுதல். அதனால் ஜீரணம் குந்தகப்படும். எப்படித் தெரியுமா? புகையிலை, இரத்தக் குழாய்களைச் சுருங்கச் செய்யும் தன்மையுடையது. தேகத்தின் மற்றப் பாகங்களில் உள்ளவைகளைப் போல, இரைப்பை, குடல்களின் சுவர்களிலுள்ள நுண்ணிய குழாய்களையும் அது சுருங்கச் செய்கிறது. இந்தக் குழாய்களிலேதான் ஆகார சோஷணம் நடைபெறுகிறது. இரைப்பைக்கும் குடல்களுக்கும் தேவையான ஜீரண ரசங்களை உற்பத்தி செய்ய ஏராளமாக இரத்தம் தேவையாகும்.

அனேகர் நாள்தோறும் பேதி மருந்து சாப்பிடுகிறார்கள். அது என்ன வகையான மருந்தானாலும் சரி, அதனால் அதிகமாகவோ கொஞ்சமாகவோ, தீங்கு உண்டாகிறதென்பதில் ஐயமில்லை.

டானிக் விஷயமும் இப்படித்தான். அநேக டானிக்குகளில் 10 முதல் 30 சத விகிதம்வரை சாராயம் சேர்ந்திருக்கும். இந்த சாராயம் தான் மதுபானங்களிலுள்ள முக்கிய பாஷாணம். வெறி தருவது அதுதான். சாதாரணமாக டானிக் சாப்பிட்டவுடனே அதிகப் பலம் வந்தது போலத் தோன்றுகிறதே, பலமா அது? வெறி. சாராயம் அப்படி ஏமாற்றுகிறது. ஜனங்களுக்கு இது தெரிவதில்லை. தூக்க மருந்து முதலியவைகளும் பொதுவாகக் கெடுதி செய்பவைதான். வைத்தியர் சொன்னாலொழிய, அவைகளை உபயோகிக்கக் கூடாது.

*

நூலின் நுனியில் சிறிதளவு பிளவு இருந்தாலும் ஊசியின் காது வழியே அது செல்லாது. அதைப்போல, ஆசைகள் அற்பமிருந்தாலும் ஒருவன் ஈசுவர சந்நிதானத்தை அடையமாட்டான். —ராமகிருஷ்ணர்.

மாலை வேளையின் மங்கலான வெளிச்சத்தில் காற்றிலசையுகின்ற அழகான இந்திய ரோஜா மலர்களைப்பார்த்ததும், உங்கள் இஷ்டத்திற்குரிய சோப்பான வினோலியா ஒயிட்ரோஸின் ஞாபகமேற்படும். உங்கள் எழிலை அதிகப்படுத்த இந்த சுகந்த சோப்பைவிட உத்தமமானதோ, தகுதியானதோ வேறு கிடையாது. மிருதுவான நுரையைத்தரும் வினோலியா மிக நேர்த்தியான சருமத்தையும் சுகமாக சுத்தம் செய்கிறது . . . மேலும், உங்களை சுற்றிலும் மனோஹர பரிமளத்தைப் பரவச்செய்கிறது.

வினோலியா ஒயிட் ரோஸ் சோப்

VWR. 20-111 TM

VINOLIA COMPANY LIMITED, LONDON, ENGLAND

use

KESHA-MITRA

HAIR-OIL

(VEGETABLE)

A LITTLE'S ORIENTAL BALM PRODUCT

அடர்த்தியான, கருகருத்த
நீண்ட கேசத்திற்கு

கேசமித்திரா

ஹேர் ஆயில்

வழுக்கை, பொடுகு, முதலியவற்றை
அறவே போக்குகிறது

எல்லா மருந்து வியாபாரிகளிடமும்
ஷாப்புகளிலும் கிடைக்கும்

லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்
அண்ட் பார்மசூடிகல்ஸ் லிமிடெட்
11-12, முதல் லேன் பீச் : : சென்னை

இருமல்,
ஜலதோஷங்களுக்கு
நம்பிக்கைவாய்ந்த ஓர்
சிறந்த நிவாரணி!

ஸிரோலின்

'ரோச்'

சூரப்புலி!

வல்லிக்கண்ணன்

உயர்திரு செல்லம் பண்டிதர்—அந்த வட்டாரத்திலேயே கொஞ்சம் பிரபலமடைந்த புள்ளி—தமது 'ஸ்டாலின் மீசை' யைத் தடவிக் கொடுத்தபடியே கனைத்தார்: 'ஹே, நம்ம சாவல் என்ன லேசுப்பட்டதா பாருங்க இன்று!'

அங்கு கூடியிருந்த கும்பல் கொக்கரித்தது. நடுவிலே சிறு வட்ட வெளி விட்டு விட்டு மனிதச் சுவர் நெருக்கி நின்றது! அவ்வளவு கூட்டம். அன்றுதான் செல்லம் பண்டிதரின் மகிமை எடை போடப்படும் தினம்.

செல்லம் பண்டிதர் அஞ்சவே இல்லை. அச்சம் என்பதுதான் அவரது அகராதியிலேயே கிடையாதே! ஊரில் தலைகாட்டும் பேய், பிசாசுகளையெல்லாம் 'சூ!' என்று விபூதி தெளித்தே ஓட்டுவிக்கும் அவரிடம் பயம் எப்படி வரும்?

செல்லம் பண்டிதர் அந்தப் பிராந்தியத்திலேயே 'முடிசூடா மன்னன்' ஆக விளங்கி வந்தவர். ஏதோ அரைகுறை வைத்தியம் தெரியும். வைத்தியம் என்ற குலத் தொழிலுடன், மாந்திரீகம் என்ற கௌரவப் பிழைப்பையும் கையாண்ட காரணத்தால், வாழ்க்கை வெற்றிகரமாக ஓடியது. அது மட்டுமல்ல, அவருக்குத் தனி அந்தஸ்தும் பெற்றுக் கொடுத்தது. பெயர் வந்தால் ஆடம்பரம் வாராதா! அதன் தாயாதிகளான கர்வம், தற்புகழ்ச்சி முதலியவை புடை சூழ அவரை அணுகின. பழங்கால நாடக மேடை ராஜாபார்ட் மாதிரி, ஜரிகைக் கட்டம் போட்ட லேஞ்சியைத் தலையில் ஒரு தினுசான தலைப்பாகை கட்டி, வேறொரு ஸில்க் கைக் கழுத்திலே 'வல்லாட்டு' போட்டு, மீசையையும் முறுக்கிக் கொண்டு கிளம்பினால், அதன் ஜோரே தனிதான். வெற்றிலைக் கறை படியும் உதடுகளைப் புன்னகை அழகு செய்ததுபோலவே, குங்குமப் பொட்டு அவர் நெற்றியை அலங்கரிக்கும். கையில் ஒரு வெற்றிலைப் பெட்டி. அதுதான் பண்டிதரின் ஆஸ்பத்திரி.

பண்டிதர் மருந்துக் குணமோ; அல்லது மற்றவர்கள் சொல்லுவது போல, அவரது கைராசிதானோ, அவர் நல்லபெயர் பெற்று வந்தார். எப்படியோ மந்திரத் தொழிலும் கைவந்த கலையாகி விடவே, ஊராரால் அவரைக் கை கொண்டு பிடிக்க முடியவில்லை.

'நம்ம சாவல் ஜெயிக்காமலா போகும்!' என்று மீண்டும் கெக்கலித்தார் செல்லம் பண்டிதர்.

அவர் குறிப்பிட்ட 'சாவல்' மனித வட்டத்தின் நடுவிலமர்ந்து உயிரைக் கொடுப்பது போல முரண்டிக் கொண்டிருந்த பேர் வழிதான்.

அன்று, 'கொடிகட்டிப் பறக்கும்' செல்லம் பண்டிதரின் புகழ் மேலும் பிரகாசிக்குமா, மண்ணைக் கவ்வுமா என்பதுதான் ஒவ்வொருவரது கவலையும். 'தலைக்கனம் பிடித் தலையும் அவனுக்குச் சரியான பாடம் கற்பிக்கணும்' என்பது ஒரு கட்சி, 'நம்ம

வீராப்புப் பேசிவிட்டு, வீட்டுக்குள்ளே போய்ப் பதுங்கிக் கொண்ட செல்லம் பண்டிதரின் 'கர்வ பங்கத்'தை உள்ளத்தை ஈர்க்கும் வகையில் சித்தரிக்கும் சூரப்புலி ஒரு உயர்ந்த ஹாஸ்யச் சித்திரமாகும்.

செல்லமாவது தோற்கிறதாவது!' என்பது எதிர்க்கட்சி. தகரக் கொட்டகை மீது மழை பெய்வது போலத் திடீர்திடீரென்று ஆரவாரம் எழும். பிறகு மௌனம் நிலவும். 'ஐயோ, பாருடா, பாரு,திணறுகிறான்!' என்ற அனுதாபக் குரல் எழுந்தது. எதிர்க்கட்சியின் கூச்சல் பலத்தது.

உள்ளே, நடந்து கொண்டிருந்தது இது தான். தரையில் எலுமிச்சம் பழம் ஒன்றும், பண முடிப்பும் பூக்களும் வைக்கப்பட்டிருந்தன. அந்த ஆசாமி குனிந்து எலுமிச்சம் பழத்தை வாயால் பற்றி எடுத்துவிட வேண்டும். அவன் அப்படி எடுத்துவிடாதபடி எதிர்க்கட்சிக்காரன் மந்திரம்போட்டுக் கொண்டே இருப்பான். எவன் ஜெயிக்கிறானோ,அவனுக்குப் பண முடிப்பு இந்த 'மோடி வித்தை'தான் அங்கு நடந்து கொண்டிருந்தது.

சரியான போட்டி!

செல்லம் பண்டிதருக்கு எதிராக வந்து சேர்ந்தவன் ஒரு மலையாளி. மலையாள மாந்திரீகர்கள் பலே கைகாரர்கள் என்று பெயர் வாங்கியவர்கள்.

'என்ன கைகாரன்! நான் அவர்களைவிடப் பெரியவனாக்கும். எனது சக்தி உங்களுக்குத் தெரியாது' என்று செல்லம் பண்டிதர் வீராப்பு பேசப் போய் வந்த வினைதான் இது. விளையாட்டாக ஆரம்பித்து, போட்டி போட்டே தீருவது என்றாகிவிட்டது... மலையாள மந்திரவாதி 'ஜெய் பகவதி!' என்று குங்குமத்தைச் சுழற்றி காற்றிலே வீசினான்.

எலுமிச்சம் பழத்தை அணுகியவனின் வாய் ரத்தம் கக்க ஆரம்பித்தது. செம் பருத்திப் பூ இதழ்களைக் கிழித்துக் கிழித்துச் சிதறுவது போல, துண்டு துண்டாக ரத்தம் சிதறியது. கற்றாழம் பழத்தை அறுத்துச் சாறு பிழிவது போல, தொண்டையைப் பிய்த்துக் கொண்டு பீறிட்டது. மோடி எடுப்பவனின் கண்கள் கண்ணாடிக் குண்டுகள் போல் தெறித்து, வெளியே விழுந்து விடுமோ என்ற தன்மையில் பிதுங்கின. 'செத்தான்!' என்று முனங்கினர் சிலர். செல்லம் பண்டிதரோ கண்கள் ஆகாய வெளியிலே குத்திட்டு நிற்க 'ஓம் காளியாயி! ஓம் காளியாயி!' எனக் கூவிக்கொண் டிருந்தார். அவரது உச்சாடனம் எவ்வ எவ்வ அவர் 'சாவ'வின் ஆபத்து கரைந்து வந்தது. அவன் சுயபலத்துடன் நிமிர்ந்து நின்றான். மலையாளத்தான் 'என்ன!' என்று ஏகத்தாளமாகக் கேட்பது போல் நோக்கினான். வெற்றிமிடுக்கும் கேலியும் கலந்த நகை ஒன்று அவன் இதழ்க் கடையில் நெளிந்தது. 'ஓம் காளியாயி! இன்னும் முடியவில்லையே. அதற்குள்...... 'ஓம் காளியாயி! ஓம்...' என்று உருவேற்றினர் செல்லம் பண்டிதர். 'என்ன சுப்பையா, சோர்ந்து விடாதே' என்று தனது ஆளைத் தட்டிக் கொடுத்தார்.

'நல்லாச் சொன்னீங்கபோங்க! நானாவது சோர்வடைவதாவது!' என்று சிரித்தான்.

'நீதான் சூரப்புலியாச்சே,எனக்குத்தெரியாதா!...ஓம்காளியாயி!'

அவன் சூரப்புலிதான்! பண்டிதரின் கையாள். பூனைக் கண்களை ஒத்த அவனது விழிகளில் ஏதேனும் அற்புத சக்தி இருந்ததோ; அல்லது பண்டிதரின் மந்திர மாயம்தானோ தெரியாது. அவன் அபார வர்ணனைகள் செய்து துப்புத் துலக்குவது வழக்கம்.

ஊதுவத்திப் புகையும் மல்லிகைப் பூ மணமும் கமகமக்கும் சூழ லிலே செல்லம் பண்டிதர் தமது கடைபரப்பிக் காளியை வர வழைத்துக் கொடியேற்று செய் வார். வெற்றிலேயில் கரும் மை தடவி, அவனிடம் கொடுப்பார். அவனே மயக்கம் போன்ற ஓர் நிலே கவியும். அவன் கனவுக் குர லில் பேசுவான்: 'அனுமார் வருது, என்னைக் கூப்பிடுகிறது, அம்மா பயமாக இருக்கிறதே... பயப்படாதே என்று வாலே ஆட்டுகிறது. முன் செல்கிறது ......' இப்படியாகப் 'படம் காட்டி' 'இதோ புதையல். அம்மா, எவ்வளவு பெரிசு!' என்று பெருமூச் செறிவான். தனது பேராசையைத் தணிக்க விரும்பும்—அதன் மூலம் ஆசை யை, எரியும் கங்கிலே சாம்பி ராணியைத் தூவியது போல், ஏக்கம் தூண்டத் துடிக்கும்— வீட்டுக்காரர், மகிழ்ச்சியாகப் பணம் அள்ளிக்கொடுப்பார். பண் டிதர் அதில் ஏதோ சில அணுக் களைத் தனது ஆளுக்குக் கொடுப் பார். அவன் அவரது கையாள். அவனுல்தான் அவர் 'வியாபாரம்' வெற்றிகரமாக ஓடுகிறது என் பது பலரது வாதம். அதில் உண்மை இருக்கலாம். செல் லம் பண்டிதர் இதுபோல் 'துப் புத் துலக்கும்' போதெல்லாம் அவனைத்தான் மை பார்க்கச் சொல்லுவது வழக்கம். ஏன் வேறு பேர்வழி பார்க்கக் கூடாது? மந்திரம் பலிக்காதாம்! சிலபேர் ராசிக்குத்தான் எடுப டும்' எனப் பண்டிதர் விளக்கு வார்.

'இவன் நான் வளர்த்த சேவல். மந்திரத்தின் நெளிவு சுளிவுக ளெல்லாம் இவனுக்குத் தெரி யும்' என்று அடிக்கடி பாராட்டு வார். அப்படி அவர் பாராட்டு தலேப் பெற்ற சுப்பையாவின் அந்தராத்மா அவ் வேளேயிலே ஏனடா இந்தச் சனியன் பிடித்த விவகாரத்தில் தலேயிட்டோம்!' என்று அலறிக்கொண் டிருந்தது!

பொதுவாக, மலேயாள வாசிகள் மந்திரத்தில் சூரர்கள் என்ற நம்பிக்கை அந்தப் பக்கத்தில் வேரோடியிருந்தது. ரௌடி மாதிரி மலேயாளத்தான் தலேயைச் சிலிர்க்க விட்டு, கழுத்திலே துளபமணி மாலேயும், நெற்றியில் நீண்ட குங்குமப் பொட்டும் இட்டிருந்தான். கஞ்சா அடித்த வன் கண்ணெளிபோல அவன் கண்களில் ஒரு கனல். அவன் சிரிப்பது அருகில் நிற்பவர் மனதை அறுக்கும். அவன் அமானுஷியனுகத் தோன்ற வேண்டுமென அப்படி யெல்லாம் செய்து வந்தான். அவன் உருவமும், வெறிக்க நோக்கி 'ஜெய் பகவதி' கூறுவ தும் சுப்பையாவைக் கதி கலங் கச் செய்தன. அத்துடன் அவன் விபூதியை வீச வீசச் சுப்பையா வின் உடல் முழுவதும் தீ பட் டது போல் சுட்டது. 'சுப் பையா! ஓம் காளியாயி' காளி துணைசெய்வாள்...ஓம்! என்று கூவினுன் செல்லம். அவன் தூண்டுதல் சுப்பையாவை உந்தி யது. முடுக்கி விடப்பட்ட யந் திரம் போல அவன் குனிந்தான். 'ஓம் காளி' குரலே 'ஜெய் பகவதி' வெட்டியது! சுற்றி நின்றவர் கள் கண்களில் அடைக்கலம் புகு வதற்காக விபூதி பறந்தது.

சுப்பையா தரையிலிருந்து பெரும் பாறுங்கல்லேத் தூக்கத் திணறுகிறவன் மாதிரி முக்கி முனகிக் குனிந்தான். அவன் நெற்றி நரம்பு புடைத்தது. கழுத் தின் ரத்த நாளங்கள் வெடித்து

விடுமோ என எண்ணும்படி கழுத்தே விம்மியது. தேகம் சதை சதையாக ஆடியது. மலையாளத்தான் 'ஜேய் பகவதி' மந்திரம் கூவிக் கொண்டேயிருந்தான். செல்லம் பண்டிதரின் எதிர் மந்திரம் வேறு வேலை செய்தது. பாவம்! இதன் பயனாக இவர்கள் கருவியான ஒரு மனிதன் சித்திரவதை அனுபவித்துக் கொண்டிருந்தான். பலப் பரிசோதனை செய்யும் இரு கட்சிகளின் இடையிலும் கிடந்து அல்லாடுகிற 'டக் ஆப் வார்' கயிறு போல, அவனும் அல்லாடினான்.

சுப்பையாவின் தொடைகள் நடுங்கின. 'ஜேய் பகவதி!' எவ்வியது. அவன் தொடையில் கத்தியால் கீறியதுபோல வெடிப்பு ஏற்பட்டது. 'ஜேய் பகவதி'... அதிலிருந்து கூரிய ஆணிகள் வெளிவந்து சிதறின. அது கண்கட்டி வித்தையா? குறளிக் கூத்தா? வேடிக்கை பார்ப்போர் தேகம் புல்லரித்தது. 'மலையாளத்தான் பெரிய மந்திரவாதிதான்' என்ற எண்ணம் வலுத்தது.

'இவன் அகஸ்தியரிடமே மந்திரம் கற்றவனும், இவனுக்கு எவ்வளவு வயது என்றே சொல்ல முடியாதாம். ரொம்பப் பெரிய ஆசாமிடா!' என்ற அளப்புகள் வேறு மிதக்க ஆரம்பித்தன.

செல்லம் பண்டிதர் அசந்து போனார். அவர் கண்களில் மிடுக்கின் பொலிவு இல்லை, சோர்வு படிந்தது. 'சுப்பையா!' என்றார்.

'ஏய் பிடி! விடாதே!' என்ற கூச்சல் கிளம்பியது. மலையாளத்தானின் ஆட்கள் வேட்டை நாய் போல் பாய்ந்தனர். மந்திரித்த எலுமிச்சம் பழத்தை எடுக்க முடியாது என்பதை உணர்ந்ததும், சும்மா கிடந்த பண மூட்டையை அபேஸ் செய்துகொண்டு சுப்பையா கூட்டத்தை விலக்கி வீட்டை நோக்கி ஓட ஆரம்பித்ததுதான், காரணம்!

'ஓட்டத்தில் அவன் சூரப்புலிதான்' என்றான், செல்லம் பண்டிதரை அறிந்த ஒருவன்.

மலையாள மந்திரவாதி 'ஏய்! காலைக் கையை முடக்கிப் போடுவேன். மரியாதையாகப் பணத்தைக் கொடுத்துவிடு' என்று கூவியபடி தொடர்ந்தான். சுப்பையாவோ கழுகுப் பாய்ச்சலில் மறைந்து, எங்கோ ஒரு வீட்டுக்குள் பம்மி விட்டான்.

'அவனை எங்கே, அந்த மந்திரக்காரனை?' என்று மலையாளத்தான் உறுமினான். பலரது கண்கள் மனிதக்காட்டிலே வேட்டையாடின. அங்கு நிற்க, செல்லம் பண்டிதருக்குப் பைத்தியமா! சாதுர்யமாக அவர் எப்பொழுதோ நழுவி விட்டாரே!

மலையாள மந்திரவாதி 'ஜேய் பகவதி!' இவ்வளவு நேரம் பட்ட பாடெல்லாம் வீணுக்குத் தானா!' என்று தலையிலே கைவைத்து அமர்ந்து விட்டான்.

'என்ன இருந்தாலும் நம்ம செல்லம் பண்டிதன் கைகாரன் தான். மணியான ஆளைப் பிடித்தான் பாரும். மந்திரம் எப்படிப் போனால் என்ன! அவனுக்கு வேண்டியது பணம் தானே. பாவிப்பயல் முடிச்சுடன் சிட்டாய்ப் பறந்து விட்டானே' எனச் சிலர் வியந்தார்கள்.

'செல்லமும் சூரப் புலிதான்! சமயம் அறிந்து கம்பி நீட்டி விட்டானே, அதைச் சொல்லும்!' என்று முத்தாய்ப்பு வைத்தார் ஒருவர்.

✻

மனிதர்களே!..

சரும ஆரோக்கியத்திற்கு

ரெக்ஸோனாவை

உபயோகியுங்கள்

ஸ்திரீகளுக்குத்தான் முக வசீகரத்திற்கேற்றது ரெக்ஸோனா சோப்பென்று அவசரப்பட்டு எண்ணிவிடாதீர்கள். சரும-ஆரோக்கியத்தை உயர்வாகக் கருதும் ஒவ்வொருவருக்கும் அது ஒரு முக்கிய டாய்லட் சோப்பாகும். மனிதர்கள் சிறப்பாய் அனுபவிக்கிற நேர்த்தியான, மனதிற்குகந்த, உற்சாகத்தை அளிக்கும் சோப் அதுதான். இந்த நேர்த்தியான, பசுமை வாய்ந்த, விரைவில் நுரையை உண்டாக்கும் சோப்பின் ஒரு சிறந்த நன்மை என்னவென்றால், சுகத்தையளித்து, சரும வியாதிகளைப் போக்கும் கிருமி நாசினியாகிய *கேடில் என்னும் மருந்து அதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. ரெக்ஸோனாவின் ஏராளமாய் விரைவிலேற்படும் நுரை வெகு சீக்கிரத்தில் ஆரோக்கியத்தை அளிக்கும் கேடில் என்னும் மருந்தை உங்கள் சருமத்தின் ஒவ்வொரு அடிப்பாகத்திலும் கொண்டு போய்ச் சேர்க்கிறது. அங்கேதான் சரும உபத்திரவங்களும், சரும மாசு மறுக்களும் அதிகமாய் அடிக்கடி உண்டாகின்றன. இவ்விதமாக உங்கள் சருமம் முழுவதும் சுகமடைந்து, சுத்திசெய்யப்பட்டுத் தூய்மையையும் அடைகிறது. ஆகையினால் ரெக்ஸோனா சோப்பை உபயோகிக்க இன்றே ஆரம்பியுங்கள்—நெடுகிலும் உபயோகியுங்கள்.

★ரெக்ஸோனாவிலுள்ள கேடில் ஒப்பற்ற கிருமி நாசினியாகிய ஒரு கலப்பு மருந்து.

சரும சுகத்திற்கு அதிக சக்திவாய்ந்து, குணமளித்துப் போஷிக்கும் தைலம் சேர்ந்தது. சுகத்தைத் தந்து காப்பாற்றும் தன்மையுள்ள கேடில் யாவராலும் மதிக்கப்பட்டு விஞ்ஞானிகளால் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

ரெக்ஸோனா ஆயின்ட்மென்டை உபயோகியுங்கள். வெட்டுக் காயங்கள், புண்கள், கட்டிகள், கரப்பான், ரணங்கள், முகப் பருக்கள், அரிப்புகள், சனைப்புகள், கடிகள், மச்ச மறுக்கள் முதலிய எல்லா சரும வியாதிகளுக்கும் ரெக்ஸோனா ஆயின்ட்மென்டை உபயோகியுங்கள்.

R.P. 28-50-40 TM

REXONA PROPRIETARY LIMITED

மாதவிடாய்

நின்று விட்டதா ?
கவலை வேண்டாம்

எச்சரிக்கை : ரசாயனத்துக்கு ஒவ்வாத மருந்துகளை உபயோகப் படுத்தாதீர்கள் ; அந்த வழக்கம் மிகவும் ஆபத்தானது. அரசாங்கத்தாரின் அங்கீகாரம் பெற்ற மருத்துவரின் 'ராஜோ-நியமோனி'யை உபயோகியுங்கள் ; அது ஆபத்து இல்லாதது. மிகவும் மோசமான நிலைமையாக இருந்தாலும் 24 மணி நேரத்தில் விடாயாவது நிச்சயம். என்ன காரணத்தால் விடாய் நின்றிருந்தாலும்—4 அல்லது 5 மாதமாயிருந்தாலும் கூட — கவலையில்லை ; விடாயாவது நிச்சயம். உத்திரவாதமுள்ளது.

விலை ரூ. 3/8 தபால் சிலவு 12 அணு

தீராத நெடுநாள் பட்டதற்கு ஸ்பெஷல் ராஜோ நியமோனி விலை ரூ. 10/- தபால் சிலவு தனி.

'ரோதனி' : கர்ப்பத்தடைக்கு அபாயமில்லாத சிறந்த மருந்து. ஒரே முறைதான் உபயோகப்படுத்தவேண்டியது. தேகநலனோ, மாத விடாயோ இதனால் பாதிக்கப்படுவதில்லை. மருத்துவர்களும், உபயோகப் படுத்துகிறவர்களும் இதை மிகவும் பாராட்டுகிறார்கள். உத்திரவாதமுள்ள மருந்து.

நிலையான கர்ப்பத்தடைக்கு
விலை ரூ. 5

தற்காலிகத் தடைக்கு ரூ. 2/8
தபால் சிலவு 12 அணு

தயவுசெய்து ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும் :

KAVIRAJ
M. BHATTACHARYA (S. M.)
Karya—Vyakarantirtha Vishagacharya.
120/1/1, Upper Circular Road, CALCUTTA

கதா ரசிகர்களுக்கு ஓர் அரிய விருந்து

★

உயர்ந்த ரகச் சிறுகதைகள், ஓரங்க நாடகங்கள், அயல் நாட்டுக் கதைகளின் மொழி பெயர்ப்பு இவைகளை ஒன்று சேர்த்து வருடத்தில் பன்னிரண்டு புத்தகங்கள்

கதைக் கடல்

என்ற வரிசையில் வெளியிடுகிறோம். இதுவரை கதைக் கடல் முதல் வரிசையில் நான்கு புத்தகங்கள் வெளி வந்திருக்கின்றன. வருடத்தில் வெளிவரும் 12 புத்தகங்களில் சுமார் 120 கதைகள் அடங்கியிருக்கும். சுமார் 1300 பக்கங்களுக்கு மேலுள்ள 'கதைக் கடல்' முதல் வரிசைக்கு நீங்கள் கட்டவேண்டிய சந்தாத் தொகை

ரூபாய் பன்னிரண்டு தான்

★

சக்தி காரியாலயம்
ராயப்பேட்டை : : சென்னை

நல்ல சாகுபடி

ஜே. சி. குமரப்பா

உணவுப் பஞ்சம் ஏற்பட்டதற்கு, சுயதேவைப் பூர்த்தியைப் பிரதானமாகக் கொண்ட கிராமியப் பொருளாதாரத்தை நாம் கைவிட்டதுதான் அடிப்படைக் காரணமாகும். ஒவ்வொரு கிராமமும், தன்னுடைய எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்யும் அளவுக்கு உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வது வழக்கம். அதிலிருந்து ஓரிரண்டு வருஷங்களுக்குத் தாங்குமாறு ஒரு பகுதித் தான்யத்தை மிச்சப் படுத்தி வைப்பதுண்டு.

நாணயம் செலாவணியாக ஏற்பட்டதும், இந்தப் பழக்கம் கைவிடப்பட்டது. உணவு தான்ய விளைச்சல்கூட இப்போது விற்பனைப் பயிராக ஆகிவிட்டது. குடியானவர்கள் தங்களுடைய உணவுப் பொருள்களை விற்று, நோட்டுகளைச் சேர்க்கத் தொடங்கினர்கள். வெளிநாட்டுத் தானிய மார்க்கெட்டுகளில் இந்த நோட்டுகள் செல்வாக்கடைய முடியவில்லை. அதன் விளைவாக ஆண்டு தோறும் நம்மிடைப் பஞ்சம் ஏற்படுகிறது. நிலத்தில் சமனமாகப் பயிரிடும் முறையை மேற்கொள்ளுவதுதான் இதற்கு ஏற்ற ஒரே பரிகாரமாகும்.

"சுய தேவைப் பூர்த்தி என்ற நோக்கத்தோடு, சமனமுறைச் சாகுபடிப் பிரச்சினையில் மனப் பூர்வமாக ஈடுபட்டாலொழிய, உணவு, துணிப் பஞ்சத்தைத் தீர்ப்பதென்பது சாத்தியமேயல்ல" என்று கிராம உத்தியோக பத்திரிகையில் வெளிவந்த இக் கட்டுரை சமனமுறைச் சாகுபடியைப் பற்றித் தெளிவாகக் கூறுகிறது.

ஒவ்வொரு கிராமமும் தனக்கு உணவுப் பொருள்கள், கால்நடைத் தீவனம், இன்னும் பருத்தி, எண்ணெய் விதைகள் போன்ற தேவைப் பொருள்கள்—இவற்றில் எவையெவை அவசியமானவை என்பதை முதலில் நிர்ணயித்துக் கொண்டு, அவற்றைப் பயிர் செய்வதில் ஈடுபட வேண்டும். மாற்று விற்பனைக்காக அன்றித் தன் சொந்த உபயோகத்திற்காகவே இவற்றை ஒவ்வொரு கிராமமும் உற்பத்தி செய்ய வேண்டும்.

ஒவ்வொரு நிலத்திலும் குறிப்பிட்ட ஒரு பயிர்தான் சாகுபடி செய்வது என்று இருக்க வேண்டும். இந்த விஷயத்தில் குடியானவன் தன் இஷ்டம்போல் நடந்து கொள்வது கூடாது. சம்பந்தப்பட்ட கிராமத்தின் தேவைகளை அனுசரித்து, அதன் சபையோ அல்லது ஆட்சிக் கழகமோ ஒழுங்கான லைசென்ஸ் முறை மூலம் ஒவ்வொரு நிலப் பரப்பும் இன்னின்ன சாகுபடிக்குத்தான் ஏற்றது என்ற விஷயத்தை நிர்ணயிக்க வேண்டும்.

உணவுப் பிரச்சினை பெரிதாக வளர்ந்து போயிருக்கிறது. இந்த நிலைமையைச் சரிப்படுத்த உடனடியான வழி எதும் புலப்படவில்லை. நம்முன் இருக்கும் பிரச்சினை இரு திறத்ததாகும். முதலாவதாகக் கனலிக் குறைபாடு ஏற்பட்டிருக்கிறது. இதைத் தவிர, நோய் அணுகாமல் காக்கும் உணவுகளுக்கும் நீண்ட பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. முதல் பிரச்சினைக்கு ஒரு வழி கண்டு விடலாம். ஆனல் இரண்

டாவது பிரச்சினையை எளிதில் தீர்த்துவிட முடியுமென்று தோன்றவில்லை.

ஒரு ஏக்கரா நிலத்தில் வேறு விதமான உணவுப் பொருள்களைவிடத் தான்யங்களின் மூலம் கிடைக்கும் கனலிகள் அளவு அதிகம் என்றுதான் எண்ணுகிறோம். ஆனால், கனலிகள் விஷயத்தை விட்டு விட்டுப் பார்த்தாலும், நோயணுகாது உடலைப் பாதுகாக்கும் சத்துப் பொருள்கள் அந்தத் தான்யங்களில் மிகவும் குறைவுதான். தான்யப் பயிர்களி லிருந்தே இந்தப் பொருள்களைப் பெறவேண்டுமானால், அதற்கு ஏராள அளவில் தான்யம் தேவையா யிருக்கும். பழங்கள், காய்கறிகள், பால் சம்பந்தமான பொருள்கள், பனை வெல்லம், கடலைகள், எண்ணெய் விதைகள்- இவற்றைத் தான்யங்களுக்கு மாற்றாகவோ அல்லது கூடச் சேர்த்தோ உபயோகிக்கலாம். அப்போது சத்துணவுகள் சம அளவில் கலந்துள்ள ஆகாரத்தில் உள்ள பாதுகாப்புச் சத்துப் பொருள்களை, சாதாரணமாகத் தேவையாயிருக்கும் தான்யங்களிலிருந்து மட்டும் பெறுவதை விடக் குறைந்த அளவுள்ள இதர வகை உணவுப் பொருள்களிலிருந்து பெறமுடியும்.

ஒரு ஏக்கரா நிலத்திலிருந்து உணவுத் தான்யங்கள் மூலம் கிடைக்கும் கனலிகளைவிடப் பனை வெல்லம், உருளைக் கிழங்கு போன்ற வேர்க் கிழங்கு வகைகள்—இவைகளிலிருந்து கிடைக்கும் கனலிகள் அதிகமாகும். சம அளவுச் சத்துள்ள ஆகாரம் இரண்டுவித நன்மை பயப்பதாகும். அதன் மூலம் நம் பிரச்சினைக்கும் ஒரு வழி ஏற்படலாம். முதலாவது சராசரி ஒருவனுக்குத் தேவையான நிலத்தின் அளவு குறைகிறது. அதோடு உடலை நல் நிலையில் ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கு அவசியமான சத்துப் பொருள்களையும் அதனதன் உரிய அளவில் அளிக்கிறது. இந்தியாவில் தற்போது சாகுபடிக்கென்று சராசரி ஒரு மனிதனுக்குக் கிடைக்கக் கூடிய நிலத்தின் விஸ்தீரணம் சுமார் 0·7 ஏக்கராதான். இப்போது நாம் பின்பற்றிவரும் சாகுபடி முறைப்படி, நம்முடைய உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள இந்த நிலம் போதியதாயில்லை. ஆனால், சாகுபடி முறையே மாற்றி யமைக்கப் படும்போது, இந்த நிலமே போதுமானதாய் இருக்கும்.

பலவேறு புஷ்டி உணவுப் பொருள்களும் சரியான அளவில் சேர்ந்துள்ள ஆகாரம், உடைத் தேவைகள், வாழ்க்கையின் பிரதமத் தேவைகள்—இவையெல்லாம் எந்தவொரு பிரதேசத்தின் மக்களுக்கும் கிடைக்கும்படி செய்ய வேண்டும். இதற்கு ஏற்ற வழியில் நிலங்களைப் பிரித்துக்கொடுத்தல் வேண்டும். சாகுபடிப் பிரச்சினையின் இந்தப் பகுதியைத் தீர்க்கமாக ஆராய்ந்து, முடிவான ஒரு திட்டத்தை வரையறுக்க வேண்டும். குடியானவர்களைத் தங்கள் நிலங்களில் ஒரு சில பயிர்களையே சாகுபடி செய்யலாம் என்று லைசென்ஸ் மூலம் கட்டுப்படுத்தி இந்தத் திட்டத்தை அமுல் நடத்தலாம்.

ஒரு லக்ஷம் ஜனத்தொகை உள்ள விடத்தில் சமன முறைச் சாகுபடிக்குத் தக்கபடி நிலப் பிரிவினை செய்வது எப்படி என்பதைப் பற்றி பின்வரும் அட்டவணை கூறுகிறது.

ஆகாரம்	அவுன்சுகள் (தினப்படி)	கனலிகள்	பவுண்டுகள் (வருஷத்துக்கு)	லக்ஷம் ஜனங்களுக்கு தேவையான நிலம் (ஏக்கர்கள்)	விளைக்காதது (தனி 15% யாக)	மொத்தம்	நிலப் பிரிவினை சதவிகிதம்
தான்யங்கள்	16	1600	365·00	43,400	6,510	49,910	65·2
பருப்பு வகை	2	200	45·60	5,400	810	6,210	8·0
பனைவெல்லம்	2	200	45·60	1,200	180	1,380	1·8
கடலை வகை	1	145	22·80	2,600	290	2,990	8·4
எண்ணெய்	½	255	11·40	3,000	450	3,450	
நெய்	½	—	11·40	—	—	—	—
பால்	12	240	273·75	—	—	—	—
காய்கறிகள்	8	48	182·50	1,600	240	1,840	2·4
உருளைக்கிழங்கு	4	100	91·25	1,000	150	1,150	1·5
பழங்கள்	4	52	91·25	900	135	1,035	1·4
பருத்தி	—	—	12·50	7,500	1,125	8,625	11·3
	மொத்தம்	2860		66,600	9,990	76,590	100·0

இந்த அட்டவணையில், சராசரி ஒருவனுக்குத் தினமொன்றுக்கு 2,860 கனலிகள் தரக்கூடிய சம அளவுச் சத்து உணவுத் (மரக்கறி உணவு) திட்டம் பற்றிக் கூறப் பட் டிருக்கிறது. தலைக்கு வருஷமொன்றுக்கு இருபத்து ஐந்து கெஜ நீளத் துணிக்குத் தேவையான பருத்திச் சாகுபடிக்கும் இதில் வழி இருக்கிறது. புலால் உண்பவர் 6 அவுன்சு பாலிற்குப் பதில் 4 அவுன்சு மாமிசம் அல்லது மீன், ஒரு முட்டை—இவற்றை உண்ணலாம்.

உணவு, கால்நடைத் தீவனம் இவற்றோடு கிராமக் கைத்தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருள்களேயும் நாம் உற்பத்தி செய்ய வேண்டும். உதாரணமாகக் கெட்டியான பட்டை கொண்ட கரும்பும், நீண்ட வகைப் பருத்தியும் ஆலை உபயோகத்திற்கே ஏற்றவை. கிராமத்தில் கை யச்சில் பிழிந்து வெல்லம் செய்வதற்கு மெல்லிய பட்டை யுள்ள கரும்புதான் சரி. அதையும், கையால் நூற்பதற்கு ஏற்ற குட்டை ரகப் பருத்தியையும் நாம் பயிர் செய்ய வேண்டும். அதிகப்படி உள்ள நிலத்தை, சுற்றியுள்ள ஜில்லாக்களுக்குத் தேவையான பயிர்களைச் சாகுபடி செய்ய, உபயோகித்துக் கொள்ளலாம். கரும்பு, ஆலைப் புகையிலை, சணல், இதர வியாபாரப் பயிர்கள்—இவை சாகுபடி யாகும் நிலத்தின் விஸ்தீரணத்தைக் குறைந்த பட்ச அளவுக்குக் குறைத்தாக வேண்டும். கூடுமானல், அந்தப் பழக்கத்தையே விட்டு விடுவது நல்லது.

விவசாய விளைபொருள்களுக்குள்ளேயும், யந்திரக் கைத்தொழில் பொருள்களுக் கெதிராகவும் அவற்றின் விலையைத் தீர்மானிப்பதற்குப் பயிர் வகைகளுக்கு ஏற்ப மாறுபடும் நிலவரிகள் முதலிய ஏற்பாடுகள் இருக்க வேண்டும்.

புகையிலை, சணல், கரும்பு முதலிய வியாபாரப் பயிர்களால் இரு வகையில் நஷ்டம் ஏற்படு

கிறது. அவைகளால் மனிதனுக்கு வேண்டிய உணவு உற்பத்தி குறைகிறது. அதோடு மிருகங்களுக்குத் தேவையான தீவனமும் இல்லாது போய் விடுகிறது.

தான்யம், பால் போன்ற பிரதானப் பொருள்களிலிருந்து மாவுச்சத்து, கேஸின்—இவற்றைத் தயாரிப்பதைத் தடுக்க வேண்டும்.

சுய தேவைப் பூர்த்தி என்ற நோக்கத்தோடு, சமனமுறைச் சாகுபடிப் பிரச்சினையில் மனப்பூர்வமாக ஈடுபட்டாலொழிய, உணவு, துணிப் பஞ்சத்தைத் தீர்ப்பதென்பது சாத்தியமேயல்ல.

சரியானபடி திட்டமிட்டு வேலை செய்வதில் இதை முதற்படியாகக் கொள்ளலாம். இதிலிருந்து, பொது நன்மைச் சாதனங்கள், கேந்திரக் கைத்தொழில்கள், யந்திர சாதன உற்பத்தி-என்று படிப்படியாக ஒவ்வொன்றையும் எடுத்துக் கொள்ளலாம். கடைசியாகச் சொன்ன விஷயத்தை செயலில் மேற்கொள்ளும்போது, ஆரம்ப நிலையிலிருந்தே நாம் தொடங்க வேண்டும்.

✲

எமகாதகன்!

ஜெர்மன் துப்பறியும் போலீஸ் ஒருசமயம் மூன்று குடியானவர்களுடைய வீடுகளைச் சோதனை போட்டார்கள். முதல் குடியானவனைப் பின்வரும் கேள்வி கேட்டார்கள். "உன் வாத்துகளுக்கு என்ன ஆகாரம் போடுகிறாய்?"

"அரிசி" என்று பதில் வந்தது.

"அரிசியை ஜனங்கள் உபயோகிக்கிறார்கள். ஆகையால் உன்னைக் கைது செய்கிறோம்"

இரண்டாவது குடியானவனைக் கேட்டபொழுது, அவன் சாமர்த்தியமாக, "சோளம் போடுகிறேன்" என்றான்.

"சோளமும் ஜனங்கள் உபயோகத்துக்குத் தான்" என்று கூறி அவனையும் கைது செய்தார்கள்.

மூன்றாவது குடியானவன் இன்னும் கெட்டிக்காரன். அவன் சொன்னான்: "என் வாத்துகளுக்கு நான் காசாகக் கொடுத்துவிடுகிறேன். அவைகள் தங்களுக்கு எது இஷ்டமோ அதை வாங்கிச் சாப்பிடுகின்றன."

தீராத் தலைவலி!

கலியாணம், ஜலதோஷம்—இவை யிரண்டும் மனித குலத்தின் நிரந்தரமான பிரச்சினைகளாகும். இவற்றிற்கு இதுவரை வழியேதும் கண்டுபிடிக்கப் பெறவில்லை.

—சின்க்லேர் லூயிஸ்

வீணுக்காதீர்கள்!

மு. அருணசலம்

லட்சம் லட்சமான டன் கணக்கில் உணவுப் பொருளை வீணுக்கின இந்தக் காலத்தில், 'அன்னத்தை வீணுக்காதே' என்று உபதேசிக்கிற இந்த உபநிஷத் மந்திரம் மிக்க பொருளுடையது. எத்தனையோ ஆயிர மாயிரம் ஆண்டுகளுக்குமுன் நம் முன்னேர் செய்த இந்த உபதேசம், அன்னத்தை வீண் விரயம் செய்துவரும் அரசாங்கத்தாரை நோக்கி இன்று கூறியதுபோல் அமைந்திருப்பது உணர்ந்து வியக்கத் தக்கது.

அரசாங்கத்தார் மட்டுமன்றி, பல்வேறு துறைகளிலு முள்ள எல்லாவகை மக்களும் இவ்வுபதேசத்தைக் கடைபிடித் தொழுகல் பெரும் பயன் தருவதாகும். சிறப்பாக இரண்டு துறைகளை இங்கு சுட்டிக் காட்டலா மென்று தோன்றுகிறது. ஒன்று, மாணுக்கர் விடுதிகள்; மற்றென்று, தரும ஸ்தாபனங்கள்.

பொதுவாக மாணுக்கர் விடுதிகளில், தட்டுகளிலும் இலையிலுமாக வீணே தூக்கிக் குப்பையிலெறிகிற சோற்று வகைக்கு எல்லையே இல்லை. தமிழ் நாட்டில் மாணுக்கர் விடுதிகளுக்கு மேற்பார்வை யதிகாரி ஒருவர் (வார்டன்) இருப்பார். பெரும்பான்மையும் இவர் பள்ளிக்கூட ஆசிரியராகவும் அவரையொத்த தகுதி யுடையவராகவுமே இருப்பார். சில விடுதிகளில், இந்த வார்டன்கள் சாப்பிட்ட மிச்சமே பையன்களுக்குக் கிடைக்கிறது. அங்கே, பையன்களுக்குப் பசி தணிக்கப் போதுமான உணவு கிடைப்பதே அருமையாகையால் உணவை வீணுக்குவது என்ற பேச்சு எழுவதற்கே இடமிராது. ஆனல், பெரும்பாலான விடுதிகள் இந்த நிலைமையில் இல்லை. விடுதி நடப்பது மாணுக்கரை உத்தேசித்தே என்று கருதும் வார்டன்களும் இருக்கிருர்கள். இங்கெல்லாம், பிள்ளைகளுக்குத் திருப்தியான உணவு கிடைக்கிறது. ஆனல், உணவின் அருமையைப் பிள்ளைகள் உணரவில்லை. உணராமையால், தட்டிலும் இலையிலுமாக, சோற்றையும் காய்கறி பலகார வகைகளையும் அதிகமாக மிச்சம் வைத்து எறிந்து விடுகிருர்கள். இவ்வளவும் குப்பை மேட்டுக்குப் போகிறது. விடுதிகளில் வந்து இருந்து சாப்பிட்டுப் படிக்கும் பிள்ளைகள் ஓரளவேனும் செல்வரா யுள்ளோர் வீட்டுப் பிள்ளைகளே. இலையில் போட்ட அவ்வளவும் சாப்பிடுவது, ஏழைக்கு அடையாளம், பாதி மிச்சம் எறிவது செல்வருக்கு லட்சணம் என்ற தத்துவத்தில் இவர்கள் வளர்ந்தார்கள் என்று கூறுவது மிகையாகாது.

உணவை வீணுக்குவதென்பது புதிதாய் விடுதியில் பழகிக்கொள்ளும் பழக்கமன்று. பத்துப்

மு. அருணசலம் எழுதிய உணவுப் பஞ்சம் என்ற புத்தகத்தில் இது ஒரு பகுதி. 'உணவுப் பஞ்சம்' என்ற நூல் சக்தி வெளியீடு: பக்கம் 128. விலை ரூ. 1-8-0.

பிள்ளைகள் சோற்றை வீணே எறிகிற வழக்க முடைவர்களா யிருந்தால் அவர்களிடையே சாப் பிடுகிற பையன் தானும் அவ்வி தமே எறியப் பழகிவிடுகிறன். எனவே, இது ஓரளவு பழக்கத் தாலும் வருவதாகும். சமூகத்தி லும் வீட்டிலும் உள்ள ஒரு தப் பான பழக்கமே இதற்குக் காரணமாகும். நண்பரொருவர் வீட்டில் விருந்து சாப்பிடுகிறேம் என்று வைத்துக் கொள்வோம். நாலைந்து பேர் சாப்பிடுகிறேம். படைத்த சாதமும் கறி வகை களும் பிடித்தனவா யிருக்கின் றன. இருந்தும், இலையில் கொஞ் சம் கொஞ்சம் மிச்சம் வைத்து விட்டு எழுந்திருக்கும் வழக்கம் நம்மிடையில் இன்று உள்ளது. ஏன்? படைத்த அவ்வளவையும் சாப்பிட்டுவிட்டால், நம்மைப் பிறர் சாப்பாட்டு ராமன் என்று எண்ணி விடுவார்கள் என்ற பயம். பாதி சாப்பிட்டுப் பாதி சாப்பிடாது எறிந்து விட்டால் தான் நமக்குக் கௌரவம் என்ற ஒரு போலி நினைப்பு இது காரண மாகத்தான், உணவை இலையில் மீதிவைத்து எறிந்து விடுகிற தீய வழக்கம் வளர்ந்து வந்திருக் கிறது.

'மாப்பிள்ளை முறுக்கு' என்ற ஒரு கெட்ட சம்பிரதாயம் இதற்கு மூல காரணம் என்று கூறலாம். மாப்பிள்ளையா யிருப் பவன் அதிக முறுக்கா யிருப் பான் என்று மாமனர் வீட்டில் எதிர்பார்ப்பார்களாம். முறுக் காக நடந்து கொண்டால்தான் அவனுக்கும் கௌரவமாம். முறுக்கை வேறெதிலும் காட்ட முடியாது. சாப்பாடு ஒன்றில் தான் காட்டலாம். ஆகவே, மாப் பிள்ளையா யிருப்பவர்கள், இந்த முறுக்கைக் காட்டத் தவறுவ தில்லை. தனக்குச் சாப்பாடு பிடிக்கவில்லை என்று காட்டிக் கொள்வதிலும், தனக்குச் சாப் பாடு இறங்கவில்லை என்று காட் டிக் கொள்வதிலும், தனியான ஒரு பெருமை. இதற்காக, மாப் பிள்ளைகளில் சிலர் மாமனர் வீட் டில் விருந்துச் சாப்பாட்டுக்குப் போவதென்றல், வழியில் ஒரு சிற்றுண்டிச் சாலையில் புகுந்து, முக்கால் வயிறு நிறையும்படி சாப்பிட்டு விட்டுச் செல்வார்கள். வேறு சில மாப்பிள்ளைகள், அவ் விருந்தில் அரை வயிறு மட்டும் சாப்பிட்டுப் பின் நேரே வந்து ஒரு சிற்றுண்டிச் சாலையில் புகுந்து குறை வயிற்றை நிரப்பிக் கொள்வதும் உண்டு. ஒரு மாப் பிள்ளை, இதேபோல் கௌரவத் துக்காக, இலையில் பலகாரம் படைத்தபோது வேண்டா மென்று சொல்லி மறுத்துவிட்டு, பின் நடுராத்திரியில், பசிபொறுக் காமலும், பலகார வாசனையால் கவரப்பட்டும், அடுக்களைக்குச் சென்று தாழ்வாரத்தி விருந்த உரலில் இடித்த பலகாரத்தை நாவால் நக்கத் தலையைவிட்டுத் தலை எடுக்க முடியாமல் தவித் தான் என்ற நாடோடிக் கதையை நாம் அறிவோம்.

இப்படிப்பட்ட போலி மாப் பிள்ளை முறுக்கால் விளைந்த தப் பான சமூகப் பழக்கந்தான் உண வுப் பண்டத்தை எறிவதென்பது. போன தலைமுறையி லிருந்த பெரி யவர்கள் உணவுப் பஞ்சத்தை அறியாதவர்கள். ஏனென்றல் அவர்கள் உணவை ஒருபோதும் வீணாக்கிய தில்லை; இலையில் போட்டு எறிவதில்லை. 'அன்ன லட்சுமி; இதை எறியக்கூடாது' என்பது அவர்கள் விரதம். மற்ற வர்கள் யாரேனும் எறிவதா யிருந்தாலும், பெரியவர்களாயுள்

ளோர் கூடவே உட்கார்ந்திருந்து ஆற அமரச் சாப்பிடச் செய்து, எறியாதபடி காப்பார்கள். உணவினிடத்தில் அவர்களுக்கு விசேஷமான பக்தி யிருந்ததென்ருல், மிகையன்று.

இந்த பக்தி இன்று குறைந்து போனதற்கு முக்கியக் காரணம், போலி உபசாரம். அளவுக்கு மிஞ்சிச் சாப்பிடும்படி உபத்திரவம் பண்ணுவதே, அன்பு காட்டுவதற்கு அடையாளம் என்று பலர் தப்பாக எண்ணுகிருர்கள். ஒரு வடை சாப்பிடக் கூடியவருக்கு நாலு வடை போட்டால்தான் அன்பு வெளிப்படுகிறது என்று எண்ணுவோரே நம்மில் அதிகம் பேர். இலையில் உட்கார்ந்தவர், இரண்டை யேனும் எறியாமல் 'என்ன செய்வார்! என் ஆயுளில் இதுவரையில் இலையில் எதையும் நான் எறிந்தது கிடையாது. இன்றுதான் முதல் முதலாக உங்கள் வீட்டில் எறியும்படி நேர்கிறது' என்று சிலர் சொல்வதை நாம் கேட்டிருக்கிருேம். காரணம், வேண்டாம் வேண்டாம் என்று சொல்லியும் கேளாமல் அளவுக்கு மிஞ்சிப் படைப்பது தான்.

ஆகவே, சமூகத்தில் இப்படி உணவு விஷயத்தில் மிதமிஞ்சி உபசாரம் செய்வதை விட்டுவிட வேண்டும். சாப்பிடுபவர்களும், அன்னத்தை எறிவது மகா பாதகம் என்பதை உணர்வதோடு அன்னத்தை எறிவதால் கௌரவம் உயராது என்பதையும் அறிய வேண்டும். சமூகத்தில் இப்படிப்பட்ட மாறுதல் ஏற்படுமானல், செல்வர் வீடுகளிலுங் கூடச் சாப்பாட்டை இலையில் எறிகிற நாகரிகம் இடம் பெருது. இந்த நாகரிகம் பின்னர் மாணக்கர் விடுதிகளிலும் தலைகாட்டாது. இவ்விஷயத்தில் பெரியோர், தாங்களே செய்து காட்டவேண்டும். அன்னத்தை நிந்தித்ததனலும், அன்னத்தை எறிந்ததனலுமே நாம் இன்று இந்த நிலைக்கு வந்திருக்கிருேம். ஆகவே, பெரியோர்கள் இங்கே கூறியவற்றின் உண்மையை உணர்ந்து, நடப்பார்களானல், பிள்ளைகள் அந்நடையை அப்படியே எளிதில் பின்பற்றுவார்கள். அன்றியும் பிள்ளைகளிடத்திலும் மாணக்கர்களிடத்திலும் இது பற்றி விரிவான பிரசாரம் செய்வது அவசியம். 'நாலு பிள்ளைகள் வீணுக்குவது ஐந்தாவது பிள்ளைக்குப் போதுமான உணவாகும். வங்காளத்தில் இப்படி முப்பத்தைந்து லட்சம் மக்களும் குழந்தைகளும் சோறு கிடைக்காமல் செத்திருக்க, நீங்கள் இப்படி வீணுக்கலாமா' என்று பக்குவமாக மனத்தில் படும்படி எடுத்துச் சொன்னல், இதைக் குழந்தைகள் நன்ருய் உணரும். குழந்தைகளின் வெள்ளை யுள்ளத்தில் இப்படிப்பட்ட நல்ல விஷயங்கள் படிந்தால், சிறந்த பலன் விளையுமென்று எதிர்பார்க்கலாம். எனவே, உபநிஷத மந்திரத்தை மறவாமல்,

> அன்னம் ந நிந்த்யாத், தத் வ்ரதம்—
> அன்னம் ந பரிசக்ஷீத, தத் வ்ரதம்—

என்ற சொற்களையே மாணக்கர் விடுதிகளுக்கு ஏற்ற உயர்ந்த குறிக்கோளாகக் கொண்டால், உணவாகச் சமைத்து வீண் போவதில் பாதியாவது மிஞ்சும். இந்தப் பஞ்ச காலத்தில் இது எவ்வளவோ பயனுடையது என்பதைச் சொல்லவேண்டிய தில்லை.

இனி இரண்டாவது, தரும ஸ்தாபனங்களின் விஷயம். கோயில், மடம், சத்திரம் இவற்றில் அன்ன தானத்துக்கு நம் நாட்டில் எவ்

வளவோ ஏற்பாடு செய்யப்பெற்றிருக்கிறது. இந்த ஏற்பாடுகள் இன்று எவ்வளவு சீர்கெட்டிருக்கின்றன. எவ்வளவு வீண் விரயம் ஆகிறது என்பன எல்லோருக்கும் தெரியும். கோயில்களில் வௌவால்கள் குடியிருப்பது போல, மேற்சொன்னவற்றின் நிர்வாகத்தில் 'பெருச்சாளிகள்' புகுந்து சாப்பிட்டு ஏப்பம் விடுகின்றன. ஊழலும் விரயமும் கணக்கில்லை. சமூகத்திலுள்ள சீர்கேடுதான் கோயிலிலும், மடத்திலும், சத்திரத்திலும் பிரதிபலிக்கிறதே யொழிய, இவற்றுக்கென்று தனியாக ஒரு சீர்கேடு வந்துவிடவில்லை. சமூகம் விழிப்படையுமானால்தான், இவைகளும் முன்னேற்றமடையும்; ஊழலும் விரயமும் நீங்கும்.

தரும ஸ்தாபனங்களிலாகட்டும், வீடுகளிலாகட்டும், சில சமயம் விருந்து அல்லது ஆடம்பரச் சமையலானது வீண் விரயத்துக்கே இடமாயிருக்கிறது. பச்சடி ஆறுவகை, பொரியல் அஞ்சு வகை, வறுவல் நான்கு வகை என்று கணக்கு விரிவாய்ப் போய்க்கொண்டிருக்கிறது. பல வகைக் கறிகளைச் சமைப்பதும், அவற்றை இலையில் அழகுபெறப் படைப்பதும் தமிழ் மக்களிடம் ஒப்பற்ற அருங்கலையாக வளர்ந்து வந்திருக்கிறது. எத்தனையோ ஆயிரம் வருஷங்களாகத் தமிழகத்தில் ஊன்றி வளர்ந்த பண்பாட்டிலிருந்து விளைந்ததே இச் சமையற் கலை. ஆனால், கால நிலையை உத்தேசித்து, இக் கலையின் பிரகாசத்தைச் சிறிது மட்டப்படுத்திக்கொண்டால் நல்லது. உலகத்தில் மக்களுடைய ருசி பல விதம். எல்லோருக்கும் எல்லா ருசியும் வேண்டியிரா, பிடிக்கவும் பிடிக்கா. ஆதலால் பல வேறு ருசியுடைய கறிவகைகளை மிதமாகச் சமைத்துப் படைத்தால், அவரவருக்கு வேண்டாதன சில இருக்கவே இருக்கும். இவற்றை விலக்கி மற்றவற்றையே அவரவர் உண்ணமுடியும். இப்படி எல்லோரும் சிறிது சிறிது ஒதுக்கிவிடுவதால், மொத்தத்தில் வீணாவது அளவு கடந்து போய்விடும். ஆகவே, முக்கியமாக விருந்துகளில், அதிகப்படியான கறிவகைகள் செய்வதில்லை என்ற விரதம் இப்போது வேண்டும். உணவுப் பஞ்சத்தை மனத்திலிருத்தி, மூன்று கறிவகைகளுக்குமேல் விருந்தில் சமைப்பதில்லை என்று வரையறைசெய்து கொள்ளலாம். பருப்பு, சாம்பார், ரசம், மோர்-என்ற நாலு பிரிவுகளுக்குமேல் இடம் வைக்கவும் வேண்டியதில்லை. வடை, பாயசம் என்று ஏற்பட்டால், இந்நான்கு பிரிவில் ஒன்றையேனும், கறிகளில் இரண்டையேனும் குறைக்க வேண்டும். மோர்க் குழம்பு அல்லது வற்றல் குழம்பு வைத்தால், சாம்பாரை நிறுத்திவிட வேண்டும். இப்படியாக நாமாகவே சாப்பாட்டைக் கட்டுப் படுத்திக் கொண்டால் மிகவும் நல்லது.

✻

பட்டினி விரதம்

நம்மவர்கள் அனைவரும், சமயச் சடங்காகவோ, உடல்நலத்தைக் கருதியோ, மாதமொரு நாள் முழுப் பட்டினி இருப்பார்களானால் பெரும் பயனுண்டு. மாதக் கார்த்திகை அல்லது ஏகாதசிகளில் பட்டினி இருப்பது பிலர் வழக்கம். எல்லோரும் இந்த வழக்கத்தை மேற்கொண்டால், உணவு முப்பதிலொரு பங்கு மிச்சமாகிறது! பஞ்சத்தில் பெரும் பகுதியை இது குறைக்க உதவும்.

—மு. அருணாசலம்

குழந்தைகளுக்கு
முக்கியமானது
பேபி கிரைப்
குழந்தைக்கு
ஆரோக்கியமளிப்பது
BABYGRIPE
குழந்தைகளுக்கு உண்டாகும் வாயு, வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, அஜீரணம், மாந்தம், பல் முளைக்கும் போது ஏற்படும் வயிற்றுப்போக்கு, முதலிய சகல வியாதிகளையும் போக்கி நல்ல ஆரோக்கியத்தையும் தரும் சிறந்த திராவகம்
தயாரிப்பவர்கள்:
தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி
மதுரை

சைபால்
CIBOL
சைபால்
for
RING
WORM
SOUTH INDIAN
முகப்பரு, சேத்துப் புண், சிரங்கு, வேனல் கட்டி, தீப் பட்ட புண், கரப்பான் முதலிய வைகளுக்குக் கை கண்ட மருந்து
தயாரிப்பவர்கள்:
தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி, மதுரை

அய்யர் புரொடெக்ஷன்ஸ்
அண்டு
நேஷனல் ஸ்டுடியோஸ்
லிமிடெட்
ஜி.என்.பி. ◦ யோகமங்களம்
P.A.பெரியநாயகி ◦ L.நாராயண ராவ்
C.T.ராஜகாந்தம் ◦ ராஜாமணி நடித்த
ருக்மாங்கதன்
(தமிழ்)
ஜூலை வெளியீடு
டைரக்ஷன்: P.S.V.அய்யர்
பாட்டு: சிவன்
பாட்டு டைரக்டர்: ராமநாதன்
நடன டைரக்டர்: மாதவன்
ஸ்டுடியோ: ஜெமினி
விவரங்களுக்கு: அய்யர் புரொடெக்ஷன்ஸ் அ. நேஷனல் ஸ்டுடியோஸ் லிமிடெட்
119, அரண்மனைக்கார தெரு, மதராஸ்-1.

P.A.R.

பி. எ. ராஜு செட்டியார் & பிரதர்

வைரம், நகை வியாபாரம், கோயமுத்தூர்.

எம். கே. கிருஷ்ண செட்டி

அசோகா பாக்டரி - கோயமுத்தூர்

நிர்வாக ஆசிரியர்: வை. கோவிந்தன் ஆசிரியர்: சுப. நாராயணன்

Printed and Published by Vai. Govindan at the Shakti Press Ltd., (Shanti Press), 115-E, Mowbrays Road, Royapettah, Madras